விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 28 சனிக்கிழமை (11.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 054

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO 100
SLS 107 தரம் கொண்டதும் வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு பாகிஸ்தான் அரசு உதவ வேண்டும்

## அந்நாட்டு பத்திரிகை வலியுறுத்தல்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நீதி கிடைப்பதற்கு பாகிஸ்தான் குறுக்கே நிற்கக் கூடாது என பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டோன் நாளேடு தெரிவித்துள்ளது. இலங்கையில் போர்க் குற்றங்கள் என தலைப்பில் மேற்படி பத்திரிகையில்,நேற்று இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. கொழும்பிலும் ஈரானிலும் பிபிசியின் முகவராக பணியாற்றிய பிரான்சிஸ் ஹரிசன் இந்தக் கருத்தை எழுதியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு-மாலைதீவு பயணிகள் விமானம் ரத்து

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மாலைதீவுக்கு செல்லவிருந்த இரண்டு பயணிகள் விமானங்கள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணியளவில் செல்லவிருந்த யூ.எல் - 107 விமானமும், இன்று சனிக்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் செல்லவிருந்த யூ.எல் - 105 ஆகிய இரண்டு பயணிகள் விமானங்களுமே இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மெஹமட் நஷிட் மருத்துவச் சிகிச்சைக்காக இலங்கைக்கு வரலாம் என கட்டுநாயக்க விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# அமெரிக்காவுக்கு தகவல் வழங்கிய மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க!

## விக்கி லீக்ஸ் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரச நிர்வாகத்தின் இரகசிய தகவல்களை வழங்கும் உளவாளியாக சிரேஷ்ட மேஜர் ஜெனரல் ஒருவர் அமெரிக்காவிற்கு தகவல் வழங்கியதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் இராணுவப் பேச்சாளரும், இராணுவ ஊடகப் பிரிவின் பணியாளருமான மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க சில முக்கியமான தகவல்களை அமெரிக்காவிற்கு வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரதான சமிக்ஞை அதிகாரியாகவும், பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி மற்றும் ஆய்வு பிரிவின் பொறுப்பதிகாரியாகவும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மூன்று படையணிகளின் கட்டளைத் தளபதியாகவும் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க கடமையாற்றியுள்ளார்.


அரசியல் கடத்தல்கள் மற்றும் கப்பம் கோரல்கள் என்ற தலைப்பில் இந்த குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் ராஜபக்ஷ நிர்வாகத்தின் இரகசிய தகவல்களை வழங்கும் உளவாளியாக பிரசாத் சமரசிங்க கடமையாற்றினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் ஜேம்ஸ் டி.மூர் என்ற அதிகாரியினால் இந்த குறிப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் (24ஆம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தானில் ஜனாதிபதி மகிந்த...



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# வாடகைக்கு அமர்த்திச் சென்று ஆட்டோவைக் கடத்திய கும்பல்

## கல்லுண்டாய் வெளியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வாடகைக்கு அமர்த்திய ஆட்டோவை ஆட்களில்லாத இடத்துக்கு அழைத்துச் சென்று சாரதியை சரமாரியாகத் தாக்கிவிட்டு அவ் ஆட்டோவை மூவர் அடங்கிய குழு கடத்திச் சென்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு காக்கைதீவு கல்லுண்டாய் வெளிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஆறுகால்மடத்திலுள்ள ஆட்டோ தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவை நபர் ஒருவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றுள்ளார். சிறிது தூரம் சென்றதும் ஆட்டோவினை நிறுத்துமாறு கூறி இன்னொருவரையும் ஆட்டோவினுள் ஏற்றியுள்ளார்.

குறித்த இருவரும் தாம் காக்கைதீவு கல்லுண்டாய் ஊடாக செல்ல வேண்டும் எனக் கூறி, கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கு ஆட்டோவினை திருப்புமாறு கூறியுள்ளனர்.

இந்நிலையில் பிரஸ்தாப நபர்கள் தொடர்பில் ஆட்டோ சாரதிக்கு சந்தேகம் வரவே ஆட்டோவினைத் திருப்புவதற்கு மறுத்துள்ளார்.

எனினும் இருவரும் சாரதியை பயமுறுத்தி தாங்கள் கூறும் இடத்திற்கு செல்லுமாறு பணித்துள்ளனர்.

அவ்வாறே கல்லுண்டாய் வெளியிலுள்ள வைரவர் (24ஆம் பக்கம் பார்க்க)

# இன்னர் சிற்றி பிரஸின் மீது சவேந்திர சில்வாவுக்கு கோபம்

(கொழும்பு)

இன்னர் சிற்றி பிரஸ் மீது மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கடும் கோபத்தில் இருப்பதாக அதன் ஊடகவியலாளர் மத்யூ ரசல்லிடம் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித்த ஹோகன தெரிவித்துள்ளார்.

நீங்கள் எப்போதும் அவரை போர்க் குற்றவாளி எனக் குறிப்பிட்டு குற்றம் சுமத்துவதாலேயே சவேந்திர சில்வா கோபத்தில் இருப்பதாக பாலித்த ஹோகன இன்னர் சிற்றி பிரஸின் ஊடகவியலாளர் மத்யூ ரசலிடம் கூறியுள்ளார்.

ஈரானின் தேசிய தினத்தை முன்னிட்டு நியூயோர்க் மிலேனியம் விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட இரவு விருந்துபசார நிகழ்விலேயே இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர் மத்யூ ரசலிடம் பாலித்த ஹோகன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர் மத்யூ ரசல் அவருடன் உரையாடிய போது நீங்கள் எப்போதும் எனக்கு எதிராகவே எழுதுகிறீர்கள் என மேஜர் ஜெனரல் சவேந் திர சில்வா கோபத்துடன் கூறியுள்ளார்.

இத்துடன் ஐக்கிய நாடுகள் சபையின். செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தனது படைப் பிரிவுக்கு எதிராகவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக (24ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க பிரஜை மீது தாக்குதல்

(கொழும்பு)

அமெரிக்கப் பிரஜையொருவரையும் அவரின் சாரதியையும் தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்ட தனியார் பஸ் சாரதி ஒருவரை பெப்ரவரி 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு தம்புள்ள நீதவான் சரத் மொரவக்க நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு-பொலனறுவை வழித்தடத்தில் இயங்கும் தனியார் பஸ் ஒன்றின் சாரதியான எம்.எம்.சமிந்த உதயசம்பத் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவார்.

சிகிரியா நோக்கி சென்று கொண்டிருந்த வாகனமொன்றுடன் இச்சந்தேக நபர் செலுத்திக்கொண்டிருந்த பஸ் மோதியது. அதையடுத்து மேற்படி (24ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகளை செயற்படுத்த அமைச்சர்கள் குழு அமைப்பு

(கொழும்பு)

மனித உரிமை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைச் செயற்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் நோக்கில் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பசில் ராஜபக்ஷ, மகிந்த சமரசிங்க மற்றும் டிலான் பெரேரா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மனித உரிமைச் செயற்திட்டம் தொடர்பான யோசனைத் திட்டம் கடந்த செப்ரெம்பர் மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த உப குழுவின் நடவடிக்கைகளுக்கு முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் உதவிகளை வழங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# மாலைதீவு தூதரகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு, பம்பலப்பிட்டி, மெர்போர்ன் அவெனியூவிலுள்ள மாலைதீவு தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ள இந்த ஆர்ப்பாட்டம் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீத்திற்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதவி விலகிய மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீத்தின் குடும்பம் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள நிலையில் மாலைதீவு மற்றும் இலங்கைப் பிரஜைகளால் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்டிட திறப்பு விழா

(அல்லாரை)

அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையத் தலைவர் க.தம்பு தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் பொலிஸ் நிலைய அதிகாரி வை.எம்.ஜகத்பண்டார, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ-11)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வெளிநாட்டில் குடியுரிமையுள்ள, மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
nicetalk2012@yahoo.com
T.P:0016475322773.

(7381)



## வர்த்தகப் பெருமக்களே வியாபாரத்தை பதிவு செய்தல்

**BUSINESS REGISTRATION**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**VTL Management Services (Pvt) Ltd**

No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-8994777/011-7902938/ 011-4343338


# பரந்தளவு சிந்தனைகள் மாணவர்களிடம் வளரவேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

உலகைவெல்லும்விளையாட்டுசக்திக் குழாம் என பெயரிடப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது.

கிராமிய மற்றும் பாடசாலை மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு பயிற்சியளிக்கும் செயற்றிட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

17 விளையாட்டுப் போட்டிகளின் அடிப்படை கிராமிய மற்றும் பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 200 விளையாட்டு வீர வீராங்கனைகள் இந்தக் குழுவில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுவிழாவை நடத்துவதற்கானவாய்ப்பைபெற்றுக்கொள்ள முடியாமல் போனாலும் அதில் பங்கேற்று வெற்றிபெறுவது தாய் நாட்டுக்கு செலுத்தும் கௌரவமாகும்.

அத்துடன் சார்க் மற்றும் பொதுநலவாய விளையாட்டு விழா அல்லது ஒலிம்பிக் போன்ற அனைத்து விளையாட்டு விழாக்களிலும் பங்கேற்பதற்கான தகைமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்ஒவ்வொருபோட்டிநிகழ்ச்சிக்காகவும் தலா 30 வீர வீராங்கனைகள் வீதம் இக்குழாமிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன்பங்குகொண்டவிளையாட்டு வீரர்களுக்குஜனாதிபதிநினைவுப் பரிசில்களை வழங்கி வைத்தார். (எ-11)

# 2.6 மில். பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு மாலிகாவத்தை பிரதேச வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான கோல்ட் லீப் வகை சிகரெட்டுக்களை கோட்டைப் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

6 ஆயிரத்து 100 பைக்கற்றுக்களில் ஒரு இலட்சத்து 21 ஆயிரம் சிகரெட்டுக்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சந்தே நபர்கள் கொலன்னாவை வசிப்பிடமாக கொண்டவர்கள் எனவும் வியாபாரிகள் பலருக்கு இச்சிகரெட்டுகளை விற்பனை செய்ய முயன்ற போது இவர்கள் சிக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# சமுர்த்தி நிவாரணத்துக்கு மேலும் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சமுர்த்திநிவாரணஉதவித்தொகை வழங்குவதற்காக இம்முறை மேலதிகமாக 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவின் வாய் மூல கேள்விக்கு பதில் அளித்துப் பேசும் போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் 15 இலட்சத்து 74 ஆயிரத்து 675 பேர் சமுர்த்திநிவாரணம் பெற்றுவருவதாகவும் இவர்களுக்கு 2 மாத காலமாக சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும் மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கு பதிலளித்த பிரதியமைச்சர், நாம் மூன்று மாதங்களுக்குமான கொடுப்பனவை மார்ச் மாதம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அத்துடன் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டது போன்று கொடுப்பனவு தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்காக மேலதிகமாக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத்துடனான நியமனம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (எ-11)

# அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக சமூக விஞ்ஞானத்தில் கலைமாணிப்பட்டக் கற்கை நிகழ்ச்சித்திட்டம் 2011/2012 அங்குரார்ப்பண நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-11)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரதேச மலர் வெளியீடு தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணியில் அமைந்துள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ளவர்களை கலந்து கொண்டு தகுந்த ஆலோசனை வழங்கி உதவுமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் அறிவித்துள்ளார். (எ-3,29)


## திசைகாட்டி யாழ், கிளிநொச்சி கிளைகளில் ஆளணி வெற்றிடங்கள்

### பகுதிநேர விசா ஆலோசகர்கள்



- வயதெல்லை 21-65 வரை (இருபாலாரும்)
- நற்சாட்சிப்பத்திரம் மிகவும் அவசியம்
- வேதனம் :- கணிசமான உதவு தொகை
- கடும் முயற்சியாளர்கள் இலவசமாக அவுஸ்திரேலியா செல்லும் வாய்ப்பு

நேர்முகத்தேர்வு (12.02.2012) மு.ப. 11.00 மணிக்கு தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறும்.

அரசாங்க, தனியார்துறை முன்னாள், இன்னாள் உத்தியோகத்தர்களும் பங்கு கொள்ளலாம்

தலைமைக்காரியாலயம், 37 சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம், 021 221 9016, கிளைகள்: 115, ஏ இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி, 0214914527, மெல்போர்ண் - அவுஸ்திரேலியா 0061412479209

பொது முகாமையாளர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.



'கற்க கற்பவை கற்க ; கற்பவை கசடறக் கற்க'

# YAALH ENGLISH ACADEMY

நிறுவுநர் + ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

இலவசம் முதலிரு வகுப்புக்கள்

## பிரயோகமுறை மொழிக் கல்வி
## 'LANGUAGE IN ACTION'

மூன்று மாதப் பயிற்சி / முழுக்கட்டணம் : 1500 ரூபாய்/ தொடர்பு:-0773212 711

வகுப்பு நேரம்:- பிற்பகல் 3.00-5.00 - சனி+ஞாயிறு

✷உத்தியோகத்தர்க்கு ✷உயர்கல்வி மாணவர்க்கு ✷A/L படித்தவர்க்கு
✷ தாய்மார்க்கு (உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெருநன்மை)
✷A/L மாணவர்க்கு ✷O/L மாணவர்க்கு ✷10 ஆம் வகுப்பு மாணவர்க்கு
(தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்)

✷ 'சிந்திப்பதற்கும்/ கருத்துப்பரிவர்த்தனைக்கும் (LISTENING with comprehension + SPEAK-ING fluently + READING with comprehension + WRITING effectively) ஆங்கில மொழியைத் தவறின்றியும், தன்னம்பிக்கையுடனும், இலாவகமாகவும் மாணவர் கையாள வேண்டும்' என்பது எமது நோக்கம்.

✷ எமது நோக்கம் வெற்றி பெறும் விதமாக-மாணவரையும் அவர்களுடைய மொழி உபயோகத் தேவைகளையும் மையப்படுத்திய தீவிர பயிற்சிகளுடன், எமது கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

✷ What goes on inside our student -friendly class room , is about 70% active , enthusi-gstic Learning process + 30% student -centred Teaching Process

✷ True ease in effective use of language (comes from proper foundation plus practice, not chance As they walk with grace).Who have learned to dance!

✷ எமது மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் தமது வகுப்பறைக் கற்கையில் ஈடுபட்டுப் பயன்பெறுவதனை -ஆசிரியர்மார், பிறகல்வித்துறையினர், மொழி ஆர்வலர், ஊடகத்துறையினர், பெற்றோர், மாணவர் ஆகியோர் எமது வகுப்புக்களுக்கு வருகை தந்து அவதானிக்குமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

இதன் மூலம் எமது கல்வி நிறுவனம் பரந்த அளவில் ஆங்கில மொழிக்கற்கையை முன்னெடுக்க நீங்கள் உதவக்கூடும் இன்றைய நிலையில் இது ஓர் அரிய சமூக சேவையாக அமையும்.

வகுப்பிட அனுசரணை

## புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி , யாழ்நகர்

(7468)



## The Open University of Sri Lanka

Faculty of Natural Sciences

Applications are called for

**B.Sc. Degree Programme / Foundation Courses in Science**

***Admission requirements:***

* 3 passes in A/L science & Maths sream, in any number of sittings
* Less than 3 passes: start from our Foundation Courses in Science

***Application forms:***

*Available from 06.02.2012 to 10.03.2012*

*Could be collected from: Open University of Sri Lanka,*

*Jaffna Regional Centre, Brwons road, Kokuvil.*

***Closing date of receiving applications:***

*10th of March 2012*

**Open Day (Free Seminar)**
- all are welcome

Venue : Jaffna Regional Centre, Browns Road,Kokkuvil

On 18th of February 2012 Saturday
Time : 9.30 am – 12.30 pm

**Futher details:**
Coordinator,
Jaffna Regional Centre,
Tel.021 222 3374
Email: adjaf@sltnet.lk

Registrar,
The Open University of Sri Lanka

தொ.பே: 021 22 3374

Email: adjaf@sltnet.lk

# இன்று ஒரு தகவல்

## அறிவால் வரும் ஆபத்து

ஒரு ஊரிலே குரு இருந்தார்.

அவர் சீடர்கள் எதிரிலே உட்கார்ந்திருந்தார். சீடர்களுக்கு அவர் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்.

சீடர்களுக்கு ஒரு ஆசை...

அதாவது ஒரு முக்கியமான மந்திரத்தை குருநாதரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவர்களின் நீண்டநாள் ஆசை.

அது என்ன மந்திரம்... என்றால், இறந்தவரை உயிர்ப்பிக்கும் புனித மந்திரம்.

"குருவே! தயவுசெய்து அந்த மந்திரத்தை எங்களுக்கு உபதேசிக்க வேண்டும்" என்று கேட்டார்.

"அது மிகவும் ஆபத்தானது. அது எதற்கு? வேண்டாம்" என்றார் குரு.

"எங்களுடைய நம்பிக்கை உறுதிப்படுவதற்காகத்தான் கேட்கிறோம். வேறு ஒன்றுமில்லை" என்றார்கள் சீடர்கள்.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்றார் குரு. இது சீடர்களுக்குப் புரியவில்லை.

"அது எப்படி... பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் என்ன?" என்று சீடர்கள் கேட்டார்கள்.

குரு அதற்கு விளக்கம் கொடுத்தார்.

அந்த மந்திரத்தை எப்போது பயன்படுத்த வேண்டும் என்பதை அறியக்கூடிய ஞானம் ஏற்படும் வரைக்கும் அதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே தான் நல்லது... இல்லையென்றால் ஆபத்து" என்றார்.

ஆனால், அந்தச் சீடர்கள் அதைக் கேட்கிற மாதிரி இல்லை. மிகவும் பிடிவாதம் செய்ய ஆரம்பித்தார்கள்.

"சரி... வாருங்கள் சொல்கிறேன்" என்றார் குரு. எல்லோரும் வந்தார்கள்.

அந்தப் புனித மந்திரத்தை அவர்களுக்கு இரகசியமாக உபதேசம் செய்தார். உபதேசம் செய்துவிட்டு எச்சரிக்கையும் கொடுத்தார்.

"இந்த மந்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்ததற்கு பின்னர் தான் உச்சரிக்க வேண்டும். அவசரப்பட்டு அதை கூறக்கூடாது" என்று ஒரு தடவையல்ல பலதடவை எச்சரிக்கை செய்தார்.

அவர்கள் சரி என்று சொல்லிவிட்டு எழுந்து சென்று விட்டார்கள்.

ஒருநாள் அந்தச் சீடர்கள் எல்லாம் மணற்பாங்கான இடத்திலே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஒரு இடத்திலே எலும்புகள் குவியலாக கிடந்தன. உடனே இந்தச் சீடர்கள் முன்பின் பார்க்காமல் தியானம் செய்யாமல், மந்திரத்தினை சோதித்துப் பார்ப்பதற்காக... உடனே உச்சரித்து விட்டார்கள்.

உடனே என்ன நடந்தது தெரியுமா?

அந்த எலும்புகள் எல்லாம் ஓநாய்களாக மாறி... அவர்களைத் துரத்த ஆரம்பித்தது.

சீடர்கள் எல்லோரும் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தார்கள். ஓநாய்களும் விடவில்லை... அவர்களைத் துரத்திப் பிடித்து கடித்து குதற ஆரம்பித்தன.

"அப்போதுதான் அந்தச் சீடர்களுக்கு... குரு சொன்ன அறிவுரையின் அர்த்தம் புரிந்தது.

"பக்குவப்படாத அறிவு ஆபத்தானது" என்பது புரிந்தது.

அதனாலே... இதிலே இருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் அறிவை மட்டும் வளர்த்துக்கொண்டால் போதாது... அந்த அறிவை எப்போது எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற பக்குவமும் நமக்கு வரவேண்டும்.

அப்போதுதான் வாழ்க்கை நல்லபடியாக அமையும். இல்லாவிட்டால் இடைஞ்சல்தான்.

இந்தக் காலத்திலே சிறிய வயது பிள்ளைகளுக்கே அறிவு மிகவும் பக்குவப்பட்டிருக்கிறதை உணர முடிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 2020 ஆம் ஆண்டில் காற்றாடி மூலம் மின்சாரம் வழங்கப்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதான மின்வடங்கள் ஊடாக மின்சாரம் வழங்கமுடியாத பிரதேசங்களுக்கு காற்றாடி மூலமும் சூரியக்கலன்கள் மூலமும் மின்சாரம் வழங்கவுள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மின்பொறியியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட வடபகுதி மின்சார விநியோகம் சற்று பின்நோக்கிச் சென்றுள்ளது.

இதனை நிவர்த்தி செய்வதற்கு வட பகுதியில் கடமை புரியும் மின்சார ஊழியர்கள் பொறுப்புடனும் நேர்மையுடனும் கடமை புரிதல் அவசியம்.

மக்களுக்கு மின்வழங்குவதற்கு ஒரு அலகிற்கு 32 ரூபா செலவாகின்றது. ஆனால், நாம் மக்களுக்கு அறவிடப்படும் தொகை 3 ரூபா வரையே உள்ளது. இதனால் மின்சாரசபை நட்டத்தில் இயங்கி வருகின்றது.

இங்கு மிகப்பெறுமதியான சொத்து காற்றாடி மூலம் மின்சாரத்தை பெறுவதாகும். இந் நடைமுறையினை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவுள்ளோம்.

மேலும் மின்சார ஊழியர்களின் திறன்களை வெளிக்கொணர்வதன் பொருட்டு தேசிய ரீதியில் போட்டிகள் பலவற்றை நடத்தினோம். இதில் தென் பகுதியினரே சாதனை புரிந்திருந்தனர். இவ்வருடமும் இப்போட்டிகளை நடத்தவுள்ளோம். இதில் வடபகுதியினர் பங்குபற்றி சாதனைகள் படைக்க வேண்டும்.

மின்சாரசபை நட்டத்தில் இயங்குவதால் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் இனம் காணப்பட்டு அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2-4)

# பளு தூக்கும் போட்டியில் பங்குகொள்ள பதிவுகளை மேற்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள பளுதூக்கும் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகளின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி ஜே. ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்தப்பதிவுகள் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுத்துறைப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, யாழ்.மாவட்டரீதியில் நடைபெறவுள்ள பளு தூக்கும் போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் 20 ஆம் திகதிக்கு முன்பு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 60 |
| தக்காளி | 40 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 25 |
| கோவா | 30 | 30 | 30 |
| கரட் | 50 | 40 | 40 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 60 | 25 |
| வாழைக்காய் | 30 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 50 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | -- |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 30 | 30 | 40 |
| கறிமிளகாய் | 110 | 100 | -- |
| முருங்கைக்காய் | 350 | 400 | 300 |
| போஞ்சி | 30 | 30 | 25 |
| கத்தரிதம்புள்ள | 15 | 10 | 20 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 25 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25 | 20 |
| வெங்காயப்பூ | 80 | 90 | -- |

# இராசி பலன்

*11.02.2012*
*(தை 28, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 9.42 மணிவரை*
*உத்தரம் முற்பகல் 11.02 மணிவரை*
*இராகுகாலம் 9.34-11.04 மணிவரை*
*சுபநேரம் 3.34-5.04 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்.*

**மேடம்** கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், வேலைகளை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல் நலனில் புத்துணர்வு தென்படும், போசன நன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள்.

**இடபம்** பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைவீர்கள்,தொழில் வளர்ச்சியுண்டு,இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** தொலைபேசி வழித்தகவலால் தொழில் வளர்ச்சிக்கு நன்மையுண்டு, தாய்வழி உறவினர்களால் தக்க சமயத்தில் உதவிகள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேரும் நாள்.

**சிங்கம்** எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம்,தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்,பொருள் வரவிற்காக அதிகம் பாடுபடுவீர்கள்,அரசு வழியில் அனுகூலமுண்டு,பொன்னான நாள்.

**கன்னி** வரவுக்கேற்ப செலவுகள் உருவாகும், குடும்பத்தினர் மனங்கோணாமல் நடந்து கொள்வது நல்லது, கந்தன் வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் வழியில் அன்புத் தொல்லை ஏற்படலாம்.

**துலாம்** வழக்கமாகச் செய்யும் பணிகளை இன்று மாற்றியமைப்பீர்கள், மன அமைதிக்காக வழிபாட்டில் நாட்டம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்,பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,குடும்பத்தினர் உங்களைப் புரிந்துகொண்டு நடப்பர், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** தூரதேசச் செய்திகளால் பரவசமடைவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம், மனதில் உற்சாகமும் தன்னம்பிக்கையும் பிறக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்,புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தொழிலில் கவனம் தேவை,உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மீனம்** பொருளாதார நிலை உயரும் நாள், திருமணப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் ஏற்படலாம்,காரிய அனுகூலமான நாள்.

வளவன்

# இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது

## அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய சமூகம் தெரிவிப்பு

(கரவெட்டி)

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதனால் கல்வி இணைபாடவிதான செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியாத நிலை உள்ளதென பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மேற்படி பாடசாலையில் தரம் 1 முதல் க.பொ.த சாதாரணதர வகுப்புக்களில் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இதில் அதிபர் மற்றும் ஒரு ஆண் ஆசிரியர் மட்டுமே. ஏனையோர் பெண் ஆசிரியராக காணப்படுகின்றனர்.

இதனால் புறநிலைச்செயற்பாடுகள் மற்றும் விளையாட்டு போட்டிகள், பரிசளிப்பு நிகழ்வின் போது பாடசாலை சமூகம் பெரும் கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றது.

ஆயினும் இவ்வாசிரியர்களில் கணிதம் மற்றும் விளையாட்டு செயற்பாடுகளுக்கு தகுதியான ஆசிரியர்கள் இல்லாமையினால் இவ்விரு செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாத நிலையுள்ளது.

இப்பாடசாலைக்கென பிரபல்யமான விளையாட்டு மைதானம் உள்ள போதும் பாடசாலையில் விளையாட்டுத்துறை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் இப்பாடசாலையின் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென பெற்றோரும் பாடசாலை பழைய மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தசாமி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் செல்வி பிரதா நவரட்னம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அப்பாத்துரை ஈஸ்வரநாதன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-11-78)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி தரமேம்பாட்டு இணைப்பாளரும் ஆசிரிய வாண்மை நிலைய இயக்குநருமான பா. தனபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பாடசாலை முன்னாள் அதிபரின் பாரியார் திருமதி செல்வம் கந்தையா, மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/பருத்தித்துறை புலோலி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ)

## வடமராட்சி புனிதநகர் பகுதியில் குற்றச்சம்பவங்கள் அதிகரிப்பு

### நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

வடமராட்சி புனிதநகர்ப் பகுதியில் அண்மைக்காலமாக அடிதடி, வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் சிறுசிறு பிரச்சினைகளை பெரிதாக்கி மதுபோதையில் கூரிய ஆயுதங்கள் மற்றும் வாள்களைப் பயன்படுத்தி ஒருவருக்கொருவர் மாறிமாறி வெட்டி காயம் ஏற்படுத்துகின்றனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேற்படி பகுதியில் இதுபோன்ற பல சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றது.இதனால் அப்பகுதியில் மக்கள் அடிக்கடி அச்ச நிலையில் வாழ வேண்டிய நிலை காணப்படுகிறது.

எனவே பொலிஸார் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு அமைதி நிலை ஏற்படுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## விசேட பொதுக்கூட்டம்

(நவாலி)

நவாலி புனித பேதுருவானவர் பந்தி புனிதவின் சென்டி போல் சபையினரின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி சென்பீற்றர் றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் தலைவர் திருமதி ஜே. யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3)




## வாளால் வெட்டிய சந்தேக நபர்கள் இருவர் கைது

(கரவெட்டி)

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரை துரத்திச்சென்று வாளால் வெட்டிய சந்தேகநபர் இருவரை பருத்தித்துறை விசேட குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு வழக்கொன்றில் கையொப்பம் இட்டு விட்டு வீடு திரும்பிய வேளை தும்பளைப் பகுதி யில் வைத்து மூன்று பேர் கொண்ட குழு குடும்பஸ்தரை வாளால் வெட்டி காயப்படுத்தியது.

இச்சம்பவம் தொடர்பான குறித்த இரு சந்தேக நபர்கள் தும்பளைப்பகுதியில் வைத்து மது அருந்திக்கொண்டிருந்த வேளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.(அ-3-24)

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது

கொலை, கொள்ளை வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கரணவாய் போலங்கன் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் சுன்னாகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொற்றாவத்தைப் பகுதியில் சிலவருடங்களுக்கு முன் தனது மனைவியை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குறித்த நபர் தனது இரண்டாவது மனைவியின் தங்கநகைகளை களவாடி விற்க முற்பட்டவேளை நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

தடுத்து வைக்கப்பட்ட இந்நபர் தப்பிச்சென்றிருந்தார்.தற்போது கரணவாய் போலங்கன் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.குறித்த நபர் சுன்னாகப் பொலிஸாரால் கொள்ளை வழக்கொன்றில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் என்பதால் நெல்லியடிப் பொலிஸார் கடந்த புதன்கிழமை சுன்னாகப் பொலிஸாரிடம் குறித்த சந்தேகநபரை ஒப்படைத்துள்ளனர்.(அ-3-24)

## மின்தடை பற்றிய அறிவித்தல்


(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும், மின் விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் பின்வரும் பகுதிகளில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி , மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான்,இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு,இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (அ)







இலங்கை தேசிய பாதுகாப்பு படைப்பிரிவின் 9 ஆவது பிற்ராலியன் பிரிவினரால் புனரமைக்கப்பட்ட யாழ். குருநகர் வெஸ்கி முன்பள்ளியின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா முன்பள்ளி சிறுமியுடன் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும் 51 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி எ.டி.பி விக்ரமரட்ன முன்பள்ளி சிறார்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## பேச்சுகள் தொடர்கின்றன

# புத்தாண்டுக்கு முன் பொன்சேகா விடுதலை ஜனநாயக தேசிய முன்னணி நம்பிக்கை!

(கொழும்பு)

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக விடுதலை செய்யப்படுவார் என ஜனநாயக தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக அரசாங்கத்துடன் தமது கட்சி தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பொன்சேகாவை விடுவிக்கக்கோரி தாம் நடத்தும் போராட்டங்கள் இந்தப் பேச்சுக்களை எவ்வகையிலும் பாதிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் படைத் தளபதி பொன்சேகா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இரு வருட நிறைவை முன்னிட்டு கடந்த வாரத்தில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை எதிர்க் கட்சிகள் நடத்தியிருந்தன. அதே வேளையில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ரப் அரச தரப்புடன் தான் நடத்தும் பேச்சுக்களில் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் அரச தரப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கடந்த வாரம் தெரிவித்திருந்த அனோமா பொன்சேகா, இருந்த போதிலும் பொன்சேகா மன்னிப்புக் கோரப் போவதில்லை எனவும் குறிப்பிட்டிருந்தார். (எ-11)

## கூடைப்பந்தாட்ட போட்டி அணி தெரிவு

(யாழ்ப்பாணம்)

இராசதுரை வெற்றிக் கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அணி ஒழுங்கு தெரிவு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுள்ளது.

இதில் சகல கழகங்களினதும் பிரதிநிதி களையும் தவறாது சமுகமளிக்குமாறும் தவறும் பட்சத்தில் நிகழ்வில் எடுக்கப்பட்ட முடிபுகள் யாவும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாக கருதப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள் ளது.

இச் சுற்றுப்போட்டி கடந்த 2004 ஆம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியில் அங்கம் வகித்துள்ளது வீரர்களின் அனுசரணையுடன் யாழ்.சென்றல் விளையாட்டு கழகமும்; யாழ் மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத் தவுள் ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (எ-7)

## சவுதி சிறைச்சாலையில் இலங்கைப் பெண் தற்கொலை

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் மலாஸ் பெண்கள் சிறைச்சாலையில் கைதியொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக றியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திக பண்டார என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார். மற்றொரு இலங்கையரை கொலை செய்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரின் சடலத்தை பொறுப்பேற்பது தொடர்பாக குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து பதிலை எதிர்பார்த்துள்ளதாக இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இறந்தவர் இல. 117,மாகந்த மடபாத்த பிலியந்தல எனும் முகவரியைச் சேந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# காணாமல்போனவர்களை மன்னித்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## 562 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்கிறார் அப்பாத்துரை எம்.பி.

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது அல்லது அவர்களுடைய விபரங்களை வெளியிடல் வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கம் ஒருபோதும் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்காது. ஆகவே, எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது காணாமல் போனோர் தொடர்பான விடயங்களேயாகும். இப்பிரச்சினையானது எம்மை பலகாலமாக உலுக்கிக் கொண்டு இருக்கிறது.

அண்மையில் யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் நானும் அரசியல் ரீதியாக கலந்து கொண்டேன்.

இதில் காணாமற் போனவர்களுடைய விபரங்கள் பெற்றுக் கொண்டதோடு இதற்காக பிரத்தியேக இடம் ஒன்றும் ஏற்பாடு செய்து அதில் காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களை பதிவு செய்வதற்கு முயற்சித்தேன.

எனினும் நோக்கத்தை அறிந்து கொண்டவர்கள் இடம் தர மறுத்ததை அடுத்து என்னுடைய வீட்டிலேயே விபரங்களை பதிவு செய்யுமாறு பத்திரிகையில் பிரசுரித்ததை அடுத்து 562 பேர் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களை பதிவு செய்துள்ளனர்.

இதில் அதிகமானவர்கள் காணாமல்போயும் படையினரால் 126 பேர் கைது செய்யப்பட்டும் உள்ளமையால் இவர்கள் தொடர்பான விபரங்கள் இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

5 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போனவர்களுக்கான ஆட்கொணர்வு மனு யாழ். நீதிமன்றுக்கு அனுப்பப்பட்டதனைத் தொடர்ந்து விசாரணையின் இறுதியில் படையினர் பிடித்தமைக்கான சான்றுகள் உண்டு என்றும் கூறப்பட்டு மேல்நீதிமன்றத்திற்கு இது தொடர்பான அறிக்கை அனுப்பப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிக்கையில் அநுராதபுர நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதனைத் தொடர்ந்து அது கைவிட்டுப் போனது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் காணாமல் போனோர் தொடர்பில் படையினருக்கு பெரும் பங்குண்டு என எஸ். எல். ஆர். சியும் குறிப்பிட்டுள்ளது.

வலி.வடக்கிலுள்ள 23 கிராம-சேவைப் பிரிவில் இன்று வரை மீள்குடியேற்றம் இடம் பெறவில்லை. எந்த முடிவெடுக்க வேண்டுமானாலும் அரசிடம் கேட்க வேண்டிய நிலை அரச அதிகாரிகளுக்குண்டு. அத்துடன் கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருக்கும் தமிழர்கள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

கடந்த 1953 ஆம் ஆண்டுக்ளுக்கு முன்பிருந்த நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும். அல்லது வெளிநாடுகளின் தலையீடு இப்பிரச்சினையில் அவசியம் ஏற்பட வேண்டும்.

ஒரு சமூக நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நிர்வாகங்களில் படையினரின் தலையீட்டை நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## வேலை தேடுவோர் விபரம் திரட்டல்

(கோப்பாய்)

கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேலைதேடுவோர் விபரம் திரட்டப்படுவதாக மேற்படி பிரதேச செயலர் பிரதீபன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலகப்பிரிவுக்கு உட்பட்ட வேலையற்றிருக்கும் இளைஞர்,யுவதிகள் விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளரிடம் பெற்று பூரணப்படுத்தி மீள் படிவங்களை கிராமசேவையாளர்களிடம் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# தொழில்நுட்பக் கல்லூரியில் டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியினால் தேசிய தொழில் தகைமையிலான மட்டம் ஐந்து டிப்ளோமா தரக் கற்கைநெறிகள், மூன்று மாத இலவச ஆங்கில அடிப்படைக் கற்கை நெறிகள், தொழில் தேடுபவர்களுக்கான ஆங்கில தொடர்பாடல் கற்கைநெறியும் நடத்தப்படவுள்ளது என யாழ். தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் என்.யோகராஜன் அறிவித்துள்ளார்.

இதில் முழுநேரக் கற்கை நெறிகளாக தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல், தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியல், தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் மற்றும் மின்னால் காய்ச்சி ஒட்டுதல் (வெல்டிங்) போன்ற கற்கை நெறிகளும் பகுதிநேரக் கற்கைநெறியாக நிர்மாண தொழில்நுட்பவியல் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறியினை பயில விண்ணப்பிப்பவர்கள் தேசிய தொழில் தகைமை மட்டம் 3 அல்லது 4 ஐ பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 17 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

முற்றிலும் இலவசமாக அரச அங்கீகாரம் பெற்ற இக்கற்கை நெறிகளைப் பயிலும் முழு நேர மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 50 ரூபா வீதம் மாதம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத கொடுப்பனவும் தொலை தூர மாணவர்களுக்கு பருவகால பயண சீட்டும் வழங்கப்படவுள்ளது.

இதனைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் தேசிய தொழில் தகைமையிலான டிப்ளோமா தரக்கற்கை நெறியின் 6ஆம் மட்டத்தினை பயிலமுடியும். இதற்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதில் இலவச மூன்று மாத ஆங்கில கற்கைநெறியினை, அடிப்படை கற்கை நெறியினை சென்ற ஆண்டு க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பின்பற்றமுடியும்.

இதன்போது தொழில் தேடுபவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கிலக் கற்கைநெறியிற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாமல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவுள்ளோர்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேரடியாகவோ அல்லது 021222 00 28 என்னும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டோ மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)




ஜெய்குருதேவ்

எப்போதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ, வாழ்க்கையில் உற்சாகம் பெற, தன்னம்பிக்கை, தைரியம் பெற, சிறந்த படைப்பாற்றலுடன் விளங்க, கல்விப் பணியில் முன்னேற்றம் பெற, குடும்பத்திலும் சமூகத்திலும் நல்லுறவுபெற, ஆஸ்துமா, ஒற்றைத்தலைவலி மாறா வாழ்க்கை வைபவமாக மாற

**வாழும் கலைப் பயிற்சி**

(சனிக்கிழமை) அறிமுகவுரை

(11.02.2012)

நல்லூர்:-

மகேஸ்வரன் மணிமண்டபம்

நேரம் :- 4.00-5.00

0777740593

(7469)

# சுதந்திரதின உரையில் தமிழர்களுக்கு நல்லெண்ணத்தை காட்ட ஜனாதிபதி தவறிவிட்டார்

## சமூக அமைப்பின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழர்களுக்கும் சர்வதேசத்துக்கும் நல்லெண்ணத்தை காட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தவறிவிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் இம்முறை இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகளில் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி தேசியவாதிகளுக்கு உரமூட்டும் வகையிலே கருத்துக்களை வெளியிட்டார் என்று சமூக அமைப்பின் தலைவரான ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 50 வருடங்களில் காணாத சுதந்திரம் கடந்த மூன்று வருடங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டது. தமது அரசாங்கத்தினால் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போன்ற ஜனாதிபதியின் கருத்துக்கள் முன்னர் இருந்த அரசாங்கங்களின் அபிவிருத்தி மற்றும் நாட்டை கட்டியெழுப்பிய திட்டங்களை மழுங்கடிப்பது போல அமைந்திருந்தன.

மஹிந்த ராஜபக்ஷவின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இன்னும் பெரிய கப்பல்கள் வர முடியாமல் உள்ளன.

நுரைச்சோலை அனல் மின்சார மையத்தில் தொடர்ந்தும் தீ விபத்துக்கள் மாத்திரமே நிகழ்கின்றன. தென் அதிவேகப் பாதையும் கொழும்பை அழகுபடுத்தும் திட்டமும் மாத்திரம் ஓரளவு முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் 9 ஆயிரத்து 277 ஆவது பரிந்துரையின் படி இலங்கையின் தேசியகீதம் தமிழ், சிங்களம் என்ற இரண்டு மொழிகளில் சுருதி மாறாமல் பாடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி சுதந்திர தின நிகழ்வு அன்று நடைமுறைப்படுத்தியிருக்கலாம். அதன் மூலம் சர்வதேசத்துக்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக ஒரு செய்தியை அறிவித்திருக்க முடியும்.

இது எதிர்வரும் மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு பாரிய நன்மைகளை ஏற்படுத்தியிருக்கும் என்று ஜெஹான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வாய்ப்பை தவறவிட்டமை துரதிர்ஷ்டவசமே என்று ஜெஹான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# சேவை நலன் பாராட்டு விழா

யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர், யாழ்.வலய கல்விப் பணிப்பாளர், நீர்வேலி கலைபண்பாட்டு மன்ற தலைவர் இராமநாதன் குணநாதனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான ஆசியுரையினை நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ அ.சந்திரசேகரக்குருக்கள், நீர்வேலி செல்லக்கதிர்காம கோவில் பிரதம குரு சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் பிரதம குரு சா.சோமதேவக்குருக்கள், நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு சிவஸ்ரீ இ.சுவாமிநாதக்குருக்கள், நீர்வேலி பரலோக மாதா தேவாலய அருட்பணி தந்தை யூட் நிக்ஷன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

(அ-7)

# 2011 ஆம் ஆண்டு விபத்துக்களில் 225 மாணவர்கள் உயிரிழந்தனர்

## சபையில் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வீதிகளை தரமானதாக அமைக்க வேண்டும் என்பதுடன் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 6 ஆயிரத்து 142 பேர் காயமடைந்ததுடன் 225 மாணவர்கள் பலியாகியுள்ளனர்.

இது அபாயகரமானதாகும் என்று ஐ.தே.கவின் எம்.பியும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோன் அமரதுங்க தெரிவத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபொது வழிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணித்தமையை வரவேற்கின்றோம். எனினும் அது தரமானதா? அந்த வீதியில் இதுவரை 26 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அண்மையில் ஒருவர் பலியாகியுள்ளார். கற்கள் வீசப்படுவதனால் 19 வாகனங்களின் முன்பக்க கண்ணாடிகள் உடைந்து சேதமாக்கபட்டுள்ளன. விலங்குகள் வீதிக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக போடப்பட்டிருந்த வலைகள் அறுத்தெறியப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். சர்வதேச தரத்திற்கு ஏற்ப தென் அதிவேக வீதி நிர்மாணிக்கப்படவில்லை. ஏனைய அதிவேக வீதியை சர்வதேச தரத்திற்கு நிர்மாணிக்க வேண்டும்.

ஏனைய வீதிகளைப் பொறுத்தவரையில் இரவு வேளைகளில் வீதி விளக்குகள் இல்லாமை. இதனால் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து ள்ளன. வீதி விபத்துக்களும் இடம்பெறுகின்றன. பிரதான வீதிகளில் காலை மற்றும் மாலை வேளைகளில் கனரக வாகனங்கள், கேஸ் பவுஸர்கள் பயணிப்பதனால் பெரும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, அவ்வாறான வாகனங்களை மக்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களில் பயணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயணிக்கும் போது அவர்களிடம் கட்டணங்கள் அறவிடக்கூடாது என்றார்.

(அ-2)

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்பி சுபீட்சமான எதிர்காலத்தை பெறுவோம்

## ராம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் எதிர்கால சமூகத்தின் மாணவர்களின் ஐக்கியம், ஒற்றுமை, நல்லிணக்கம் என்பவற்றை கட்டியெழுப்புவதன் மூலம் சுபீட்சமான எதிர்காலமொன்றை கட்டியெழுப்ப முடியும். அதுவே அமைதியான நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளரும் மேல்மாகாண சபை உறுப்பினருமாகிய சி.வை.பி.ராம் தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனை புளுமெண்டால் வீதியிலுள்ள ராம் நற்பணி மன்ற தலைமையகத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மாணவ சமூகத்தின் ஒற்றுமையைக்கட்டியெழுப்புவதன் மூலமே ஐக்கிய இலங்கையின் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள இன்றைய சூழ்நியைில் நாட்டு மக்கள் அனைவரும் ஐக்கியம், சமாதானம் என்பவற்றையே வேண்டி நிற்கின்றனர்.

எனவே, தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்து அவர்களின் இன ஐக்கியத்தை, ஒற்றுமையை வளர்ப்பதே எனது ஒரே நோக்கமாகும் என்றார்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மட்டு.வைத்தியசாலையிலும் தாதியர்கள் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அரச தாதியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இவர்களின் இந்த கவனயீர்ப்பு போராட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல வைத்தியசாலைகளில் நடைபெற்றது. மதியம் 12 மணிக்கு ஆரம்பமான இவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது.

வேலை நாட்களை ஐந்து நாட்களாக குறைக்க வேண்டும். அரசாங்க தாதியர்களின் சீருடை கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவால் உயர்த்த வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் அரச தாதியர்கள் வைத்தியசாலைக்கு முன் ஒன்றுகூடி இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேபோன்று கிழக்கு மாகாணத்தின் பல வைத்தியசாலைகளிலும் அவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. கடந்த வாரமும் இந்த கவனயீர்ப்பு போரா ட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

## வெள்ளவத்தை சம்பவத்தில்

# கொல்லப்பட்ட தமிழ் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை

## வைத்திய அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

வெள்ளவத்தை 37 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள மாடி வீட்டில் மரணமான பெண் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமரக்கோன் பண்டா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை தொடர்மாடி வீட்டில் தீவிபத்து காரணமாக இரண்டு மரணங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் அங்கு இடம்பெற்ற மரணத்தில் ஒன்று கொலை என வைத்திய அறிக்கையில் ஊர்ஜிதமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

68 வயதுடைய பி.கே.சத்தியநாதன் என்பவரும் 32 வயதுடைய சர்மிளா பாலசுப்பிரமணியம் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

மரணமான சர்மிளா பாலசுப்பிரமணியம் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக வைத்திய அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாகவும் சத்தியநாதன் என்பவருடைய பிரேத பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரினது மரணங்களும் தற்கொலையாக இருக்கலாம் என முதலில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் வே.க. இரத்தினகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாயநாதன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# களிமண் வளத்தை கண்டுபிடிக்க திட்டம்

(கொழும்பு)

பீங்கான் மற்றும் தரை ஓடு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் களிமண் வளத்தைக் கண்டுபிடிப்பதற்கான திட்டமொன்றை புவியியல் அகழ்வாராய்ச்சி பணியகம் ஆரம்பித்துள்ளது.

களனி மற்றும் அதனை அண்மித்த பிரதேசமொன்றில் தேவையான களிமண் வளம் கண்டறியப்பட்டுள்ளாதாக பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பீ. விஜயானந்த குறிப்பிட்டார்.

இந்த வளத்தைக்கண்டு பிடிப்பதற்கான திட்டம் மூன்று கட்டங்களில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

முதல் கட்டமாக களனி கங்கையின் வட பகுதியிலும் அடுத்த கட்டமாக களனி கங்கையிலிருந்து களுகங்கை வரையிலும் இறுதிக் கட்டமாக களனி கங்கையிலிருந்து நில்வலா கங்கை வரையிலும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக புவியியல் அகழ்வாராய்ச்சிப் பணியகத்தின் தலைவர் கூறினார்.

இப்போது ஒரு சில இடங்களில் பீங்கான் மற்றும் தரை ஓடு தயாரிப்பதற்குப் பயன்படும் களிமண் வளம் கண்டறியப்பட்டதாகவும் அது குறித்த சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-2)

# எம்மைப்பற்றி ஆதாரமில்லாமல் கருத்து தெரிவிக்க அருகதையில்லை

### சபையில் அஸ்வருக்கு அரியம் எம்.பி. அறிவுறுத்து



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பற்றியோ அதன் தலைவர் சம்பந்தனைப் பற்றியோ பேசுவதற்கு உங்களுக்கு அருகதை இல்லை. இது குறித்து பேச வடக்கு, கிழக்கு மக்கள் உள்ளனர் என்று கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட எம்.பி. பா.அரியநேத்திரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அஸ்வர் எம்.பியைப் பார்த்து கூறினார்.**

நீங்கள் அரசியல் செய்வதற்கு புலிகள் தேவை. அவ்வாறான தேவை எங்களுக்கு கிடையாது. நாம் பயங்கரத்தை சந்தித்தவர்கள். எமது மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொணரவே எம்மை எமது மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது வழிகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் அரியநேத்திரன் எம்.பி. உரையாற்றிக் கொண்டிருக்கையில்,

இடை மறித்த ஆளும் கட்சி எம்.பியான ஏ.எச்.எம். அஸ்வர், சம்பந்தன் எம்.பி. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்தோருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் நீங்கள் புலிகளுக்கு வால் பிடிப்பவர்கள் என்றும் கூறினார். அதற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அரியநேத்திரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரைகள் கட்டப்படுவது குறித்து தகவல்களை தெரிவித்தபோது இவ்வாறான பயங்கரமான விடயங்களை நீங்கள் கூறும் போது எதனையும் ஆதாரம் இல்லாது பேசக்கூடாது. அது இரு இனத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். நீங்கள் கூறும் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் உள்ளதா என்று பா. உறுப்பினர் அஸ்வர் அரியநேத்திரனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் கூட்டமைப்பு புலிகளுக்கு வால் பிடித்தவர்கள் என்றும் உங்கள் தலைவர் சம்பந்தன் உங்களை அழைத்துச் செல்லாமல் தான் மட்டும் வெளிநாடுகளுக்குச் சென்று புலம்பெயர் தமிழர்களைச் சந்திக்கிறாரே அதனால் உங்கள் நிலைமை தொடர்பில் நான் அனுதாபப்படுகின்றேன் எனவும் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த அரியநேத்திரன் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திக்தி புலிகள் முற்றாக அழிந்துவிட்டார் என்று கூறியதும் 2012 ஆம் ஆண்டு புலிகள் இருக்கிறார்கள் என்று கூறுவதும் நீங்கள் தான். உங்களுக்கு புலிகளை விட்டால் பிழைப்பும் இல்லை அரசியலும் இல்லை என தெரிவித்துள்ளார்.

தமது பிரதிநிதிகளாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் கருதி எம்மைக் பாராளுமன்றத்துக்கு அனுப்பியவர்கள் வட க்கு, கிழக்கு தமிழ்மக்கள்.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பிலோ அல்லது அதன் தலைவர் சம்பந்தன் குறித்தோ விமர்சிப்பதற்கு வடக்கு, கிழக்கு தமிழ்மக்களுக்குமட்டுமேதகுதியும் உரிமையும் உண்டு. உங்களுக்கு எளளந்தவித அரு கதையும் இல்லை என்றார். (அ-2)

# சிலாவத்தை தியோகு நகரில் மாலை நேரக் கற்றல் ஆரம்பம்

### தே.சி.பா.அதிகாரசபை நடவடிக்கை

(முல்லாவி)

முல்லை. மாவட்ட சிலாவத்தை தியோகு நகர் மீனவர் சங்கம், முள்ளியவளை பாரி சிறுவர் இல்லம் ஆகியவற்றின் அனுசரணையுடன் முல்லை. மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மாலை நேரக் கற்றல் வகுப்பொன்றை எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை தியோகு நகர் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக முல்லை. மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் இணைப்பாளர் வை.ரஜனிகாந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லை. மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமான தியோகு நகரில் பாடசாலைக்கு செல்லாது பாடசாலை சென்று கற்க வேண்டிய வயதில் உள்ள மாணவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர்.

அது மட்டுமன்றி துஷ்பிரயோக நிகழ்வுகளும் காணப்படுகின்றன.

இப்பகுதியில் நாம் இரு வாரத்திற்கு முன்னர் பல நடவடிக்கையில் ஈடுபட்டு 40 இற்கு மேற்பட்ட மாணவர்களை பாடசாலையில் இணைத்துள்ளோம்.

இதன் தொடர்ச்சியாக இவ் ஊரில் மாலை நேரக் கற்கை வகுப்பொன்றை தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையுள்ள 50 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆரம்பிக்கவுள்ளோம்.

இவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இலவசமாக வழங்குவதுடன் ஆசிரியர்கள் சேவை, மின்சார வசதி என்பவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம்.

இச் செயற்பாட்டுக்காக பல்வேறு பட்ட பொது அமைப்புக்களினுடைய பிரதி நிதிகளோடும் கலந்துரை யாடல் ஒன்றை நடாத்தியுள்ளோம்.

இதில் கலந்து கொண்ட பல தரப்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பல உதவிகளினை முன்வந்து செய்வதற்கு ஒப்புக் கொண்டதை தொடர்ந்து இம்மாலை நேரக் கற்கை நெறியை நாம் ஆரம்பிக் கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். ள (அ-3-15)

# முறையான விசாரணைக்கு பின்னரே பொலிஸார் இடமாற்றப்பட்டனர்

### அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

முறைப்பாடுகள் கிடைத்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரான அறிக்கையின் அடிப்படையிலேயே மஹியங்கனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 120 பொலிஸாரும் இடம்மாற்றப்பட்டுள்ளனர் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது ஐ.தே.க. எம்.பியான ரவி கருணாநாயக்க கேட்ட குறுக்கு கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பதலளிக்கையில்,

மஹியங்கனை பொலிஸாருக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த அறிக்கையின் பிரகாரமே 120 பொலிஸாருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஒழுக்கம் தொடர்பில் அவசரமாக தீர்மானங்களை எடுக்க முடியாது. நீங்கள் கூறுவதைப் போல அனைவரையும் வீட்டுக்கு அனுப்ப முடியாது. முறைப்பாடுகள் கிடைத்தால் விசாரணைகளை நடத்த வேண்டும். அதன் முதல்படியாக இடமாற்ற வேண்டும்.

இரண்டாவது கட்டமாக வேலையிலிருந்து இடைநிறுத்த வேண்டும். நீங்கள் கூறுவதைப் போல உடனடியாக வீட்டுக்கு அனுப்ப முடியாது. விசாரணையின் அறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

(அ-2)

# மாலைதீவுடன் தொடர்ந்தும் ஒற்றுமையாக செயற்படுவோம்

(கொழும்பு)

மாலைதீவுடன் அரசியல் பொருளாதார சமூக மற்றும் சர்வதேச விவகாரங்களில் தொடர்ந்தும் ஒத்துழைப்புடனும் கூட்டுறவுடனும் நாங்கள் செயற்படுவோம். இலங்கைக்கு எதிராக செயற்படும் சர்வதேச சக்திகளின் உள்நாட்டு பிரதிநிதிகள் பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடக்கூடாது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாலைதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகால நெருங்கிய உறவு காணப்படுகின்றது. அந்த நாட்டின் முன்னேற்றத்துக்காக இலங்கை பாரியளவில் செயற்பட்டுள்ளது. அதேபோன்று இலங்கையின் நலனுக்காகவும் மாலைதீவு செயற்பட்டு வந்துள்ளது.

மேலும் கடந்த காலங்களில் இலங்கையும் மாலைதீவும் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சர்வதேச விவகாரங்களில் இணைந்து செயற்பட்டுள்ளன. இந்நிலையில் தொடர்ந்தும் இரண்டு நாடுகளும் இந்த விவகாரங்களில் இணைந்து செயற்படும்.

மாலைதீவின் முன்னேற்றம் மற்றும் அந்நாட்டின் எதிர்கால செயற்பாடுகளில் இணைந்து செயற்படவும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். இந்நிலையில் இலங்கைக்கு எதிராக செயற்படும் சர்வதேச சக்திகளின் இலங்கை பிரதிநிதிகள் இந்த விடயத்தில் குழப்பம் ஏற்படும் வகையில் பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடக் கூடாது.

பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் அநாவசிய நெருக்கடிகளுக்கு இடமளிக்கக் கூடாது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு நீடிக்கப் படவேண்டும் என்றார். (அ-2)

# 300 கி.மீ. அதிவேக வீதித்தொகுதி அமைக்கும் பணி 2014 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படும்

### பிரதியமைச்சர் கொத்தலாவல கூறுகிறார்

(கொழும்பு)

அதிவேக வீதியானது மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். முழு நாட்டிலும் 300 கிலோமீற்றர் அதிவேக வீதித்தொகுதி எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது வீதிகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தென் அதிவேக வீதியை நிர்மாணித்தமையினால் நேரத்தை மீதப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. தென் அதிவேக வீதி காலியிலிருந்து மாத்தளை வரைக்கும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பணிகள் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படும். அத்துடன் நாடளாவிய ரீதியில் 300 கிலோமீற்றர் அதிவேக வீதித்தொகுதி 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படும்.

தேசிய வீதியைத் தவிர எந்த வீதிக்கும் வீதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதிவேக நெடுஞ்சாலையில் இரு பக்கங்களிலும் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இரு பக்கங்களிலும் விளம்பரங்கள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாரதியின் கவனத்தைத் திசை திருப்பக் கூடாது என்ற நோக்கத்திலேயே மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதிவேக வீதிகள் நிர்மாணிக்கப்படுவது நாட்டு மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும் என்றார்.

(அ-2)

# மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு வணிகர் கழகம் தொடர்ந்தும் உதவத்தயார்

## யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சகல மாணவர்களிடமும் கல்வியறிவை வளர்த்தெடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் படித்த, பண்புள்ள, திறமையான சமுதாயத்தை உருவாக்க முடியும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ். வணிகர் கழகத்தால் கடந்த 8 ஆம் திகதி அச்செழு மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் - பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்கு கட்டாயக் கல்வி திட்டத்தை செயற்படுத்த வேண்டும். கல்வி சார்ந்த உயரதிகாரிகள் இவ்விடயத்தில் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

சகல மாணவர்களிடமும் கல்வியறிவை வளர்த்தெடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் படித்த, பண்புள்ள, திறமையான சமுதாயத்தை உருவாக்க முடியும்.

வர்த்தகர்களாகிய நாம் வெறுமனே வர்த்தக நோக்கத்தோடு மட்டும் செயற்படாது மக்கள் மத்தியில் பல்வேறு பொது வேலைத்திட்டங்களையும் செய்து வருகின்றோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் சிறுவர்களுக்கு மென பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றோம்.

கடந்த வருடம் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளோம்.

இந்த வருடமும் அந்த உதவிகளை வழங்கவுள்ளோம். அதே போன்று எதிர்கால சந்ததியினரின் கல்வி வளர்ச்சியிலும் வணிகர் கழகம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

இந்தப் பாடசாலை எம்மிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

கடந்த புலமைப்பரிசில் பரீட்சைக்கு இப்பாடசாலையில் இருந்து தோற்றிய அனைத்து மாணவர்களும் 80 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இப்பிரதேசத்தில் தொழில் நிமித்தம் பெற்றோர்கள் பிள்ளையின் கல்வியில் அக்கறை செலுத்தாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலை மாற்றப்பட்டு பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை கொண்டு பெற்றோர்கள் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# ஆண்டுநிறைவுவிழா

கோப்பாய் மக்கள் வங்கி ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சித்திர வேலாயுத சுவாமி மண்டபத்தில் கோப்பாய் மக்கள் வங்கி முகாமையாளர் ஏ.ஏ.சதீஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கௌரவ விருந்தினராக நீர்வேலி ப.நோ.கூ.சங்க பொதுமுகாமை யாளர் கே.சிவலிங்கம், யாழ் மக்கள்வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், யாழ். மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் கே.ஆர்.இராஜசேகரம், கோப்பாய் மத்தி கிராமசேவகர் எஸ்.பாலசுந்தரம்,நீர்வேலி வாழைக்குலைச் சங்கத் தலைவர் எஸ்.சுந்தரலிங்கம்.மனோலைட் உரிமையாளர் ஆர். மனோகரன், சமாதான நீதவான் எஸ்.சுந்தரலிங்கம், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.இராசமனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

# ஹிங்குரான சீனித்தொழிற்சாலை உற்பத்தி ஜூன் மாதம் ஆரம்பம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஹிங்குரான சீனித்தொழிற்சாலையின் சீனி உற்பத்தி நடவடிக்கை இவ்வருட மத்தியில் ஆரம்பமாகும் என நாடாளுமன்றில் அரசாங்கம் நேற்றைய தினம் அறிவித்தது.

தற்போது விளைச்சல் செய்யப்பட்டுள்ள கரும்பு மூலம் சீனி உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் விவசாயிகள் இது குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளனர் எனவும் அரசாங்கத் தரப்பு பிரதமகொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறினார்.

அண்மையில் நான் இத்தொழிற்சாலைக்கு சென்றேன். கரும்பு அறுவடை செய்யப்படும் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

ஜூன்மாதத்தில் நாம் சீனி உற்பத்தியை ஆரம்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துந்நெத்தி எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (அ-2)

# போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பிக்க சீரடிபாபாவை வழிபட்டார் கோத்தபாய ராஜபக்ஷ

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச இலங்கையின் 64 ஆவது சுதந்திர நாள் நிகழ்வில் கலந்து கொள்ளாமல் சீரடி சாய்பாபா கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தியுள்ளார்.

இலங்கை மீதான அனைத்துலக நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்கு வழிபாடு நடத்தவே அவர் சீரடி சாய்பாபா கோவிலுக்குச் சென்றதாக கூறப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திர நாளான கடந்த 4 ஆம் திகதி தனது மனைவி மற்றும் மகனுடன் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள சீரடி சாய்பாபா கோவிலில் அவர் வழிபாடு நடத்தியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை அடுத்து ஆட்சியில் அதிகாரம் செலுத்திவரும் கோத்தபாய ராஜபக்ஷ சுதந்திரநாள் நிகழ்வுகளில் பங்கேற்காமல் வழிபாட்டுக்காக சென்றது போர்க்குற்ற விசாரணைகள் விடயத்தில் அவர் கொண்டுள்ள அச்சத்தை பிரதிபலிப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (அ-2)

# மின்சாரக்கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா?

## ரவி எம்.பி கேள்வி



மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா என்று வினவியபோது ஐ.தே.க.வின் எம்.பி.யான ரவி கருணாநாயக்க குளிரூட்டிகளை நாளொன்றுக்கு இரண்டு மணிநேரம் நிறுத்திவைப்பதற்கு பணிக்கப்பட்டுள்ளதா என்றும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது மின்சக்தி எரிசக்தி அமைச்சரிடம் கேள்விகளை கேட்டிருந்தார்.கேள்விகளுக்கு மின்சக்தி எரிசக்தி பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர பதிலளித்தார்.

இடையீட்டுக் கேள்வியை எழுப்பிய ரவி எம்.பி.,டீசலின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது. நுரைச்சோலை அனல் மின்நிலையமும் 48 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நிலையில் குளிரூட்டிகளை நாளொன்றுக்கு இரண்டு மணிநேரம் நிறுத்தி வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளதா என வினவினார்.

கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதியமைச்சர், உங்கள் ஆட்சிக் காலம்போலமின்வெட்டுஅமுல்படுத்தப்படாது. நீர்நிலைகளில் நீர்மட்டம் குறைந்து வருகின்றது. வரட்சி அதிகரித்துள்ளது. எனினும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதில்லை என்றார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லையென மின்சக்தி பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகர நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மின்சாரத் தேவைக்கு ஏற்ப மின்சார உற்பத்தி செய்வதற்காகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின்சார உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ள போதும் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு கட்டணம் அறவிடுவதில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

அரசின் குறிக்கோளும் அதுவாகும். சிரமமில்லாத கட்டண முறையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கவே அரசு உத்தேசித்துள்ளதால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாதென பிரதியமைச்சர் கூறினார். (அ-2)

# கூரையற்ற வீடுகளுக்கு ஐம்பதாயிரம் ஓடுகள்!

அநுராதபுரம் மாவட்டத்தில் கூரையற்ற 50 ஆயிரம் வீடுகளுக்கு ஓடுகள் விநியோகிக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஓயாமடுவில் நடைபெற்று வரும் தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியை முன்னிட்டு 150 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கும் இந்த நடவடிக்கைகளைபாரம்பரியகைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதியமைச்சர் வீரசுகுமார திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதேவேளை அநுராதபுரம் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 250 விதவைகளுக்கு சுயதொழில் ஆரம்பிப்பதற்கான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி பூமியில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் காட்சிக் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்து கொண்டு உபகரணங்களை விநியோகித்து வைத்தார்.

25 இலட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள், சமையல் கலை உபகரணங்கள், போன்றன 250 விதவைகளுக்கு இதன்போது விநியோகித்து வைக்கப்பட்டன.

ஓயாமடுவில் ஆறாவது நாளாக நடைபெற்று வரும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை பார்வையிடவென நேற்று முன்தினம் மாத்திரம் ஆறு இலட்சத்துக்கும் அதிகமானோர் வருகை தந்திருந்தனர்.

அத்துடன் கண்காட்சியின் ஆறாவது நாளான நேற்றுமுன்தினம் வரை 25 இலட்சத்துக்கும் அதிக மாணவர்கள் கண்காட்சியை பார்வையிட வருகை தந்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி ஏற்பாட்டுக்குழுவின் செயலாளருமான உதயரஞ்சித் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (அ-2)

**AHAVOLI**
**Family Services Centre**
**St.Patrick's Road, Jaffna, Sri Lanka**

**AHAVOLI**
**Institute for Higher Studies offers a Diploma Course Peace Building & Community Development Practice**

The Applications are called for this course. This is a one year, week-end (Saturday & Sunday) Course that consists of 240 hours. The applicants should have the following prerequisities to apply for this course.

1. Knowledge of English as to read, write and speak.
2. A Pass in Advanced Level
3. Interested in social activities.

The candidates will have to buy special form from our office and submit it before the 20th of February 2012.

N.B. The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.

For further details please contact:
AHAVOLI
Institute for Higher Studies
Affiliated to national University, Galway
St.Patrick's Road, Jaffna.

DIRECTOR
Ref. S.J. RAJANAYAGAM

(7464)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 37


ஹிட்லரின் ஜெனரல்களான வொன் போக், ஜெர்மான் கோத், வொ... ஆகியோர் தாக்குதல் திட்டத்தை ஆராய்கின்றனர்-யூன், 1941

சோவியத்-ஜேர்மனிப் போர்முனை முழுமையாகவும் செஞ்சேனையின் உறுதியான, இடையறாது வளர்ந்து வரும் எதிர்ப்பைச் சந்தித்த எதிரி (உயர்மட்டப் படைத் தலைமையகம் போர்த்தந்திர சேமப்படைகளை இடையறாது போர்க்களத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தது) தனது முயற்சிகளை சிதறிப் போகுமாறு செய்யும்படி கட்டாயப்படுத்தப் பட்டான். எதிரித் துருப்புகளின் தாக்குதல் வேகங்கள் பெருதும் குறையத் தொடங்கின. (முதல் நாட்களில் நாளொன்றுக்கு 30 கி.மீ. தூரம் முன்னேறிய எதிரி ஜூலை நடுவில் 6-7 கி.மீ தான் முன் செல்ல முடிந்தது) பியார்னு, தார்த்தூ, ஸ்மலேன்ஸ்கிற்கு மேற்கே லூகா ஆற்றோரம் கீவிற்கு செல்லும் வழி உக்ரேன் தலைநகரிலிருந்து தெற்கே தினேப்பர் ஓரம் ஆகிய இடங்களில் எதிரி தன் தாக்குதலை நிறுத்த வேண்டியதாயிற்று. இந்த எல்லைகளில்தான் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் முடிவடைந்தன. சோவியத் இராணுவத்தின் இரண்டாவது போர்த் தந்திரப்படை வரிசையைச் சேர்ந்த உயர்மட்டப் படைத்தலைமையகத்தின் பெரும் போர்த்தந்திர சேமப் படைகள் சண்டையில் இறக்கபட்டதை அடுத்து 1941 ஆம் ஆண்டு கோடைகால- இலையுதிர்கால நடவடிக்கையின் புதியகட்டம் தொடங்கியுள்ளது.


ஜேர்மனிய ஜெனரல் ஹெர்மான் கோத் தன் நண்பனான ஜெனரல் ஹெயின்ஸ் குடேரியனுடன்-21, ஜூன், 1941

யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் போர்த் தந்திர முன் முயற்சியைக் கைப்பற்றி வெட்டுத் தாக்குதல்களையும் ஆழமாகச் சுற்றிச் செல்வதையும் பெரும் படைத் திரட்டுக்களை மூன்று பக்கங்களிலுமிருந்து சுற்றி வளைத்து செல்வதையும் பரவலாகப் பயன்படுத்திய எதிரியின் நடவடிக்கைகளுக்கு சோவியத் இராணுவம் தீவிர போரித் தந்திர தற்காப்பை பதிலாக வைத்தது. எதிரியின் தாக்குதல் வாய்ப்புக்களை சீர்குலைப்பதும் எதிரியின் முக்கியதாக்குதல் திரட்டுக்களைக் களைத்துப் போகச்செய்து அவற்றை பலமிழக்கச் செய்வதும் தான் இதன் நோக்கமாகும். கடும் தற்காப்புச் சண்டைகளில் ஈடுபட்டிருந்த சோவியத் துருப்புக்கள் தங்களிடமிருந்த நிலைகளை உறுதியோடு பாதுகாத்த அதே நேரத்தில் தேவையெனில் இடையிலிருந்த நிலைகளுக்கும் பின்னணிகளுக்கும் பின்வாங்கின.

ஏராளமான எதிர்த் தாக்குதல்களும் படைகள் மற்றும் சேனைகளின் பதிலடிகளும்- சாதரணமாக இவற்றில் டாங்கி யூனிட்டுக்கள் பங்கேற்றன- இவை சோவியத் துருப்புக்களின் தற்காப்பு நடவடிக்கைகளின் பிரிக்க இயலா அங்கமாக விளங்கின. உதாரணமாக கௌனஸ் மற்றும் கிரேத்னோ பிரதேசங்களில் இருந்து சுவாக்லி நகரை நோக்கிய திசையில் வட மேற்கு மற்றும் மேற்கு சேனைகளின் பதிலடிகளும் லியூப்ளின் மீதான தென்மேற்கு சேனையின் பதிலடிகளும் இப்படிப் பட்டவைதான்.


ஜேர்மன் டாங்கி அணிகள் முதன் முதலில் சோவியத் எல்லைக்குள் நுழையும்போது நடைபெறுகிற சமர்

## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி

சோவியத் துருப்புக்களின் பல எதிர்த் தாக்குதலைகளும் பதிலடிகளும் எதிர்ச் சண்டைகளாக சமர்களாக மாறின. 1941 ஜூன் இறுதியல் லுட்ஸ்க், ரதேஹவா, பிரோது, ரோவ்னா, பிரதேசத்தில் தென் மேற்குப் போர்முனையில் தொடங்கிய எதிர் டாங்கிசமர், யுத்தத்தின் ஆரம் பக்கட்டத்தின் மிகப்பெரும் எதிர்ச் சமாராக அமைந்தது. இதில் இருதரப் புக்களின் சார்பாகவும் 1500 டாங்கிகள் வரை கலந்து கொண்டன. சோவியத் துருப்புக்களின் முக்கிய முயற்சிகள், எதிரியின் முதலாவது டாங்கித் திரட்டை முறியடிப்பதன் மீது ஒருமுனைப்படுத் தப்பட்டிருந்தன. ஹிட்லரின் ஜெனரல் கோட் இச்சமரைப் பின்வருமாறு சித்தரித்தான்: "தெற்குப்படைத் தொகுதிக்குத்தான் மிகவும் கடினமாக இருந்தது. வட பக்க யூனிட்டுக்களின் முன் பாதுகாத்து நின்ற எதிரியின் துருப்புக்கள் எல்லையிலிருந்து திருப் பியனுப்பப்பட்டன. ஆனால், இவை திடீர்த் தாக்குதலில் இருந்து விரைவாக சரிப்படுத்திக் கொண்டு தனது சேமப் படைகள் மற்றும் உட்பகுதியிலிருந்த டாங்கிப் பிரிவுகளின் எதிர்த் தாக்குதல்களால் ஜேர்மனியத் துருப்புக்களின் முன் னேற்றத்தைத் தடுத்து நிறுத்தின. முதலா வது டாங்கிப் பிரிவைப் பிளக்குமாறு 6-வது படைக்கு இடப்பட்ட சுட்டளை ஜூன் 28 வரை நிறை வேற்றப் படவில்லை. ஜேர்மனியப்படைப் பிரிவுகள் முன்னேறும் பாதையில் எதிரியின் கடும் பதிலடிகள் பெரும் தடையாக இருந்தன."


சோவியத் ஜூனியனின் கீவ் என்ற பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள ஜேர்மனியப்படைகள் ... 1941

எதிரியால் சீர்குலைக்கப்பட்ட போர்த் தந்திரப் போர் முனையை முக்கிய திசைகளில் புனரமைத்து ஸ்திரப்படுத்துவதில் படைத் தலைமையின் போர்த் தந்திர சேமப்படைகள் பெரும் பங்காற்றின. உதாரணமாக மத்திய திசையில் மட்டும் யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் எதிரியால் குலைக்கப்பட்ட தற்காப்பை புனரமைப் பதற்காக ஜூன் 27 முதல் ஜூலை 10 வரை படைத்தலைமை 36 டிவிசன்களை மேற்கு சேனைக்கு அனுப் பியது.

பாசிஸ்டுகள் யுத்தத் தின் முதல் நாட்களில் செஞ்சேனையிடம் சந் தித்த வீரம்மிக்க எதிர்ப்பு அவர்களுக்கு எதிர்பாராததாயிருந்தது. பாசிச ஜேர்மனியப்படைத் தலைமையின் கூற்றுப்படியே யுத்தத்தின் முதல் 53 நாட்களில் மட்டும் சோவியத்- ஜேர்மனியப் போர் முனையில் ஜேர்மனி 3இலட்சத்து90ஆயிரம் போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் அதாவது பாசிச ஜேர்மனியின் காலாட்படையின் 11.4 சதவிகிதத்தை பறிகொடுத்தது. அதே நேரத்தில் போலந்து, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், யுகோஸ்லாவியா, கிரீஸ், லக்ஸம்பர்க்கில் பாசிச ஜேர்மனித் துருப்புகள் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது மொத்தமாக அவை 3இலட்சத்திற்கும் குறைவான போர்வீரர்களையும் இராணுவ அதிகாரிகளையும் மட்டும்தான் இழந்தன.


சோவியத்மீதான தாக்குதலின் முதற்கட்டத்தில் ஜேர்மன்யாரிடம்


மாபெரும் தேசபக்த யுத்தத்தின் ஆரம்பகால கட்டத்தின் பிரதான இராணுவ- அரசியல் முடிவு என்னவெனில், "மின்னல்வேக யுத்த" நடவடிக்கையின் மூலம் சோவியத் ருஷ்யாவை வெற்றி கொள்ளலாம் என்று கணக்கிட்ட ஹிட்லரின் பார்பரோஸ்ஸாத் திட்டம் முதன் முதலாகத் தீவிர விரிசல்களைத் தந்ததாகும். இழுபறியான யுத்தம் நடக்கும் என்ற போக்கு தென்பட்டது. இது பாசிச ஜேர்மனியின் திட்டங்களில் அடங்கியிருக்கவில்லை.

எல்லா போர்த்தந்திர திசைகளிலும், ஹிட்லரின் போர்த் தந்திரவாதிகள் திட்டமிட்டபடி, யுத்த நடவடிக்கைகள் நடைபெறவில்லை. பாசிச ஜேர்மனித் துருப்புக்களின் முன்னேற்றத்திற்கு மேன்மேலும் உறுதியான எதிர்ப்பு கிட்டியது. எதிரியைத் தற்காப்பிற்கு மாறும்படி சோவியத் துருப்புக்கள் அடிக்கடி நிர்ப்பந்தித்தன. "ருஷ்யர்களின் உறுதியான எதிர்ப்பு நமது இராணுவ விதிமுறைகளின் எல்லா அம்சங்களின்படியும் போரை நடத்துமாறு நம்மைக் கட்டாயப்படுத்துகிறது. போலந்திலும் மேற்கேயும் விதிமுறைக் கோட்பாடுகளிலிருந்து ஓரளவு விலகி தன்னிச்சையாக செயல்பட முடிந்தது என்றால், இப்போது இது அனுமதிக்கத்தகாதது" என்று தரைப்படைத் துருப்புக்களின் தலைமையகத் தலைவன் ஜெனரல் கால்டர் ஜூன் 29 ஆம் திகதி தனது அலுவலக நாட்குறிப்பில் எழுதினான். 1941 ஆம் ஆண்டு ஜூலை 2 இல் டியுற்ஸ்ச் ஆல்ஜிமெய்ன் சீற்டங் என்ற ஹிட்லர் பத்திரிகை பின்வருமாறு எழுதியது. "கிழக்கே நடைபெறும் சண்டைகள் முற்றிலும் விசேடத் தன்மையைப் பெற்றிருக்கின்றன. எல்லா இடங்களிலும் ருஷ்யர்கள் கடுமையான உறுதியான எதிர்ப்பைக் காட்டுகின்றனர் என்பதில்தான் கிழக்குப் போர்முனை முழுவதிலும் நடைபெறும் சமர், மாறுபடுகிறது."

(தொடரும்)

# பாராளுமன்றக்குழு உரிய முறையில் கூடுவதில்லை மக்கள் பிரச்சினை குறித்து பேச முடியாத நிலை

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் உரிய முறையில் கூடுவதில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆலோசனை குழுக்கள் மாதந்தோறும் கூட வேண்டும் என்ற போதிலும் அந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக பாடசாலை சீருடை, சமுர்த்தி, கமநல ஓய்வூதியம் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட முடியாமற் போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சபாநாயகருக்கு அறிவித்து ஆலோசனைக் குழுக்களை உரிய முறையில் கூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி இதன்போது கூறியுள்ளார்

இதேவேளை, தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழுள்ள கட்டளை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கருத்து வெளியிட்ட எதிர்க் கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெற்கு அதிவேக வீதியில் பயணிக்கும் போது அமைச்சர்களிடம் கட்டணம் அறவிடப்படுவதில்லை என தகவல் கிடைத்துள்ளதென கூறினார்.

அதிவேக வீதியில் இதுவரை 26 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவாதத்தில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் லசந்த அலகியவன்ன இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நான்கு மில்லியன் வாகனங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

சனத்தொகை மற்றும் வீதிக்கட்டமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் போது பாரிய பிரச்சினை காணப்படுவதாகவும் பிரதி அமைச்சர் கூறியுள்ளார். இதேவேளை, அதிவேக வீதியை தினந்தோறும் பயன்படுத்துவோருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்றையதினம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அதிவேக வீதியில் பயணிப்பதற்கான வேகத்தை மணித்தியாலத்திற்கு 120 கிலோ மீற்றர்களாக திருத்தம் மேற்கொள்வது மிகவும் உகந்ததாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார். (அ-2)

# மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

(கொழும்பு)

சிலாபம் மொயகந்த பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றும் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சிலாபம் காமாசியாவத்தை பகுதியைச் சேர்ந்த 30 வயதான மீனவர் ஒருவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# யாழ்.மாநகர சபை ஊழியர்கள் ஓய்வுபெற்றால் அவர்களது பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு

## மாநகர முதல்வர் தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ். மாநகர சபை ஊழியர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறுகின்ற போது அவர்களின் பிள்ளைகளுக்கு யாழ். மாநகர சபை வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். யாழ். மாநகர சபையின் தொழிலாளர்களின் வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், யாழ். மக்களின் தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன. அவர்களின் வாழ்வியல் முன்னேற்றம் கண்டுள்ளது. யாழ். மாநகர எல்லைப் பகுதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு 67 ஆயிரம் மக்கள் இருந்தனர். 2012 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் உள்ளனர்.

அந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு மாநாகர முதல்வர் என்ற ரீதியில் எனக்கு உண்டு என்றார். யாழ். நகரப்பகுதியில் வீதி அபிவிருத்தி கட்டடங்களின் தொகையும் அதிகரித்துச் செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)



இந்தியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்களும் நேற்று நாடு திரும் பியுள்ளனர்.

நிரஞ்சலா சம்பா-06 கப்பில புத்தா-04 ஆகிய மூன்று படகுகளும் அதில் பயணம் செய்திருந்த 15 இலங்கை மீனவர்களுமே கடல் மார்க்கமாக நாடு திரும்பவுள்ளனர்.


இவர்களை ஆந்திர மாநிலத்தின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் நண்பகல் 2 மணியளவில் மேற்படி மூன்று படகுகளையும் காங்கேசன்துறையிலுள்ள இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைப்பரென மீன்பிடித் துறை மற்றும் நீரியல் வளத்துறை அமைச் சின் அதிகாரியொருவர் கூறினார்.

இம் மீனவர்களை 2011 ஆம். ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி திருமலை மீன் பிடித்துறைமுகத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்றிருந்தனர்.

இவர்கள் ஆந்திரா கடல் எல்லைக்குள் அத்துமீறி மின்பிடிக்கச் சென்றார்களென்ற குற்றச்சாட்டில் ஆந்திர அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஆந்திர நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட மேற்படி இலங்கை மீனவர்களை அந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைய அபராதம் செலுத்திய பின்னர் விடுதலை செய்யப்பட்டிருப்ப தாகவும் அவ்வாதிகாரி குறிப்பிட்டார். (அ-2)

# மஹர தொகுதி அமைப்பாளராக பிரதித் தலைவர் கரு ஜயசூரிய



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மஹர தொகுதி அமைப்பாளராக கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை மஹர தொகுதி அமைப்பாளராக ஜோர்ஜ் யூ பெரேரா செயற்பட்டு வந்தார். இதனிடையே கோட்டை தொகுதி அமைப்பாளராக ஹர்ச டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அந்த தொகுதியின் அமைப்பாளராக சிரால் லக்திலக்க செயற்பட்டார்.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண மற்றும் அசோக்கே அபே சிங்க ஆகியோருக்கு அமைப்பாளர் பதவிகள் வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# பலிபீடம் செல்ல இருந்த 10 ஆடுகள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

கால் நடை மிருக வைத்தியரின் அனுமதியின்றி மஸ்கெலியாவிலிருந்து நீர்கொழும்புக்கு பத்து ஆடுகளை லொறியொன்றில் ஏற்றிச் சென்று கொண்டிருந்த போது மஸ்கெலியா பொலிஸார் அந்த ஆடுகளை மீட்டுள்ளதோடு சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஆடுகள் மவுசாகெல பகுதி தோட்டமொன்றிலிருந்து நீர்கொழும்புக்கு இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மஸ்கெலியா பிரதேசத்தில் வைத்து ஆடுகளையும் லொறியையும் கைப்பற்றிய மஸ்கெலியா பொலிஸார் சந்தேக நபர்களை ஹற்றன் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# திருப்பழனி முருகனுக்கு நீர் விநியோகத் திட்டம்

(வவுனியா)

வவுனியா சிதம்பரபுரம் கற்குளம், கிராமத்தில் மலைமேல் வீற்றிருக்கும் திருப்பழனி முருகன் ஆலயத்திற்கான நீர் விநியோக வசதிகள் செய்யப்பட்டு அதன் அங்குரார்ப்பண வைபவம் தைப்பூச விழாவின் போது நடைபெற்றது.

இந்த ஆலயத்திற்கான ஆழ் குழாய்க் கிணறு மலையடிவாரத்தில் நிறுவப்பட்டு அதற்கான நீரிறைக்கும் இயந்திரம், குழாய் இணைப்புக்கள், தண்ணீர்த் தாங்கி என்பன வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலயத்திற்கான நீர்வசதியுடன் கற்குளம் கிராமம் முழுவதற்கும் நீர்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தினர் அதற்கான உதவிகள் பங்களிப்பையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கான நடவடிக்கையை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர். (அ-2)





# அம்புலி மாமா கதைகள்

# தன் வினை தனக்கே!


பிரமதத்தன் காசியை ஆண்ட போது அவனிடம் பிங்களன் என்ற புரோகிதர் இருந்தார். அவர் நிறம் வெள்ளை. வழுக்கைத் தலை. பொக்கை வாய். அவரது சீடராக போதிசத்வர் இருந்தார். அவரோ இளைஞர்.

பிங்களனுக்கு ஒரு மைத்துனர் இருந்தான். அவனும் பிங்கள



னைப்போல வழுக்கைத் தலை, பொக்கை வாயுடன் கிழவன் போல இருந்தான். பிங்களனைப்போல வேத சாஸ்திரங்களையும் கற்றவன். இவனும் பிங்களனும் தாம் நிறைய கற்றதால் தாமே உயர்ந்தவர் என எண்ணி வந்தனர். அதனால் அவர்கள் ஒருவர் மீது மற்றவர் பொறாமைப்பட்டு வந்தார்கள். பிங்களன் தன் மைத்துனனை எப்படியாவது ஒழித்து விட வேண்டும் என முயன்றான். ஆனால் முயற்சி பலிக்கவில்லை. முடிவில் அவர் தன் மைத்துனனை கொல்ல ஒரு திட்டம் போட்டார். அவர் மன்னனிடம் போய் "அரசே! தாங்களும் இந்த காசி நகரமும் உயர்ந்து விளங்கிய போதிலும் இந்த நகர் கோட்டையின் அமைப்பில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை உடனடியாக நீக்கினாலே நம் நகருக்கு நல்லது. ஏற்படும்" என்றார்.

காசி மன்னனும் "இதற்கு என்ன செய்யவேண்டும்" என்று கேட்கவே பிங்களனும் "முதலில் கோட்டைத் தெற்கு வாசலை இடிக்க வேண்டும். பிறகு நல்ல கலவை கொண்டு புதிய வாசலை



அமைத்து நகர தேவதைகளுக்கு பலி கொடுக்க வேண்டும். அப்போது தான் இந்த நகரம் புனிதமாகும். சீரும் சிறப்புடன் இது விளங்கிப் புகழ்பெறும்" என்றார். மன்னனும் பிங்களனிடமே அந்த வேலையைச் செய்யுமாறு கூறினான். பிங்களனும் அதனை இடித்துப் புதிய கதவையும் நிலைக்காலையும் தயாரித்து விட்டார். பிறகு அவர் மன்னனிடம் "அரசே! புதிய கதவும் நிலைக்காலும் தயாராகி விட்டது. நிலைக்கால் வைக்க நாளைய தினம் நல்ல நாள். அதற்கு தேவையான உயிர் பலி கொடுக்க அனுமதி வேண்டும்" என்றார்.

"உயிர் பலியா அதற்கு என்ன செய்யவேண்டும்?" என காசி மன்னன் கேட்கவே பிங்களனும் "வழுக்கைத் தலை பொக்கை வாயுடன் உள்ளவரும் வேத சாஸ்திரங்களை நன்கு அறிந்தவருமான ஒரு பிராமணரை பலி கொடுக்க வேண்டும். அந்த பிராமணனின் எலும்புகளை அந்த நிலைக்கால் வைக்கும் இடத்தில் குழி ஆழமாக புதைத்து அதன் மீது நிலைக்காலை வைத்து கதவை பொருத்தினால் ஷேமம் ஏற்படும்" என்றார். மன்னனும் "சரி அப்படிப்பட்ட பிராமணனைக்கண்டு பிடித்து நீங்களே அவரை அழைத்து வந்து பலி கொடுத்து வாசலை அமையுங்கள்" எனக்கூறி விட்டான்.

பிங்களன் தன் மைத்துனனை ஒழிக்க அரசனின் அனுமதியும் கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியோடு வீட்டிற்குப் போனார். தன் மனைவியிடம் அவர் "நாளையோடு உன் அண்ணனின் ஆயுள் முடியப் போகிறது. அவனை புதிய வாசலுக்கு நானே அழைத்துப் போய் பலியிடப்போகிறேன்" என மார்தட்டிக் கூறினார்.

"என் அண்ணனை பலி இடுவதா? இதற்கு மன்னன் எப்படி ஒப்புதல் அளித்தார்?" என்று அவள் கேட்டாள். பிங்களனும் "நான் இன்ன அடையாள முள்ளவனை பலியிட வேண்டும்" என அரசனிடம் கூறினேன். அவரும் அப்படிப்பட்டவனை தேடிப் பிடித்து பலியிடச் சொல்லி விட்டார்.

நாளை உன் அண்ணனை காட்டி "இதோ வழுக்கைத் தலையோடு பொக்கை வாயுடன் கூடிய பிராமணன் எனக்கூறி பலியிடப் போகிறேன்" என்றார்.

பிங்களனின் மனைவி தன் கணவரிடம் எதுவும் பதில் கூறாமல் தன் அண்ணனைத் தனியாக அழைத்துப் போய் இரகசியமாக எல்லாம் சொல்லி அவனை விடிவதற்குள் ஊரை விட்டே ஓடிப்போய் விடும்படி கூறினாள். அவனும் தன் போல உருவில் அவ்வூரில் இருந்த மற்ற மூவரையும் அழைத்துக் கொண்டு இரவோடு இரவாகக் காசியை விட்டு வெளியேறி எங்கோ போய்விட்டான்.

மறுநாள் பிங்களன் மன்னனிடம் போய் "பலிக்கு ஏற்றவன் இன்ன இடத்தில் இருக்கிறான். அவனை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்" எனக்கூறி தன் மைத்துனன் உள்ள இடத்தைக்கூறினார். மன்னனும் தன் வீரர்களை அனுப்பினான். வீரர்களும் போய் விசாரித்து விட்டு



வந்து மன்னனிடம் "அரசே அங்கிருந்தவர் நேற்றிரவே நாட்டைவிட்டு அயல் நாட்டிற்குக் கிளம்பிப் போய் விட்டார்" என்று தெரிவித்தார்கள்.

அப்போது மன்னன் "அடடா! இப்போது என்ன செய்வது? குறித்த நல்ல முகூர்த்தவேளை நெருங்குகிறதே" என்றான். அப்போது மந்திரிகள் "இதில் என்ன தடை உள்ளது? நம் பிங்களனிடமே அவர் கூறிய இலட்சணங்கள் எல்லாம் உள்ளன.


அவரையே பலி கொடுத்து விடலாம். நீங்கள் வேறு புரோகிதரையும் நியமித்துக் கொள்ளலாம். இவரது சீடர் இருக்கிறார். அவர் இந்தப்பதவிக்கு ஏற்றவர்" என்றனர். மன்னனும் உடனே பிங்களனின் சீடரான போதிசத்வரை அழைத்து "இன்று முதல் நீங்கள் தாம் அர சாங்க புரோகிதர். இந்த பிங்களனை அவர் குறித்துக் கொடுத்த இந்த நல்ல முகூர்த்த வேளையில் முறைப் படி பலி கொடுத்து இவரது எலும்பு களை எடுத்துப் புதைத்து அந்த இடத்திற்கு தெற்கு வாசலை நிர்மாணியுங்கள்" என்றான்.

அந்த சீடரும் தெற்கு வாசலுக்கு போனார். அரசாங்க வீரர்கள் பிங்களனைப்பிடித்து நீராட்டிப் பலியிட மலர் மாலைகள் போட்டு அலங்கரித்தார்கள். அவரைக்கட்டி ஓரிடத்தில் வைத்து விட்டு தெற்கு வாசலில் அவர்கள் குழிதோண்டலானார்கள்.

சீடரான போதிசத்வர் பிங்களனைக் கொண்டு வரச் சொன்னார். குழியில் பிங்களனை இறக்கி பலியிட வேண்டும். குருவும் சீடரும் குழியில் இறங்கியதும் பிங்களன் போதிசத்வரிடம் "நான் ஒருவனைப்பலியிட நினைத்தேன். ஆனால் என் தலைவிதி! இப்போது நானே பலியாகிறேன்" என்று கூறிக்கண்ணீர் வடித்தார். போதிசத்வரும் "ஐயா, வேண்டுமென்றே பிறருக்கு கெடுதல் நினைப்பவன் தானே அக்கெடுதலை அனுபவிக்கிறான். நீங்கள் கவலைப்படாதீர்கள். இப்போது நல்ல முகூர்த்தம் இல்லை என்றும் இரவு பன்னிரெண்டு மணிக்குத் தான் உள்ளது என்றும் சொல்லி விடுகிறேன். பிறகு ஏதோ ஒரு வழி செய்து உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்றார்.

அதன்படியே போதிசத்வர் முகூர்த்த வேளையில் மாற்றம் செய்தார். பிங்களனை இரவோடு இரவாகத் தப்பி ஓடச் செய்து விட்ட அவர் இறந்துபோன ஒரு ஆட்டின் எலும்புகளை எடுத்து வந்து வெட்டிய குழியில் போட்டுப் புதைத்து விடிவதற்குள் முன் தெற்கு வாசலை கட்டியும் விட்டார்.

# வடபகுதி வேளாண்மையும் அதுசார்ந்த முதலீடுகளும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

18- II

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வடபகுதியின் அபிவிருத்திப் பாதையில் தடைகளகன்று பயணிக்க ஆரம்பித்திருக்கும் மக்களுக்கு அவர் தம் பயணத்துக்கான பாதைகள் செப்பனிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எந்தவொரு அபிவிருத்திக்கும் போக்குவரத்து அவசியம். அதிலும் சுலபமான போக்குவரத்து மிகவும் அவசியமாகும்.

இதனை மையமாக வைத்து ஏ9 பாதை அகலிப்பும் அதனுடனிணைந்ததாக யாழ்.குடாநாட்டில் பருத்தித்துறை, பலாலி, காங்கேசன்துறை வீதிகளின் அகலிப்பும் காப்பெற் மயமாதலும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன.

குறுக்காக பல வீதிகளும் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இப்படியொரு மெருகேற்றல் நிகழ்வுகளுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக செம்மணி பாதை, கந்தர்மடம் குறுக்குப் பாதை என பல பாதைகளின் செப்பனிடல் ஒன்று



சேர நடைபெற்றாலும் பாடசாலைகளுக்கான பாதைகள் பல இந்த இடர்பாட்டில் உபாதைகளாக குன்றும் குழியுமாக பயணிப்போரை உலுக்கியெடுத்து விடுகின்றன.

அபிவிருத்தி பாதையில் இவ்வாறான இடர்நிலைகள் வருவது சாதாரணமெனிலும் வழமையான அவசரமான பயணத்தில் இப்போது இடர் தருவனவாக இவை அமைகின்றன.

இங்கிருக்கும் அனைத்து பாதைகளும் செப்பனிடப்பட்டு பயணிப்பதற்கு இலகுவாக்கப்படுதல் அவசியமென இங்கிருக்கும் அனைவரும் உணரத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில் வீதி கட்டுப்பாடுகளும் விதிகளும் முறையாக கடைப்பிடிக்கப்படவும் வேண்டும் எனவும் எண்ணுகின்றனர். இதுகாலும் நினைத்தபடி ஓடிய வாகனங்களனைத்தும் வேகக் கட்டுப்பாட்டை உணர்ந்து நின்று நிதானித்து செல்ல பழக வேண்டும். திறந்த சந்தைக்குள் நுழைந்த எருது போல வாகனங்கள் தான் நினைத்தபடி போகாதாவாறு வழிமுறைகள் ஏற்படுத்தப்படுவது அவசியம். வீதி கண்காணிப்பு இன்னும் உயர்வடைய வேண்டும்.

பாதை அகன்று பலம் மிக்கதாக மாறி வருவது புலரது வாழ்க்கைப் பாதையின் வாயிற்கதவை திறந்துவிட்டிருக்கின்றது எனலாம். இதில் வடபகுதி மக்களது வாழ்வாதாரம் முன்னேற்றப்படுவதும் இளைய சமூகத்தினது வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படுவதும் சாத்தியமாகும் எனலாம்.

ஆனால் இங்கே எங்கெழும் வாய்ப்புக்கள் தங்களுக்கானதாக இல்லாது தென்பகுதியிலிருந்து வருபவர்களுக்கானதாய் உருப்பெறும் போதுதான் இவை பிரச்சினைகளாக உருவெடுக்கும். இரு பகுதியுமிணைந்த செயற்பாட்டுக்கு வாய்ப்பதிகம்.

### பாதையின் தேவை உலக வர்த்தகத்துக்கான பாதை

வடபகுதியில் உற்பத்தியாகும் தரம்மிக்க பொருட்களை உலக சந்தையில் உலாவரச் செய்வதற்கு பாதையின் தேவை இன்றியமையாதது. இப்பொருட்களின் தன்மைக்கேற்ப கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ இங்குள்ள பொருட்கள் உலக சந்தையில் இடம்பிடிக்க வேண்டும்.

உள்ளூர்தரம் உலகத்தரத்திற்கு உயர்ந்திட முதலீடுகள் முனைந்திடலாம். இதற்கு தொழில்நுட்பத்தினது தேவையும் அதனைப் பயன்படுத்தும் இயந்திரங்களது அவசியமும் உணரப்பட்டிருக்கிறது. குறிப்பாக வேளாண் விளைபொருட்களை பதப்படுத்தல், மதிப்பேற்றஞ் செய்தல், பயன்தகு புத்தாக்கங்களாக புதுவகை உணவுகளை உருவாக்குதல், கவர்ச்சியாக பொதி செய்தல் என்பவற்றுக்கூடாக அவற்றினது சந்தைப்படுத்த லுக்கான தரத்தை ஏற்படுத்தல் இங்கே முன்னிலைப் படுத்தப்படுகின்றது.

எது எவ்வாறாயிருப்பினும் எங்களூரில் உற்பத்தியாகும் பொருட்களைத் தரமுயர்த்தி உலக சந்தையில் போட்டிபோட வைத்திடல் வேண்டும்.

எமக்கான உலக சந்தையாக இங்கிருந்து புலம் பெயர்ந்து உலகம் பூராகவும் வாழும் எம்மக்கள் இன்னும் தங்களது தாய்நாட்டின் நினைப்பிலே, தாய்நாட்டின் விழுமியங்களுடன் வாழ்பவர்களுக்கு யாழ்ப்பாணத்துப் பொருட்கள் என்பதில் அலாதிப் பிரியம். இவர்களுடன் இங்குள்ள எம்மினிய முதலீட்டாளர்களுமிணைந்து இவ்வர்த்தகத்தில் ஈடுபடமுடியும்.

வடபகுதி உலக வர்த்தகத்துக்கான பாதை இங்கிருக்கும் கப்பல் மற்றும் விமான நிலையத்தினூடாக திறக்கப்படும் போது எதிர்பார்த்திருக்கும் வாய்ப்புக்கள் பெருகும். பொருட்களின் ஏற்றுமதியும் அதிகரிக்கும். இங்கே நாமெல்லோரும் இன்னொன்றையும் கவனித்திருத்தல் அவசியம். உலக வர்த்தகத்தை முன்னிலைப்படுத்தும்போது உள்ளூர் சந்தையை வெளிநாட்டுப் பொருட்களினால் நிரப்பவழி செய்துவிடக் கூடாது. வெளிநாட்டு மோகத்தினுள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் எம்மினிய உறவுகளுக்கு எங்களூர் பொருட்களின் கவனஈர்ப்பு குறைவாகவே இருக்கும்.இதுவே தற்போதுள்ள நிலைவரக் காரணமும் கூட. வாழ்க் கைச்செலவுச் சுட்டெண் யாழ்ப்பாணத்தில் உயர்வடைய முழுக்க முழுக்க இறக்குமதியாகும் பொருட்களும் ஏற்றுமதியேதுமில்லாத தன்மையுமே காரணம்.புத்திஜீவிகள் பலரைக்கொண்ட இப்பிரதேசம் இன்னும் உயர்வடைய நிறையவே உழைக்கவேண்டியதாய் இருக்கிறது.

உலக வர்த்தகத்தக்கான பாதை உள்ளூரிலே திறந்தால் இதற்கான முதலீடுகளுக்கும் நிறையவே வாய்ப்புக்களுண்டு.வாய்ப்புக்கள் வசதிகள் என ஒருமித்துப் பார்த்தால் வடபகுதி அபிவிருத்திக்கான பாதை உள்ளூரிலே திறக்கப்பட்டு இங்கிருந்து பிறதேசங்களுக்கு எங்களூர் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.உலக வர்த்தகத்துக்கான பாதை திறந்து வழி பிறந்தால் அதுவே இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திறவு கோலாகும் என நம்பலாம்.

ஆங்காங்கே வீடுகள், கோவில்கள்,கடைகள், மதில்கள் இன்னும் பல ஆண்டுகளாக உயர்ந்தெழுந்த மரங்கள் அனைத்தையும் இடித்து தள்ளி வீதிகள் அகலித்து செல்வது இப்பிரதேசத்து மக்களது ஒருமித்த செய்தியாக அனைவரும் காத்திரமான அபிவிருத்தியை விரும்புவதாக கொள்ளலாம்.ஆனால் அந்த அபிவிருத்தியினூடாக வளங்களை பாதுகாப்பதும் வினைத்திறனாக பயன்படுத்துவதும் முன்னிலைப்படுத்த வேண்டுமேயொழிய வளங்களை சுரண்டுதலுக்கு இடமளிக்கக் கூடாது.இது விடயத்தில் அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவோர் என்றுமே கரிசனை கொள்வது நல்லது. இங்குள்ள வளங்கள் இத் தேசத்திற்குரியதுஎன்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட் டில் என்பதை எமக்காக சொல்லிச் சென்ற செய்தியாக நாமும் பார்ப்போமா? ஒற்றுமையே உயர்வான சக்தி. (தொடரும்)

## இலங்கையின் ரூபா மீண்டும் மதிப்பிறக்கம்

(கொழும்பு)

அமெரிக்க டொலர்கள் பெறுமதிக்கு இலங்கையின் ரூபா 30 சதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்குள் ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்யும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஏற்கனவே 20 சதம் என்ற அடிப்படையில் இரண்டு தடவைகள் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளன.இதன் அடிப்படையில் ரூபாயின் பெறுமதி இதுவரையில் 70 சதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.(அ-2)

## பம்பலப்பிட்டியில் ஒருவர் அடித்துக்கொலை

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவர் பொல்லால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான குறித்த நபர் பம்பலப்பிட்டி வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் விழுந்து கிடந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.தாக்குதலுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாத நிலையில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## சன் சீ கப்பலில் கனடா சென்ற புலிச்சந்தேகநபர் கைதானார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்ட இலங்கையர் ஒருவரை கனடா பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்..

கடந்த ஆண்டு எம்.வீ.சன்சீ கப்பல் மூலம் கனடாவுக்கு சென்ற 492 அகதிகளுடன் குறித்தநபரும் இருந்ததாகவும் இது தொடர்பில் நேற்று முன்தினம் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்களை மறுத்த குறித்த நபர் புலிகளுடன் வெளிநடுகளுக்கு சென்றிருந்தமை தொடர்பிலான பத்திரிகை செய்தி ஆவணங்களை காண்பித்த போது ஒத்துக் கொண்டதுடன் பின்னர் தான் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக செல்லவில்லை எனவும் அவர்களுடன் பணிக்காக சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து கனேடியப் பொலிஸாரிடம் குறித்த நபர் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர் எனத் தடுத்து வைக்குமாறு கனேடிய எல்லைப் பாதுகப்பு சபையின் சட்டத்தரணி ஜெனீபர் ப்ரைபர்க் கோரியுள்ளார்.

எம்.வீ.சன்சீ. கப்பல் மூலம் கனடாவிற்கு அகதிகளாகச் சென்ற இலங்கையர்களில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் தடுத்து வைக்கப்படுகின்ற முதலாவது இலங்கை அகதி இவராவார்.

மேலும் விசாரணைகள் நடத்தப்படாமல் பலர் இன்னும் தடுப்புக் காவலில் உள்ளதாகவும் அவர்களில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# சுதந்திர தினத்தில் பொன்சேகா விடுவிக்கப்படுவார் என நம்பினோம்

## நம்பிக்கை வீண் என்கிறார் சுமங்கல தேரர்

(கொழும்பு)

இலங்கையின் 64 ஆவது சுதந் திரதினத்திலாவது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என மக்கள் பெரிதும் எதிர்பார்த்ததாக ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மக்களின் எதிர்பார்ப்பு பூர்த்தி செய்யப்படவில்லை என வலப்பனே சுமங்கல தேரர் குற்றம் தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்தின் முன்னணி வழிகாட்டியான சரத் பொன்சேகா தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக சுதந்திரத்தைப் பறித்து நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் சென்ற விடுதலைப்புலி தலைவர்கள் சுகபோகங்களை அனுபவிக்கின்றனர் சுதந்திரமாக சுற்றித் திரிகின்றனர்.

இந்த நாட்டுக்காக பல்வேறு தியாகங்களைச் செய்த சரத் பொன் சேகாவை விடுதலை செய்ய வேண்டும் என்ற கருணை எண்ணம் இன்னமும் இந்த அரசாங்கத் திற்கு ஏற்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(அ-2)

# இந்திய பிரஜைகள் நால்வர் வாகரையில் கைதாகினர்

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் வந்து மட்டு வாகரைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக தொழில் புரிந்து வந்த இந்தியப் பிரஜைகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் தமிழகத்தை சேர்ந்த இந்தப் பிரஜைகள் நால்வரில் மூவர் வாகரை சுற்றுலா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மற்றைய நான்காவது நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதத்துடன் ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-2)

# ஈழத்தமிழர்களின் படுகொலையை சித்திரிக்கும் கண்காட்சி டென்மார்க்கில்

(கொழும்பு)

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினத்தை கண்டித்து கவனயீர்ப்புக் கண்காட்சி டென்மார்க் கொல்பேக் நகரில் அண்மையில் நடைபெற்றது.

சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழினம் சுதந்திரத்தை இழந்து நிற்கின்றது. ஈழத்தமிழர்கள் இன்றும் மரணப் போராட்டத்தில் நிற்கின்றனர் என்பதனை டென்மார்க் மக்களுக்கு இந்தக் கண்காட்சி எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் தாங்கி நிற்கும் இக்கண்காட்சியை டெனிஸ் மக்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டனர்.

மேலும் சனல் 4 இல் வெளிவந்த கொலைக்களம் தொகுப்பு அடங்கிய ஒளித்தட்டுக்கள் டெனிஸ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(அ-2)

# ஐரோப்பாவின் ஐந்து நாடுகளில் புலிகள் சார்பான பாடசாலைகள்

## திவயின தகவல்

(கொழும்பு)

ஐரோப்பாவின் ஐந்து நாடுகளில் 420 தமிழீழ விடுதலைப் புலிப் பாடசாலைகள் இயங்கி வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் புலம்பெயர் மக்களினால் இந்தப் பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஜேர்மன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் இந்தப் பாடசாலைகள் இயங்கி வருகின்ற தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு முதல் இருபத்தொன்று வயது வரையிலான 20 ஆயிரம் மாணவர்கள் இந்தப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர் எனவும் பாடசாலை மாணவர்களிடம் அறவீடு செய்யப்படும் நிதி புலிகளின் சர்வதேச வலையமைப்பு பயன்படுத்துகின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்ச் சோலை என்ற பெயரில் இந்தப் ப்ாடசாலைகள் இயங்கி வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மக்களுக்கு எதிராக ஐரோப்பிய வாழ் தமிழ் சிறுவர்களை தூண்டும் வகையில் பாடங்கள் போதிக்கப்படுவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-2)

# 2012.02 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1531-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றி மன்னன் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

★ 1659-சுவீடன் படைகளின் கோப்பன்ஹேகன் நகரத் தாக்குதல் பலத்த உயிரிழப்புக்களுடன் முறியடிக்கப்பட்டது.

★ 1752-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது மருத்துவமனை பென்சில்வேனியாவில் திறக்கப்பட்டது.

★ 1809-ரொபேர்ட் ஃபுல்ட்டன் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1814-நோர்வேயின் விடுதலை அறிவிக்கப்பட்டது.

★ 1826-லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகம் என்ற பெயருடன் அமைக்கப்பட்டது.

★ 1873-ஸ்பானிய உயர் நீதிமன்றம் (Cortes) முதலாம் அமெடியஸ் மன்னனை பதவி விலக்கி ஸ்பெயின் நாட்டைக் குடியரசாக அறிவித்தது.

★ 1919-பிரீட்ரிக் எபேர்ட் ஜேர்மனியின் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

★ 1929-இலாத்தரன் உடன்படிக்கை மூலமாக வத்திக்கான் நகர் உருவானது.

★ 1933-மகாத்மா காந்தி ஹரிஜன் என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூரில் பூக்கிட் டீமா என்ற இடத்தில் நேச நாடுகள் அணிக்கும் ஜப்பானுக்கும் இடையில் சமர் நிகழ்ந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: யால்ட்டா உச்சி மாநாடு முடிவடைந்தது.

★ 1953-சோவியத் ஒன்றியம் இஸ்ரவேலுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.

★ 1960-சீன எல்லையில் நடந்த தாக்குதல் ஒன்றில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

★ 1964-சைப்பிரசில் கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையில் லிமசோல் என்ற இடத்தில் சமர் இடம்பெற்றது.

★ 1964- சீனக் குடியரசு (தாய்வான்) பிரான்சுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டது.

★ 1968-இஸ்ரேல்- ஜோர்தான் எல்லைச் சண்டை ஆரம்பித்தது.

★ 1971-ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ஒன்றியம் உட்பட 87 நாடுகள் சர்வதேச நீர்ப்பரப்பில் அணுவாயு தத் தடையைக் கொண்டுவர முடிவெடுத்தன.

★ 1973-வியட்நாம் போர்: அமெரிக்கப் போர்க்கைதிகளின் முதலாவது தொகுதியை விடுவிக்கும் நிகழ்வு வியட்நாமில் இடம்பெற்றது.

★ 1979-அயதொல்லா கொமெய்னியின் தலைமையில் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றி அடைந்தது.

★ 1990-தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் விடுதலையானார்.

★ 1997-டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் விண்வெளித் தொலைக்காட்டியைத் திருத்தும் நோக்கில் விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 2005-ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.

★ 2008-கிழக்குத் திமோரின் ஜனாதிபதி ஜொசே ரமோஸ் ஹோர்ட்டா அவரது வீட்டில் வைத்து தீவிரவாதிகளால் சுடப்பட்டு படுகாயமடைந்தார்.

### பிறப்புக்கள்

★ 1917-சிட்னி ஷெல்டன், அமெரிக்க எழுத்தாளர் (இ.2007)

★ 1924-வி.வி.வைரமுத்து, நடிகமணி, ஈழத்தின் நாட்டுக்கூத்து நடிகர் (இ.1989)

★ 1964-சேரா பேலின், அலாஸ்கா மாநில ஆளுநர்

### இறப்புக்கள்

★ 1650-ரேனே டெஸ்கார்ட்டஸ், தத்துவ ஞானி, கணித மேதை (பி.1596)

★ 1693-ஜான் டி பிரிட்டோ, இயேசு திருச்சபை மதப் போதகர் (பி.1647)

★ 1713-ஜகாந்தர் ஷா, முகலாய அரசன் (பி.1664)

★ 1946-மா சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை (பி.1860)

★ 1948-செர்கீ ஐசென்ஸ்டைன், ரஷ்யத் திரைப்பட இயக்குநர் (பி.1898)

★ 1973-ஹான்ஸ் ஜென்சன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (பி.1907)

★ 19??-சி. சுந்தரலிங்கம், அடங்காத் தமிழன், ஈழத் தமிழ் அரசியல்வாதி

★ 1978-ஹரி மார்ட்டின்சன், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் (பி.1904)

★ 1991-ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1922)

★ 2006-பெக்கி கிரிப்ஸ் அப்பையா, எழுத்தாளர் (பி.1921)

★ 2007-சாகரன், தமிழிணைய ஆர்வலர் (பி.1975)

### சிறப்பு நாட்கள்

★ ஜப்பான்- நிறுவன தினம்


★ ஈரான்- இஸ்லாமியப் புரட்சி தினம் (1974)

★ கமரூன்- இளைஞர் தினம்

★ ஐக்கிய அமெரிக்கா- கண்டுபிடிப்பாளர் தினம்

★ பொஸ்னியா- சுதந்திர தினம்


★ வத்திக்கான் நகரம்- சுதந்திர தினம் (1922)



★ 1847- அமெரிக்க கண்டுபிடிப்பாளரும் உலகிற்கு மின்னொளியூட்டியவரும் தொழில் அதிபருமான தோமஸ் அல்வா எடிசனின் பிறந்த தினம். (இ.1931)

# அதிசய உலகம்...

## எண்ணெய் பீப்பாய்களால் தயாரிக்கப்பட்ட நவீன படகு




இந்த வருடம் பெரும் வெள்ளத்தால் உலகம் அழியப் போவதாக நம்பும் சீனாவை சேர்ந்த செல்வந்தர் ஒருவரின் உத்தரவின் பேரில் 30 அடி நீளமான நோவாவின் படகு ஒன்றை வெல்டிங் கலைஞர் ஒருவர் தயாரித்துள்ளார்.

பைபிளின்படி உலகெங்கும் பாரிய வெள்ளம் ஏற்பட்ட போது நோவா தயாரித்த படகொன்றில் ஒவ்வொரு உயிரினத்தினதும் தலா ஒரு சோடி அடைத்து வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதால் அந்த உயிரினங்கள் காப்பாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேபாணியிலேயே மேற்படி செல்வந்தரும் தனது குடும்பத்தினரை காப்பதற்காக படகொன்றை உருவாக்கியுள்ளார்.

சீனாவின் மத்திய பகுதியில் உள்ள ஹெனான் மாகாணத்தைச் சேர்ந்த கோஜியான் எனும் இந்த வெல்டிங் கலைஞரான கோ ஜிஹான், எண்ணெய் பீப்பாய்கள் மூலம் இந்த படகை தயாரித்துள்ளார். 30 அடி நீளமான இந்த படகில் சமயலறை, படுக்கையறை என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீர் புக முடியாத இந்த அறைகளில் கதவுகள், ஜன்னல்கள் உள்ளன.

## மிகப் பெரிய வீடியோ கேம் கட்டுப்படுத்தி



உலகின் மிகப் பெரிய வீடியோ கேம் கட்டுப்பாட்டுக் கருவிலண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது உலகின் மிகப் பெரிய வீடியோ கேம் கட் டுப்பத்தியென கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முற்றுமுழுதாக இயங்கும் நிலையிலுள்ள இச்சாதனம் லண்டனில் உள்ள லிவர்பூல் நிலையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இவ் வீடியோ கேம் கட்டுப்படுத்தி கருவியானது 12 அடி × 5 அடி 3 அடி × 1 அடி 8 அங்குல அளவுடையது. 265 இறாத்தல் எடை கொண்ட இக்கருவியை செய்வதற்கு 5 மாதங்கள் தேவைப்பட்டன. சுமார் 4 ஆயிரம் ஸ்ரேலிங்பவுண்கள் இதற்கு செலவாகியுள்ளன.

நெதர்லாந்து டெல்ப்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் குழுவொன்று இவ்வீடியோ கேம் கட்டுப்படுத்திக் கருவியை உருவாக்கியுள்ளது.

## 102 ஆவது பிறந்ததினத்தில் இரட்டையர்கள்-கின்னஸில்



102 ஆவது தினத்தை கொண்டாடிய இரட்டை சகோதரிகள் இருவர் உலகின் மிக வயதான இரட்டையர்கள் என்று கின்னஸ் உலக சாதனை நூல் வெளியீட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

ஈனா புக் மற்றும் லில்லி மில்வார்ட் ஆகிய இச்சகோதரிகள் 102 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடியுள்ளனர். இவர்கள் 1910 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 10 ஆம் திகதி பிறந்தவர்களாவர்.

இவர்களுக்கு 102 ஆவது பிறந்த தினப் பரிசாக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின் பிரதிகள் வழங்கப்பட்டன. இவர்களில் ஒருவருக்கு 65 வயதில் மகளும் உள்ளார். அவருடைய மகள் கருத்து தெரிவிக்கையில், எனது தாய் கிறிஸ்மஸ் தினத்தன்று கீழே விழுந்து இடுப்பில் முறிவு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் உலகின் மிக வயதான இரட்டைச் சகோதரிகள் என்ற சாதனையை நிலைநாட்டியதை எண்ணி அவர் உற்சாகமடைந்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

## காந்த சக்தி கொண்ட சிறுவனின் உடல்



பிரேஸிலைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் உடலில் இயல்பாகவே உலோகப் பொருட்களை ஈர்க்கும் தன்மையைக் கொண்டுள்ளான்.


பிரேஸிலின் வடபகுதியிலுள்ள சிறிய நகரான மொஸ்ரோவைச் சேர்ந்த போலோ டேவிட் அமோரிம் எனும் 11 வயதான சிறுவனே மேற்படி விசித்திர காந்த ஈர்ப்பு சக்தியைக் கொண்டு விளங்குகின்றான்.

இச்சிறுவனின் உடலில் கரண்டிகள், கத்தரிக்கோல், மற்றும் புகைப்படக்கருவிகள் ஆகியன ஈர்க்கப்பட்டு அப்படியே ஒட்டிக் கொள்கின்றன.

எனது மகன் திடீரென கத்தியொன்றையும் முள்ளுக்கரண்டியொன்றையும் எடுத்து வரும்படி என்னிடம் கேட்டான்.

நான் அவற்றை கொண்டுவந்து கொடுக்க அவை அவனது உடலில் ஒட்டிக் கொண்டன. அதைப் பார்த்தவுடன் நான் அதிர்ச்சியடைந்து விட்டேன் என அச்சிறுவனின் தந்தை ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். இது குறித்து வைத்தியர் டிக்ஸ் செப்ட்ரோ ஸோடோ சோபிரினோ என்பவர் கருத்து தெரிவிக்கையில், எனது 30 வருட கால சேவையில் இவ்வாறான விசித்திரத்தை நான் பார்த்ததில்லை. எப்படியிருப்பினும் இச்சிறுவனின் உடல் ஆரோக்கியத்திற்கு ஆபத்து எதுவும் இல்லை என அவர் கூறியுள்ளார்.

## 50 கோடி ரூபா விலை மதிப்புள்ள தங்கத்தாலான டாடா நனோ கார்



உலகில் மிக மலிவான கார்களில் ஒன்றாக விளங்குவது இந்தியாவின் டாடா நிறுவனம் தயாரித்த டாடா நனோ கார். சராசரி விலை 1.40 இலட்சம் இந்திய ரூபாவாகும்.

ஆனால் அதே நிறுவனம் 22 கோடி இந் திய ரூபா (சுமார் 50 கோடி இலங்கை ரூபா) பெறுமதியான தங்கம், சில்வர் , பளிங்கு கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட காரை வெளியிட்டுள்ளது. முழுமையாக இயங்கும் நிலையிலுள்ள இக் கார் விற்பனை செய்யப்படுவதற்கில்லையாம். டாடா குழும நிறுவனங்களில் ஒன்றான டைட்டன் இன்ரஸ்ரீசின் ஓர் அங்கமான கோல்ட் பிளஸ் ஜுவலறியின் பெறுமதிமிக்கதும் ஊக்குவிப்பு நடவடிக்கைக்காக இக்கார் உருவாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தங்க நகை தொழிற்துறை வரலாற்றுக்கு 5000 ஆண்டுகள் பூர்த்தியை கொண்டாடுமுகமாக இந்த கோல்ட் பிளஸ் நனோகாரானது தயாரிக்கப்பட்டுள்ளது. உலகின் முதலாவது தங்க நகைக்கார் இதுவெனக் கூறப்படுகிறது.

இக்காரின் உடலமைப்பானது 80 கிலோகிராம் எடையுள்ள 22 கரட் தங்கம் 15 கிலோகிராம் வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்றனவற்றின் மூலம் இக்கார் உருவாக்கப்பட்டுள்ளது.

## பாலினாலான ஆடைகளை அறிமுகப்படுத்தும் விஞ்ஞானி



விஞ்ஞானி ஒருவர் பாலின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஆடைத் தொழிற்துறையுடன் கைகோர்த்துள்ளார். ஜேர்மனி, ஹனோவரைச் சேர்ந்த விஞ்ஞானியான அன்கி டொமாஸ்க் (வயது-28) எனும் பெண்ணே இவ்வாறான பாலினால் தயாரிக்கப்பட்ட ஆடையை பெஷன் உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் பாலுடன் வேறுபல பதார்த்தங்களையும் சேர்த்து விசேட உயிரியல் ஆடைகளை உருவாக்கியுள்ளார்.

இந்த ஆடைகள் பெஷன் தொழில்துறையில் புதிய வகையான போக்காக அமையுமென அவர் கூறியுள்ளார். பாலினால் தயாரான இந்த புடைவையானது தோலை சிறப்பாக பேணும் புரதத்தையும் கொண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஈழத்தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்கின்றன

## அவுஸ்.தமிழ் காங்கிரஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் திட்டமிட்ட வகையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த 4 ஆம் திகதியன்று தமிழ்க் காங்கிரஸ் நடத்திய இரவுப்போசன நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதன் போது கருத்துரைத்த பலரும் 1948 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வின் போது வன்னியில் வைத்தியசாலை ஒன்றின்மீது இலங்கைப் படையினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து இளம் பெண் ஒருவர் வீடியோ திரையை காண்பித்து விளக்கம் அளித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இருந்து வரும் அகதிகளை கட்டுப்படுத்துவதற்காகவே அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்று அங்கு வந்திருந்தவர்கள் கருத்துரைத்தனர்.

அயர்லாந்தில் பிறந்தவரும் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்காக குரல் கொடுப்பவருமான பெற்றிக் மெக்கேரி இங்கு கருத்துரைக்கையில், அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உண்மையான அகதிகள் அதிகாரிகளால் துன்புறுத்தப்படுவதாக குற்றம் சுமத்தினார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கையின் இறுதி யுத்தம் முடிந்த பின்னர் அதில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்றார். (அ-2)

# பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஐ.ஐ.எஸ் குழு கல்வி நிறுவனத்தின் 16 ஆவது நிறுவன தினமும், பட்டமளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினர்களாக எடெக்ஷல் பிரதேச முகாமையாளர் திருமதி பிரேமிளா பவுல்ராஜ் கனிரியஸ், எடெக்ஷல் பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் சூர்யா விவிலி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)



ஆன்மீக எழுத்தாளரும் வில்லிசைக் கலைஞருமாகிய இராசையா ஸ்ரீதரனுக்கு அண்மையில் கொழும்பு ஆனந்தகுமாரசாமி மாவத்தையிலுள்ள ஜோன் டி சில்வா மண்டபத்தில் கலாபூஷணம் அரச விருது வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# 23 மணி நேரம் கணனியில் கேம் விளையாடியவர் பலி

(கொழும்பு)

தாய்வானில் தொடர்ந்து 23 மணி நேரம் கணனி கேம் விளையாடிய வாலிபர் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாய்வான் தலைநகர் தைபேயில் பல கணனி விளையாட்டு மையங்கள் உள்ளன. ஒரு மையத்தில் சென் ரோங்யூ என்ற 21 வயது வாலிபர் அடிக்கடி கணனி கேம் விளையாடி வந்துள்ளார்.

இந்நிலையில் கணனி மையத்தில் கேம் விளையாடி கொண்டிருந்த சென்ரோங்யூ இருக்கையில் சரிந்தபடி இறந்து கிடந்தார். அவருடைய கைகள் கணனியின் கீ போர்டையும் மவுசையும் இறுக்கமாக பிடித்தபடி இருந்தன. அவரது உடலை கைப்பற்றி பொலிஸ் அதிகாரிகள் விசாரித்தனர்.

விசாரணையில் அவர் தொடர்ந்து 23 மணி கேம் ஆடியது தெரியவந்தது. இதுகுறித்து அந்த மையத்தின் ஊழியர்கள் கூறுகையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ரோங்யூ இங்கு வந்து விளையாட தொடங்கினார்.

இங்கு வரும் பலரும் தொடர்ந்து பல மணி நேரம் விளையாடுவார்கள். அதனால் அவர் இருக்கையில் இறந்தது தெரியவில்லை. தூங்குகிறார் என்று நினைத்தோம். ஆனால், நீண்ட நேரம் ஆகிவிட்டது. அவரை எழுப்ப சென்றோம். அவரது உடல் சில்லிட்டு இருந்தது. உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்தோம் என்றனர். (அ-2)

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு!

(மாலைதீவு)

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஜீட்டை கைது செய்யுமாறு மாலைதீவு குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் தாக்குதலில் காயமடைந்ததாக வெளியான தகவல்களை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மொஹமட் நஜீட்டின் நிர்வாகத்திற்கு எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் மற்றும் பொலிஸார் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். அதன் பின்னர் நஜீட் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினார்.

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி நஜீட்டின் பாதுகாப்பு கருதி மாலைதீவு நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் உரையாடியதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். (அ-2)

# வவு.குடியிருப்பு விநாயகர் ஆலயத்தில் திருட்டு சம்பவம்

(கொழும்பு)

வவுனியாவில் பழைமைவாய்ந்த கோவில்களில் ஒன்றான குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் அதிகாலை மீண்டும் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பணம் திருடப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் அதிகாலை ஆலயத்தின் தெற்கு பக்கத்தில் உள்ள வாயிற்கதவு உடைக்கப்பட்டு உண்டியல்கள் இரண்டும் உடைத்து பணம் திருடப்பட்டுள்ளதுடன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி பெட்டியும் களவாடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இத்தகவல் அறிந்த பொதுமக்கள் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் ஆலயத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆலயத்தின் பிரதம குருவினாலும் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஆலயத்தில் தொடர்ச்சியாக இரண்டு முறை இடம்பெற்ற திருட்டு சம்பவத்தினால் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதுடன் ஆலயத்தின் பாதுகாப்பு தொடர்பில் விசனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்குக்கிழக்கில் இராணுவ முகாம்களை அமைத்து இராணுவமயப்படுத்தக்கூடாது

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் மேலதிகமாக புதிதாக இராணுவ முகாம்களை அமைத்து மேலும் இராணுவமயப்படுத்தம் செயற்பாடு அவசியமற்றது ஒன்று என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களுள் ஒன்றான புதுமாத்தளன் பகுதியில் புதிதாக இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏற்கனவே இருக்கும் இராணுவ முகாம்களுக்கு மேலதிகமாக புதிய இராணுவ முகாம்களை அமைப்பது என்பது யுத்தவலயத்தில் வாழ்ந்துவரும் மக்களை பெரிதும் பாதிக்கும் செயல் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய முகாமை அமைப்பதன் மூலம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு மேலும் காலதாமதம் ஏற்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு புதிய இராணுவ முகாம்களை அமைப்பதற்கு அரசாங்கம் வடக்கு மக்களின் பூர்வீக காணிகளை சுவீகரித்து வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான நடவடிக்கைககளின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாகவும் அவர் கண்டித்துள்ளார். (அ-2)

# வணிகம் செய்வதற்கு வசதியான நாடுகள் தரப்படுத்தலில் இலங்கை முன்னேற்றம்

## உலக வங்கி தகவல்

(கொழும்பு)

இந்த ஆண்டின் வணிகம் செய்வதற்கு வசதியாக உள்ள நாடுகளின் தரப்படுத்தலில் இலங்கை ஒன்பது படி முன்னேறியுள்ளதாக உலகவங்கி வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

ஒரு நாட்டில் வணிக முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏற்படும் காலதாமதம், கீழ் கட்டுமான வசதிகள், முதலீட்டாளர் பாதுகாப்பு, கடன் வசதிகள் மற்றும் இன்ன பிற தடைகளின் அளவினை அடிப்படையாக கொண்டு வசதியாக வணிகம் செய்வதற்கான சுட்டியினை உலக வங்கி கணிப்பிட்டு வருகின்றது.

இதன்மூலம் உலக நாடுகளை தரப்படுத்தி அவற்றின் முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தி வருகின்றது.


இந்தவகையில் கடந்த ஆண்டு உலகின் 183 நாடுகளின் பட்டியலில் 98 ஆவதாக காணப்பட்ட இலங்கை இந்த ஆண்டு 89 என ஒன்பது படிகளால் முன்னேறியுள்ளது.

இதற்கு இலங்கையில் முதலீட்டாளர்கள் பாதுகாப்பு, தொழில் பாதுகாப்பு மற்றும் மின்சார வசதியின் கிடைப்பனவு ஆகியவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றமே காரணமாகும்.

எனினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வணிக முயற்சி மற்றும் சொத்துக்களை பதிவு செய்வதற்கு எடுக்கும் காலம், கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதி பெறுதல், கடன் வசதியினை பெறுதல், வரி செலுத்துதல் போன்றவற்றில் உள்ள சிக்கல் தன்மைகள் இந்த ஆண்டில் அதிகரித்துள்ளதாக உலக வங்கியின் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (அ-2)



# அடுத்த தலைவர் யார்?



இதுவரைக்கும் ஸ்ராலினா? அழகிரியா? என்றே இருந்த உரசல்... இப்போது கருணாநிதியா? ஸ்டாலினா? என்று பரிணாம வளர்ச்சி கண்டிருப்பதாகத்தான் சொல்ல வேண்டும்!

புதிய உறுப்பினர் சேர்ப்பு, தி.மு.க வின் சட்டதிட்டங்களில் மாற்றம், நாடாளுமன்றத்தேர்தல் இப்படி விவாதிக்க வேண்டிய பல விடயங்களை தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்து, பொதுக்குழுவுக்கு அனைவரையும் அழைத்தார். ஆனால், தி.மு.க.வின் அடுத்த தலைவர் யார்? என்பதற்கான விவாதக்களமாகவே இந்தப் பொதுக்குழு அமைந்து விட்டது. இனி இந்தப்பிரச்சினையை கருணாநிதி அதிகதூரம் தள்ளிப் போட முடியாது என்பதையும் பொதுக்குழு நடப்புகள் உணர்த்தி விட்டன.

ஸ்டாலினே அடுத்த தலைவர் என்று அவரது ஆதரவாளர்கள் முழங்கி வருகிறார்கள். அழகிரிக்கே அந்தப்பதவி என்று தென்மாவட்டங்களில் இருந்து கூவிக்கொண்டிருக்கிறார்கள் அஞ்சா நெஞ்ச அடிப்பொடிகள்! கூடவே கலைஞர் இருக்கும் வரை, அவர்தான் தலைவர் என்றும் ஒரு உஷார் பொடியை இவர்கள் தூவுகிறார்கள்.

ஸ்டாலின் பெயரை கலைஞரே முன்மொழிந்து, அவரை கட்சியின் அரியாசனத்தில் உட்காரவைக்க வேண்டும் என்பது ஸ்டாலின் ஆதர

**ஜூனியர் விகடன்**

வாளர்களின் ஆசை! கனிமொழி தரப்புக்கோ இந்த பரமபத விளையாட்டில் முக்கிய கட்சிப் பதவியில் எதையாவது பெற்றே தீரவேண்டும் என்ற பரபரப்பு!

ஸ்டாலின், அழகிரி.. இருவரில் யாரை இப்போதைக்கு உயர்திப் பிடித்தாலும் கட்சி ஆட்டம் காணும் என்பதால், கருணாநிதி மொத்தமாகவே மௌனம் காக்கிறார். அவரது மௌனத்தை இனியும் தொடர அனுமதிக்க முடியாது என்று ஸ்டாலின் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்பதையே பொதுக்குழு காட்டியது.


கடந்த 3 ஆம் திகதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. வின் பொதுக்குழு கூடியது.

அன்று பேரறிஞர் அண்ணா நினைவுதினம். அண்ணா நினைவிடத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்திவிட்டு வந்து, அறிவாலயத்தில் உட்கார்ந்தார் கருணாநிதி. தீர்மானங்கள், அஞ்சலித் தீர்மானங்கள் என்று வாசிப்பதில் காலைவேளை முழுமையாகக் கழிந்தது, மதிய வெயில் முடியும் நேரத்தில் சொல்லி வைத்த மாதிரி சூட்டைக் கிளப்பினார் வீரபாண்டி ஆறுமுகம்.

முன்னைய நாள் நடந்த உயர்நிலை செயற்திட்டக்குழு கூட்டத்திலேயே சீறியிருந்தார் வீரபாண்டி ஆறுமுகம். எனவே, இங்கேயும் ஏதாவது வில்லங்கமாகப் பேசுவார் என்று ஸ்டாலின் ஆதரவு ஆட்கள் எதிர்பார்த்தே வந்தார்கள். அதற்குப் பீடிகை போடுவது மாதிரியே கருணாநிதி, அன்பழகன், வீரசாமி, துரைமுருகன், சற்குணபாண்டியன், வி.பி.துரைசாமி ஆகிய அனைவர் பெயரையும் சொன்ன வீரபாண்டி ஆறுமுகம்... ஸ்டாலின் பெயரை மட்டும் சொல்ல மறந்து போனார். திடீரென ஞாபகம் வந்தவர் போல...

"பொருளாளர் பெயரை நான் மறந்துவிட்டேன் தம்பி ஸ்டாலின் அவர்களே! தவறை வெளிப்படையாக ஒப்புக்கொண்டால் மன்னிக்கத்தான் வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, பேச்சைத்தொடர்ந்தார் ஆறுமுகம்.

"வடமாவட்டத்தில் தளபதி கழகப் பணிகளை சிறப்பாக ஆற்றிவருகிறார். தென்மாவட்டத்தில் அஞ்சா நெஞ்சன் தனது பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார். தலைவர் இதனைக் கண்காணித்து வருகிறார். இப்படிப்



## கருணாநிதி சவால்... ஸ்டாலின் ஏற்பாரா?

பட்ட நிலையில் தலைவர் இருக்கும்போதே, அடுத்த தலைவர் யார் என்று சிலர் பேசுவது சரியானதாக இல்லை. தலைவருக்குப் பிறகு அஞ்சா நெஞ்சனோ.. தளபதியோ... யார்வேண்டுமானாலும் தலைவராக வரட்டும் இப்போது அதைப் பற்றிப்பேச வேண்டுமா?" என்று கேட்டுலேசாக இடை வெளிவிட்டார் வீரபாண்டி ஆறுமுகம்.

"ஆமா... தளபதிதான் வரணும்" என்று ஒருவர் குரல் கொடுத்தார். "தளபதி தான் அடுத்த தலைவர் என்று இன்னொருவர் குரல் கொடுக்க... "தளபதி...தளபதி..." என்று பலரும் குரல்கொடுக்க ஆரம்பித்தார்கள். அடுத்து சிலர் வீரபாண்டி ஆறுமுகத்தை காட்டமாக விமர்சித்துக் குரல் கொடுத்தனர். அப்படியும் ஆற்றாமை அடங்காதவர்களாக நான்கைந்து பேர் தாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்தைவிட்டு எழுந்து மேடையை நோக்கி நகர்ந்துவர ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்த வீரபாண்டி ஆறுமுகம் "அடிக்கப் போறியா? இந்தா அடி" என்று நெஞ்சை நிமிர்த்தி முன்னால்வர ஆரம்பித்தார். சேலத்து சிங்கமாச்சே... அதுவும் சிலிப்பிக் கொண்டது! கருணாநிதி, அன்பழகன், ஸ்ராலின் ஆகிய மூவரும் இதை எல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். திடீரென ரென்சன் ஆன கருணாநிதி... "வீல்சியாரை எடுத்துட்டு வாய்யா!" என்றார். "நல்லா இருக்குய்யா... நல்லா இருக்கு! நான் போறேன்... நீங்களெல்லாம் என்னமோ பண்ணுங்க! "என்று கடுகடுத்துச் சொல்ல ஆரம்பித்தார் கருணாநிதி. ஸ்ராலினுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தனக்காகக் குரல் தரும் ஆதரவாளர்களை அடக்கி அமர வைக்கவும் அவர் முன்வரவில்லை. தொடர்ந்து ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தார் கருணாநிதி. அவரை அன்பழகன் சாந்தப்படுத்தினார்; "ஒண்ணுமில்லே... நீங்க அமைதியா இருங்கள்!" என்று அன்பழகன் சொல்ல... "நீங்க எதுக்குப் போறீங்க...? வருத்தப்படாம இருங்க!" என்று ஸ்டாலினும் சமாதானம் சொன்னார். ஆனால், ஸ்டாலின் முகத்தைக் கருணாநிதி ஏறெடுத்தும் பார்க்கவேயி ல்லை.


மைக் பிடித்த அன்பழகனின் பேச்சு பல உள் அர்த்தங்கள் கொண்டதாக இருந்தது.

"வீரபாண்டி ஆறுமுகம் பேசியதும் என்னுடைய கருத்துத்தான். ஸ்ராலின் மிகச்சிறப்பாக கழகப்பணி ஆற்றுகிறார் என்று நான் பாராட்டுகிறேன். அதற்காக நான் வகிக்கும் பொதுச் செயலாளர் பொறுப்பை அவருக்குத் துக்கிக் கொடுத்து விடுவேனா? எனக்குப்பிறகு அவர் அந்தப் பொறுப்பில் உட்காரலாம். ஸடாலின் அழகிரி கனிமொழி ஆகியோர் கலைஞரின் பிள்ளைகள் அந்த அடிப்படையில் எனக்கும் பிள்ளைகள்தான். அவர்கள் கழகப்பணி ஆற்றலாம்; ஆனால், தனித்தனி அணியாக பணியாற்றக் கூடாது. தகுதியின் அடிப்படையில் தான் அந்தத் தலைமைப்பதவி வர வேண்டும். கலைஞரைவிட நான் வயதில் மூத்தவன். அவர் தலைவராக வந்து உட்காரும்போது எனக்கே சில கூச்சங்கள் இருந்தன. என்வீட்டில் உள்ளவர்கள்கூட அதைக்கிண்டல் செய்தார்கள். ஆனால், கலைஞர் தனது தகுதியால் உயர்ந்து நின்றார். அவரைப்போல் என்னால் உழைக்க முடியாது. அவரே இயக்கம். இயக்கமே அவர் என்று வளர்ந்தார். அப்படிப்பட்ட தகுதியை வளர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர... சும்மா தலைவராகத் துடிக்கக்கூடாது.

இந்த வயதிலும் கலைஞர் சுறுசுறுப்புடன் உழைக்கிறார். நேற்று இரவுகூட அவருக்கு உடல் நலமில்லை. கால்கை நரம்புகள் வலித்தன. "மதியம் வரைக்கும் பொதுக்குழுவை நடத்தி முடித்துக் கொள்ளலாம்!" என்று நான் சொன்னேன் "எத்தனையோ மைல் தூரத்தில் இருந்து வந்திருப்பவர்களை ஏமாற்றக் கூடாது. மாலை வரைக்கும் பொதுக்குழு நடக்கட்டும்" என்று கலைஞர் சொன்னார். தன்னுடைய உடல்நலம் பற்றிக் கவலைப்படாமல் இயக்கமே தன்னுயிராகக் கருதி நடத்தும் கலைஞரைப் போல் வேறுயாரும் இருக்க முடியாது!" என்று அன்பழகன் பேசப்பேச... நெகிழ்ந்து குளிர்ந்து நிமிர்ந்தார் கருணாநிதி.

அடுத்து தலைவர் என்ன பேசப் போகிறார் என்ற ஆவல் அரங்கம் முழுக்க தகித்த நிலையில் மைக் பிடித்த கருணாநிதி, "போராசிரியர் பேச்சு முழுமையும் என்னுடைய கருத்துத்தான். அடுத்த பொதுக்குழுவுக்கு நான் இருந்தால் பேசுகிறேன் நன்றி!" என்று சுருக்கமாக உருக்கம் காட்டி முடித்ததில் பலருக்கு அதிர்ச்சி!

"தலைவர் பேசணும் தலைவர் பேசணும்" என்று குரல்கள். அன்பழகனும் கருணாநிதியை பேசச் சொல்லி கேட்டுக் கொண்டார். கருணாநிதிக்கு முன்னால் இருந்த டீபாயை எடுத்து விட்டார்கள். சிறு நேர மனமாற்றத்துக்குப் பிறகு டீபாய்... மைக் ஆகியவை மறுபடி வைக்கப்பட்டான்.



(தொடரும்)

# 5ஆவது நாளாக ஐ.நா.வை நோக்கி நகரும் நடைபவனி



(கொழும்பு)

ஈழத்தமிழர்களின் விடிவிற்காக பெல்ஜியத்திலிருந்து ஐக்கிய நாடுகள் சபை நோக்கி 5 ஆவது நாளாகவும் கடுமையான குளிரினையும் பொருட்படுத்தாது நடைபயணம் தொடர்கின்றது.

எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்ட காலமாக இலங்கை அரசாங்கம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இவர்களின் பாதங்கள் ஐ.நா. சபையினை நோக்கி விரைகின்றது.

ஈழத் தமிழர்கள் இலங்கைத்தீவில் சுபீட்சத்துடன் சுதந்திரமக வாழ வேண்டும் என்பதற்காக கடந்த 30 வருடமாக பல்வேறு விதமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவையாவும் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் நிர்க்கதியாய் நிற்கும் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்று இந்த மூவரும் மேற்கொள்ளும் நடைபயண அகிம்சை போராட்டத்தில் அவர்கள் முன்வைத்துள்ள ஐந்து அம்ச கோரிக்கைகளும் ஐக்கிய நாடுகள் சபை செவிமடுத்து உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என்று புலத்திலும் தமிழர் தாயகத்திலும் வாழுகின்ற அனைத்து தமிழர்களும் பேரவாவுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஐ.நா. சபை முன்றலில் முற்றுப் பெறுகின்ற நடை பயணத்தில் புலத்தில் வாழுகின்ற அனைத்து தமிழ் உறவுகளும் அலை அலையாய் திரண்டு வாரீர் .ஐ.நா.விடம் நீதி கேட்போம்.

நீதிக்கான பயணத்தில் கலந்து கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நாடுகள் ரீதியாக ஒருங்கிணைப்பு குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்றது. (அ-2)

# நிர்வாகத்தெரிவும் பொதுக்கூட்டமும்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/ மாங்குளம் மகா வித்தி யாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் ப. இரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நடப்பாண்டில் பாடசாலை தொடர்பான அபிவிருத்தி தொடர்பாகவும் பழைய மாணவர்களின் அங்கத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடி செயற்படுத்தவுள்ளதால் வித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் நிகழ்வு தொடர்பான மேலதிக தகவல்களை 077 0755246 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இரு உத்தியோகத்தர்கள் கைது

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை உதவியாளர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிய நடைமுறைக்கு மாறாக வாகனமொன்றை வேறு ஒருவரின் பெயருக்கு மாற்றுவதற்கென குறித்த அதிகாரி 6 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்டதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த அதிகாரிக்கு உடந்தையாக இருந்த மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. சந்தேக நபரான விசாரணை உதவியாளரை கைது செய்யும் போது அவரிடம் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் ரூபா பணம் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பணம் எவ்வாறு அவருக்கு கிடைத்தது என்பது தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை குளியாப்பிட்டி வைத்தியசாலையில் உயிரிழந்த சிறு பிள்ளையொன்றின் இறுதிக்கிரியைகளை அரசாங்க செலவில் நடத்துவதற்காக இரண்டாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற சிற்றூழியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டி வைத்தியசாலையில் குறித்த பிள்ளையின் தந்தையிடமிருந்து நேற்று பகல் இலஞ்சத்தை பெற்றுக் கொண்ட போது சிற்றூழியர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-2)

# வடக்கில் 682 பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தினால் சேதமைடைந்துள்ள பாடசாலைகள் மிகவிரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 30 வருடகால யுத்தத்தினால் சேதமடைந்த 682 பாடசாலைகள் மிகவிரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதன் நிர்மாணப்பணிகளுக்காக 704.25 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது இயங்கிவரும் பாடசாலை மாணவர்கள் 80 ஆயிரம் பேருக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# குற்றச்செயலில் ஈடுபட்ட இருவருக்கு இருமாத சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஸ் நிலையத்தில் அநாகரிகமாக பெண்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு வந்த பிச்சைக்காரன் ஒருவரையும் அடாவடித்தனங்களில் ஈடுபட்ட செருப்புத்தைப்பவர் ஒருவருக்கும் இரண்டு மாத சிறைத்தண்டனை யாழ்.நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதியன்று யாழ்.பேருந்து நிலையத்தில் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக போக்குவரத்து மற்றும் வியாபார நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் ஒரு மணிநேரம் ஸ்தம்பிதமடைந்த நிலையில் காணப்பட்டது.

யாழ்.கொட்டடி பளையைச் சேர்ந்த குறித்த இருவரும் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்ற நீதவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் செலுத்தத்தவறின் இரண்டு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார். (அ-2-4)

# யாழ்.மாவட்டம் 10 ஆண்டுகளில் அபிவிருத்திபடைந்துவிடும்

## யாழ்.அரச அதிபர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தனியார் துறையினரின் ஒத்துழைப்பும் மிக அவசியம் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

பினாஸ் கம்பனி பிஎல்சி இன் யாழ். கிளை நேற்று அரங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்திப் பாதையில் நாங்கள் செல்லும் போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை மட்டும் வைத்துக்கொண்டு அபிவிருத்திநோக்கி செல்ல முடியாது. தனியார் துறையினரும் அபிவிருத்திக்கு உதவிகள் செய்ய வேண்டும். தனியார்கள் முதலீடுகளை அதிகளவில் செய்வார்களேயானால் முப்பது வருடகாலமாக இம்மக்கள் அனுபவித்த கஷ்டங்கள் நீங்கி மீண்டும் மறுவாழ்வு பெறுவார்கள்.

சமாதான சூழலை பயன்படுத்தி மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள தனியார்துறையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் கடந்த 5 ஆம் திகதி யாழ்ப் பாணத்திற்கு 60 வெளிநாட்டு இராஜதந்திரிகள் வருகை தந்திருந்தனர். அவர்கள் என்னிடம் யாழ். மாவட்டம் எப்போது முழுமையாக அபிவிருத்தி அடையும் என்ற கேள்வியை எழுப்பியிருந்தனர்.

அதற்கு அபிவிருத்தி எப்போது முழுமையடையும் எனக் கூறமுடியாது. ஆனால் இந்த ஆண்டின் இறுதிக்குள் மின்சார சேவை முழுமையடையும். இரண்டு ஆண்டுக்குள் வீதிகள் முழுமையாக புனரமைப்பு செய்யப்பட்டுவிடும். மூன்று ஆண்டுக்குள் புகையிரதப் போக்குவரத்துச்சேவை பூர்த்தியாகிவிடும். 5 ஆண்டுக்குள் குடிநீர் விநியோகம் பூர்த்தியாகிவிடும் எனவும் ஏனைய துறைகளிலும் அபிவிருத்திப் பணிகள் மிக விரைவில் பூர்த்தியாகிவிடும் என தெரிவித்தேன்.எங்களுடைய அபிவிருத்திகள் தொடர்ந்து கொண்டே செல்லும். அதேபோன்று மக்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

இதுதவிர மீளக்குடியமர்ந்து வாழ்வாதார செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களுக்கு அரச திணைக்களங்கள் மட்டுமல்லாது தனியார் துறையும் பங்களிப்பு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# கிளி.விவசாயிகளுக்கு எள்ளு விநியோகம்

(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் எள்ளுச் செய்கையை விஸ்தரிப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் எள்ளுச் செய்கையை விஸ்தரிப்பதற்காக எள்ளுச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எள்ளு விதைகளை கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களம் விநியோகித்து வருகின்றது.

மேலும் எள்ளுச்செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் இம்மாதத்திற்குள் எள்ளுவிதைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இது தொடர்பாக தங்கள் பகுதி விவசரயப் போதனாசிரியரிடமோ அல்லது கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்துடனோ தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெறமுடியும் .

இவ் எள்ளுச்செய்கைக்குப் பொருத்தமான காலம் இம்மாதம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3)

# க.பொ.த.(உ/த) கற்பதற்கான அடிப்படை தகுதியும் பாடத்தை கற்பதற்கு வேண்டிய தகுதி நிலைகளும்

இன்று மாணவர்கள் மத்தியில் க.பொ.த. (உ/த) கற்பதற்கான அடிப்படை தகுதி நிலை யாது? எத்தகைய பாடசேர்மானங் களை கற்க முடியும்? அவ்வாறு கற்ப தால் பல்கலைக்கழகத்தில் எத்தகைய கற்கைநெறிகளைப் பெற முடியும்? என்பன தொடர்பான சரியான போதிய விளக்கம் அற்ற நிலை நிலவுவதை காண முடிகின்றது.

இதன்விளைவாக பொருத்த மற்ற பாடச்சேர்மானங்களைக் கற்று பல் கலைக்கழகம் செல்ல முடியாது ஏமாற் றமடைவதையும் சில சமயம் பல்கலைக் கழக அனுமதிப்படிவங்களை சரியாக பூரணப்படுத்த முடியாமல் பொருத்த மான கற்கை நெறியை தெரிவு செய்யமுடி யாமையும் தமது உண்மையான தகுதி, திறமை, ஆற்றல்களை முழுமை யாக பயன்படுத்த முடியாமல் போவ தையும் காணக்கூடியதாக உள்ளது.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் தற் போது 9 பாடங்களுக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர். அவற்றுள் 6 பாடங் கள் கருப்பாடங்களாகும். அவை

1.தமிழ் மொழியும் இலக்கியமும்
2.சமயம்
3.வரலாறு
4.கணிதம்
5.விஞ்ஞானம்
6.ஆங்கிலம்

இவற்றைவிட 3 தொகுதிப்படங் களிலும் தலா ஒவ்வொரு பாடத்தை யும் தெரிவு செய்ய வேண்டும்.

| தொகுதி I | தொகுதி II | தொகுதி III |
|---|---|---|
| 1. குடியுரிமைக்கல்வி மற்றும் சமூக நிர்வாகம் | 1.சித்திரம் | 1.சுகாதாரமும் உடற் கல்வியும் |
| 2.முயற்சியாண்மைகற்கை | 2.சங்கீதம் (கர்நாடக/கீழைத்தேய/ மேலைத்தேய) | 2.விவசாயமும் உண வுத்தொழில்நுட்பமும் |
| 3. புவியியல் | 3.நடனம் (சுதேஷ/பரதம்) | 3.கடற்றொழிலும் உண வுத் தொழில்நுட்பமும் |
| 4.இரண்டாம் மொழி (தமிழ்/ சிங்களம்) | 4.இலக்கியநயம் (தமிழ்/சிங்களம்/ ஆங்கிலம்) | 4.ஆக்கத்திறனும் தொழில் நுட்பவியலும் |
| 5.செம்மொழிகளும் நவீன மொழிகளும் (பாளி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, ஹிந்தி, ஜப் பான், அரபு) | 5.நாடகமும் அரங்கியலும் | 5.மனைப்பொருளியல்<br>6.கலை<br>7.மின்ஆவணப்படுத்த லும் சுருக்கெழுத்தும்<br>8.தொடர்பாடல், ஊட கக்கற்கை |

எனவே மொத்தமான 9 பாடங்க ளுக்கு மாணவர்கள் தோற்றிய போதி லும் 6 பாடங்களில் சித்தியடைவ துடன் குறைந்த பட்சம் 3 C தரச் சித்தி களும் 3 S தரச்சித்திகளும் பெறுதல் வேண்டும்.

இதில் கணிதம், தமிழ் ஆகிய பாடங் களில் சித்தி பெறுதல் அவசியமா கும். இந்த 3 C, 3 S சித்தியை ஒரே தடவையில் பெறமுடியாது போனால் 2 தடவைகளில் இவற்றைப் பெறக் கூடிய பின்வரும் நிபந்தனை அவசியமா கும். முதற்தடவையில் 2 C தரச்சித்திகள் மாத்திரம் இருப்பின் மூன்றாவது C தரச் சித்திக்காக கணிப்பீட்டில் குறைந்த பட்ச 3 இலக்கமுடைய சித்தி அவசி யம். 1,2 இருப்பின் சிறப்பானதே.

மேலும் மாணவர்கள் க.பொ.த. (உ/த) இல் தெரிவு செய்யும் பாடத் துறையை பொறுத்து அந்தந்த துறைக் குரிய பாடத்தில் C தரச் சித்தி அவசியம்.

01.உயிரியல் துறையை தேர்ந்தெ டுத்தால் விஞ்ஞானத்தில் C தரச் சித்தியும் கணிதத்தில் S தரச் சித்தியும் அவசியம்.

02.கணித்துறையைத் தேர்ந்தெ டுத்தால் கணிதத்தில் C தரச்சித்தியும் விஞ்ஞானத்தில் S தரச் சித்தியும் அவசியம்.

03. வர்த்தகத்துறையைத் தேர்ந்தெடுத் தால் வணிகமும் கணக்கீடும்/கணி தம்/முயற்சியாண்மைக்கற்கை. இதில் ஏதாவது ஒன்றில் C தரச்சித்தி அவசியம்.

04.கலைத்துறையைத் தேர்ந்தெடுக் கும் போது க.பொ.த. உயர்தரத்தில் தெரிந் தெடுக்கும் பாடங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பான பாடத்தில் C தரச் சித்தி அவசியம். எனினும் சித்திரம்/சங்கீதம்/நடனம்/நாடகமும் அரங்கியலும் பாடத்தை கற்பதாயின் அந்த குறித்த அழகியல் பாடத்தில், C தரச் சித்தி அவசியம் ஆகும்.

சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம் எனும் பாடமொன்றினைப் பின்பற்றுவ தாயின் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்கள மொழியும் இலக்கியமும்/ தமிழ்மொழியும் இலக்கியமும்/ ஆங்கிலம் எனும் பாடங்களில் உரிய பாடத்தில் திறமை சித்திபெற்றி ருத்தல் வேண்டும். ஏதாவது சமய பாடம் ஒன்றை/ சமயம் சார்ந்த நாகரீக மொன்றைப் பாடமாக பின்பற்ற விரும்பும் மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் அவ் உரிய சமய பாடத்தில் திறமைச்சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த.(உ/த) பாடத்துறைக்

**கல்வித்தரிசனம்**

கான பாட சேர்மானங்கள்)

**1. கலைத்துறை**

இத்துறையில் 4 வகையான பாடத் தொகுதிகள் உண்டு.

(அ)சமூக விஞ்ஞானம்/ பிரயோக சமூக கற்கைப்பாடங்கள்,

1.பொருளியல்
2.புவியியல்
3.வரலாறு (இலங்கை வரலாற்று டன் இந்திய /ஐரோப்பிய / உலக வரலாறு)
4.மனைப்பொருளியல்
5.அரசியல் விஞ்ஞானம்
6.அளவையியலும் விஞ்ஞான முறையும்
7.கணக்கீடு/ வணிகப்புள்ளிவிபரவியல்
8.விவசாய விஞ்ஞானம்/கணிதம்
9.தொழில்நுட்ப பாடங்களில் ஒரு பாடம் (குடிசார்/ பொறிமுறை/ மின் இலத்திரன்/ தகவல்/உணவு/ விவசாய/ உயிர்வளத் தொழில்நுட்பவியல்
10. தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்
11.தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்

(ஆ) சமயங்களும் நாகரிகங்களுக் குமான பாடங்கள்

1.இந்துசமயம் அல்லது இந்து நாகரிகம்
2.கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரிகம்
3. பௌத்தம் அல்லது பௌத்த நாகரிகம்
4. இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரிகம்
5. கிரேக்க , உரோம நாகரிகம்

(இ) அழகியல் கல்விப் பாடங்கள்

1. சித்திரம்




2.நாட்டியம்(தேசிய/பரதநாட்டியம்)
3.சங்கீதம் (கீழைத்தேய /கர்நாடக/ மேலைத்தேய சங்கீதம்)
4. நாடகமும் அரங்கியலும் (சிங் களம்/தமிழ்/ஆங்கிலம்)

(ஈ) மொழிப்பாடங்கள்

1.சிங்களம், தமிழ், ஆங்கிலம்
2.அரபு, பாளி, சமஸ்கிருதம்
3.சீனம், மலாய், பிரெஞ்சு, ஜேர்மன், ரூசியன, ஹிந்தி, ஜப்பான்

**கலைத்துறைப்பாடங்களைத் தேர்வு செய்யும் முறை**

1.சமூக விஞ்ஞான பாடத்தொகுதி யில் இருந்து குறைந்தது ஒரு பாட த்தை தெரிவு செய்து கொள்ள வேண் டும். மொழிப்பாடத்தில் 2 அல்லது 3 ஐத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு இது பொருத்தமற்றது. மாணவரின் விருப்புக்கேற்ப இத்தொகுதியில் இருந்து 2 அல்லது 3 பாடங்களை தெரிவு செய்ய முடியும்.

2. சமயங்களும் நாகரிகங்களும் எனும் பாடத்தொகுதியில் ஏதாவது ஒரு சம யத்தை தெரிவு செய்தால் அச் சமயத் துடன் தொடர்பான நாகரிகத்தை தெரிவு செய்யமுடியாது.

3. அழகியல் கல்விப் பாடத்தொகுதி யில் 1 அல்லது 2 உபபாடங்களை தெரிவு செய்து கொள்ள முடியும்.

4. மொழிப்பாடத்தொகுதியில் 1 அல்லது 2 பாடங்களை தெரிவு செய்து கொள்ள முடியும். எனினும் மூன்று மொழிப்பாடங்களை தெரிவு செய்து கொள்வதாயின் அவை மூன்றும்

✷ சிங்களம், தமிழ், ஆங்கிலமாக இருத்தல் வேண்டும்.

✷ சிங்களம், தமிழ், ஆங்கிலம் தொகுதியிலும் அரபு , பாளி சமஸ் கிருதம் அல்லது தொகுதியிலுமாக 3 பாடங்கள் இருத்தல் வேண்டும்.

5. மொழிப்பாடங்கள் இரண்டினைத் தெரிவு செய்யும் மாணவர் ஒருவர் தமது மூன்றாவது பாடமாக சமூக விஞ் ஞானம், சமயங்களும் நாகரிகங்களும், அழகியல் பாடத்துறையில் இருந்து விரும்பிய பாடமொன்றை தெரிவு செய்து கொள்ள முடியும்.

**2.வர்த்தகத்துறை**

**வர்த்தகத்துறையில் பாடங்களை தெரிவு செய்யும் முறை**

முதலில் கீழ்வரும் பாடத்தொகுதி யில் இருந்து குறைந்தது இரண்டு பாட ங்களை தெரிவு செய்ய வேண்டும்.

1.கணக்கீடு
2.வணிகக்கல்வி
3.பொருளியல்

மீதமாக உள்ள பாடத்தினை கீழ்வரும் பாடங்களில் இருந்து தெரிவு செய்து கொள்ளலாம்.

1.வணிகப்புள்ளிவிபரவியல்
2.புவியியல்
3.அரசியல் விஞ்ஞானம்
4.வரலாறு
5. அளவையியலும் விஞ்ஞன முறையும்
6.ஆங்கிலம்
7.ஜேர்மன்
8.பிரெஞ்சு
9.விவசாய விஞ்ஞானம்
10.இணைந்த கணிதம்
11.தகவல் தொடர் பாடல் தொழில் நுட்பம்.

**3.உயிரியல் துறை**

**உயிரியல் விஞ்ஞானத்துறையில் பாடங் களை தெரிவு செய்யும் முறை**

இத்துறையில்கற்க விரும் பும் மாணவர்கள் கீழ்வரும் பாடங்களிடையே மூன் றினை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

1.உயிரியல்
2.இரசாயனவியல்
3.பௌதீகவியல்
4.விவசாய விஞ்ஞானம்
5. கணிதம்

**பௌதீகவிஞ்ஞானத்துறையில் பாடங்களை தெரிவு செய்யும் முறை**

1.இணைந்த கணிதம்
2.இரசாயனவியல்
3.பௌதீகவியல்
4.உயர்கணிதம்

மேலும் குறிப்பாக கலைத்துறை யில் பல பாடங்கள் காணப்படுவ தால் எல்லாப்பாடசாலைகளிலும் எல்லாப்பாடங்களும் கற்கக்கூடிய வசதி இல்லாத காரணத்தால் அவர் கள் தமது பாடசாலைகளில் உள்ள பாடங்களை எடுக்குமாறு வற்புறுத்து வார்.மாணவர் தமக்கு அது பொருத் தமற்றது எனக் கருதின் உரிய வேறு பாடசாலையை நாடுவதே அதற்கான தீர்வாகும். இத்தகைய நிலை வர்த்தக, கணித, விஞ்ஞானத்துறைகளிலும் ஓரளவுக்கு உண்டு என்பது குறிப் பிடத்தக்கது.மேலும் பல்கலைக்கழகங் களில் முதற்பட்டப்பாடநெறிக்கு மாண வர்களைத் தேர்ந்தெடுக்கும் போது க.பொ.த (சா/த)இல் ஆங்கில பாடநெறி யில் C தரச் சித்தியும் வேறு சிலவற் றுக்கு S தரச்சித்தியும் அவசியம்.

உ+ம் மருந்தகவியல் (Pharmacy) பட்டபாடநெறிக்கு Chemistry இல் C தரச் சித்தியும் க.பொ.த (சா/த) இல் ஆங்கில பாடநெறியில் C தரச் சித்தியும் அவசியம். மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம் (MEDICIALA BORATARY SCIENCE), ஊடுக்திர்ப் படவியல் (radiography) இயன் மருத் துவம் (Physiotheraphy) கற்கை நெறி களுக்கு ஆங்கிலத்தில் S தரச் சித்தி யும் அவசியம்.ஆனால் க.பொ.த (உ/த) கற் கும் காலத்தில் க.பொ.த (சா/த) பரீட் சைக்கு தோற்றி இத்திறமைச் சித்தி, சாதாரண சித்திகளைப் பெற முடியும்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத் திற்கொண்டு மாணவர்கள் க.பொ.த (சா/த) இல் பொருத்தமான தகுதி நிலை யைப்பெற்று க.பொ.த (உ/த) இல் பொருத்தமான துறையில் பொருத்த மான பாடச்சேர்மானங்க ளைக்கற்று தமது முழுமையான திறமை, ஆற்றல் களை வெளிக் காட்டி எதிர்காலத்தில் நாட் டுக்கும், வீட்டுக்கும் நல்ல ஆக்கமுள்ள பிரஜைகளாக வாழ வளர வேண்டும்.

திரு.கி.குகநாதன்
யாழ்.வேலாயுதம் மகா வித்தி,
பிரதி அதிபர்.

# சர்தாரிக்கு எதிரான ஊழல் வழக்கை புதுப்பிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மீதான இலஞ்ச ஊழல் வழக்குகளை மீண்டும் புதுப்பிக்க தேவையான ஆவணங்களை சுவிற்சர்லாந்து நாட்டு அதிகாரிகளிடம் இருந்து வாங்கிரத்தர வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சர்தாரி மீதான ஊழல் வழக்குகளை கண்டிப்பாக புதுப்பித்தே ஆக வேண்டும் என்றும் அந்த வழக்குகள் தொடர்பான ஆவணங்களை சுவிஸ் நாட்டு அதிகாரிகளிடம் இருந்து கிலானி பெற்றே தீரவேண்டும் என்று பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரி ஆணை பிறப்பித்துள்ளார்.

சுவிஸ் நாட்டு அதிகாரிகளுக்கு இது தொடர்பாக பிரதமர் கிலானி ஒரு கடிதம் எழுத வேண்டும். அப்போது தான் கிலானிக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் தலைமை நீதிபதி தமது உத்தரவில் கூறியுள்ளார்.

ஆசிப் அலி சர்தாரி தனது ஊழல் பணத்தை சுவிஸ் நாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருக்கின்றார் என்றும் இதன் மதிப்பு 6 கோடி டொலர்கள் என்றும் கூறப்படுகின்றது. இந்த 6 கோடி டொலர்கள் பணத்தை பாகிஸ்தானுக்கு மீண்டும் கொண்டுவர வேண்டும் என்றால் சுவிஸ் நாட்டு அதிகாரிகளுக்கு கிலானி கடிதம் எழுதியே தீர வேண்டும் என்றும் நீதிபதி தமது உத்தரவில் கூறியுள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி கிலானி உயர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை எதிர்த்து அதே உயர் நீதிமன்றில் கிலானி மேன்முறையீடு செய்துள்ளார். இந்த மேல் முறையீட்டு மனுவின் மீது நடந்த விசாரணையின் போதுதான் கிலானிக்கு மேற்கண்ட உத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. (அ-2)



## அமெரிக்க ஆளில்லா விமானம் தாக்கு; அல்கொய்தா தலைவர் பலி


பாகிஸ்தானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அல்கொய்தா தலைவர் உட்பட நான்குபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் காஷ்மீரில் முன்னர் செயற்பட்டு வந்த ஹர்கத்துல் முஜாகதீன் அமைப்பைச் சேர்ந்த பதார் மன்சூர் தற்போது பாகிஸ்தானின் வசிரிஸ்தான் மாகாணத்தில் வசித்து வந்தார்.

பாகிஸ்தானின் அல்கொய்தா தலைவராக செயற்பட்டு வந்த மன்சூர் ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களுக்கு பயங்கரவாதிகளை விநியோகம் செய்துவந்தார். இதனால் அமெரிக்கா இவரை தேடி வந்தது.

இந்நிலையில் வசிரிஸ்தானில் உள்ள மிரான்ஷா பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லாத விமானம் நேற்று முன்தினம் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் மன்சூர் உட்பட 4 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தானில் கடந்த 2 நாட்களாக ஆளில்லாத விமானங்கள் நடத்திய தாக்குதலில் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். (அ-2)

# போப் பெனடிக்கிற்கு ஈரான் அழைப்பு



கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தலைவர் போப் பெனடிக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது. ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் குற்றம்சாட்டி வருகின்றன. அணு ஆயுத திட்டங்களை நிறுத்தாவிட்டால் ஈரான் மீது இஸ்ரேல் இராணுவ தாக்குதல் நடத்தும் என்று பாகிஸ்தான் மிரட்டல் விடுத்தது.

இதற்கு ரஷ்யா உட்பட்ட பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இதற்கிடையில் ஈரான் விஞ்ஞானிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இதுவரை 4 பேர் பலியாகி உள்ளனர். இதற்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் தான் காரணம் என்று ஈரான் குற்றம் சாட்டியது. மேலும் ஈரான் ஜனாதிபதி முகமது அகமதி நிஜாத் கூறுகையில்,

உலகவரைபடத்தில் இருந்து இஸ்ரேலை அழித்துவிட வேண்டும் என்று கூறியிருந்தார். இந்நிலையில் ஈரானுக்கு வர வேண்டும் என்று போப் பெனடிக்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வாடிக்கானுக்கான ஈரான் தூதுவர் அலி அக்பர் நசரி நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறுகையில்,

போப்பின் வருகையை ஈரான் ஜனாதிபதி முகமது மிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றார். ஈரானுக்கு போப் வருகைதந்தால் அவருக்கு மிகச் சிறப்பான வரவேற்பு அளிப்போம் என்றார். ஆனால் போப் முடிவெடுக்கவில்லை என்று வாடிகன் அதிகாரிகள் கூறினர். (அ-2)

# துருக்கியில் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் மோதல்


## 13 தீவிரவாதிகள் பலியாகினர்

துருக்கி நாட்டின் ஈராக் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது.

இந்நாட்டின் தென்கிழக்கு பகுதியான ஹக்காரி, பின்கோல் ஆகிய பிராந்தியங்களில் குர்ஷித்தான் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இவர்கள் இராணுவத்துக்கு எதிராக கொரில்லா முறையில் தாக்குதல் நடத்துகிறார்கள். இப்பகுதி ஈராக் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 8 ஆம் திகதி இரவில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருந்த 10 முகாம்கள் மீது திடீரென்று தாக்குதல் நடத்தினர். இதற்கு இராணுவத்தினரும் பதிலடி கொடுத்தனர்.

இதில் ஒரு இராணுவவீரர், 13 தீவிரவாதிகள் பலியானார்கள். 3 தீவிரவாதிகளை இராணுவத்தினர் சிறைபிடித்தனர். இதுபற்றி இராணுவ அதிகாரி கூறுகையில், பலியான தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசிய போது தவறுதலாக வெடித்து அவர்களே அதற்கு இலக்காகி பலியாகிவிட்டனர் என்றார். (அ-2)



மலேசியா, புத்ரஜயாவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹனிபா அமனை (வலது) வியட்நாம் வெளியுறவுத்துறை அமைச்சர் பாம் பின் மிங் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.




# பாகிஸ்தானில் 13 ஆயிரம் ஆபாச இணையத்தளங்களுக்குத் தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான ஆபாச இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. பாகிஸ்தான் தகவல் தொழில்நுட்ப செயலர் நவாப் லியாகத் அலி கான் நேற்று முன்தினம் கூறியதாவது,

இணையத்தளத்தில் ஏராளமான ஆபாச இணையத்தளங்கள் வலம் வருகின்றன. இதனால் பெரும் பிரச்சினை ஏற்படுகின்றது.

எனவே 13 ஆயிரத்துக்கும் அதிகமான ஆபாச இணையத்தளங்கள் உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளன. எனினும் எல்லா ஆபாச இணையத்தளங்களையும் அரசால் தடுக்க முடியவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இணையத்தளத்தில் ஆபாச படங்கள், செய்திகள் குறித்த புகார்கள் வந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இன்டர்நெட்டில் ஆபாசங்களை தடுக்க தானியங்கி முறையில் தணிக்கை செய்யும் தொழில்நுட்பத்தை இந்தியாவும் சீனாவும் அமுல்படுத்தி வருகின்றன. இந்த தொழில்நுட்பத்தை கொண்டு வர அதிக செலவாகும். அப்படியே இந்த தொழில் நுட்பத்தை புகுத்தினாலும் எல்லா ஆபாச இணையத்தளங்களையும் தடுக்க முடிவதில்லை. பெரும்பாலான இணையத்தளங்கள் வெளிநாடுகளை சேர்ந்தவையாக இருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை என அவர் கூறியுள்ளார். (அ-2)

# புதிய அணு மின்நிலையங்கள் அமைக்க அமெரிக்கா ஒப்புதல்

அமெரிக்காவில் 26 ஆண்டுகளுக்கு பின் முதன்முறையாக அந்நாட்டில் புதிய அணுமின் நிலையங்கள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அணுசக்தி ஒழுங்குமுறைகுழு வெளியிட்டுள்ள செய்தியில், அமெரிக்காவில் ஜோர்ஜியா நாட்டின் சதர்ன்கோ வொக்டைல் நிறுவனத்தின் தொழில் நுட்பத்துடன் இரண்டு அணு மின்நிலையம் தொடங்கப்படவுள்ளது. இதற்கான முறையான அனுமதி கடந்தாண்டு டிசெம்பர் மாதமே அணுசக்தி ஒழுங்குமுறை குழுவுக்கு அமெரிக்க அரசு வழங்கிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த 1986 ஆம் ஆண்டு அமெரிக்கா புதிய அணுமின் நிலையத்தை தொடங்கியது. அதன்பின்னர் எந்த அணுமின் நிலையமும் தொடங்கவில்லை.26 ஆண்டுகளுக்கு பின்னர் புதிய அணு மின்நிலையம் தொடங்க தற்போது பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது. ஆயினும் அந்நாட்டு அணுசக்தி ஒழுங்குமுறை குழு தலைவர் கிரிகோரி ஜாக்ஸேர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், புதிய அணு மின் நிலையத்திற்கு அமெரிக்கா உரிமம் வழங்கக்கூடாது. கடந்தாண்டு மார்ச் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி தாக்கியதால் புகுஷிமா அணு மின்நிலைய பாதிப்பினை உலகம் அறியும். அதுபோன்ற நிலைமை வரக்கூடாது என தான் கருதுவதாக கூறினார். (அ-2)

# நிகழ்வின் நிழல்கள்...



பாதுகாப்பு படைத்தரப்பினருக்கும் இந்திய தூதுவர்களுக்கும் இடையிலான சந்திக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இந்திய பிரதிநிதிகளையும் பாதுகாப்புபடை தலைமையகத்தின் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.





த பினான்ஸ் கம்பனி பி எல் சியின் யாழ்ப்பாணக்கிளை நேற்று மின்சார நிலைய வீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால் நாடா வெட்டி திறந்து வைத்து முதலாவது வைப்பினை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம்.




யாழ். நாவலர் மணிமண்டபத்தில் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் காட்டும் வாழ்வியல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த நாடக விற்பன்னர் அரசு மங்கல விளக்கேற்றுவதனையும் விருந்தினர்கள் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி என்பன அண்மையில் நடைபெற்றன. இதில் வெற்றியீட்டியோரைப் படங்களில் காணலாம்.



தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட சம்மேளனத்தினால் அண்மையில் திரட்டப்பட்ட கொடி-வார நிதியினை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபரிடம் கையளிக்கப்படுவதை படத்தில் காணலாம்.



அச்சுவேலி குழந்தையேசு பாலர் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது முன்பள்ளி சிறார்கள் அமர்ந்திருப்பதையும், அருட்சகோதரி மற்றும் ஆசிரியைகளையும் படத்தில் காணலாம்.



மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி வசந்தாதேவி வைகுந்தநாதனின் பிரியா விடை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனை படத்தில் காணலாம்.



சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களை மாணவர்கள் அழைத்து வருவதை படத்தில் காணலாம்.



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர், ஆசிரியைகள், மாணவர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

வயிற்றை மட்டும் நினைப்பவன் தலைமைப் பட்டினி போடுகின்றான்.

~ ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாண நகர அபிவிருத்தி நாசமாகும் இடம் காணீரோ!

நகர அபிவிருத்தி தொடர்பில் யாழ்ப்பாணத்தில் ஆலோசனைக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

நல்ல விடயம் எதற்கும் ஆலோசனைகள் அபிப்பிராயங்கள் தேவையானவை.

அதேநேரம் நகர அபிவிருத்திப் பணியில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுவது கட்டாயம்.

பல இலட்சம் ரூபாய் செலவில் திருநெல்வேலி சந்தைப்பகுதியில் மரக்கறிச் சந்தைக்காக அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடத்தை ஒருகணம் நினைத்துப் பாருங்கள்.

மரக்கறிச்சந்தையை மாடியில் நடத்தலாம் என்று யாரோ ஒரு மகா புருஷர் நினைத்திருக்கிறார்.

அவரின் அறிவை மீறி எவராலுமே கருத்துச் சொல் முடியவில்லைப் போலும்.

மரக்கறிச்சந்தையை மாடியில் நடத்துவது தொடர்பில்மக்களிடம் அபிப்பிராயம் கேட்டிருந்தால்,

ஐயா!, வயது போன நேரத்தில் எங்களால் மாடியேறி மரக்கறி வேண்ட முடியாது. சிறிது காலம் என்றாலும் இந்த மண்ணில் வாழ விரும்புகின்றோம் என்று வயது வந்தவர்கள் கூறியிருப்பர்.

சந்தையில் வியாபாரம் செய்பவர்களைக் கேட்டால், மரக்கறிச் சுமையை மாடிக்குத் தூக்கிச் செல்வது கடினமானதும் செலவுக்குரியதுமாகுமென்று யதார்த்தத்தை பகிர்ந்திருப்பர்.

திருமணச்சடங்கு உள்ளிட்ட தேவைகளுக்கான மரக்கறிகளை தொகையாகக் கொள்வனவு செய்வோர் ஐயா! சுமையை தூக்கிக்கொண்டு மாடிப்படியால் இறங்க நாரி முறிந்துவிடும் என்று நிலைமையை வெளிப்படுத்தியிருப்பர்.

என்ன செய்வது! 21ஆம் நூற்றாண்டில் இப்படியொரு சிந்தனை. நடக்கட்டும்.

எல்லாம் எங்களுக்குத் தெரியும் என்று நினைக்கின்ற பொறியியல் துறை சார்ந்தவர்களும் கொள்ளை இலாபம் ஈட்டும் நோக்கில் செயற்படுவோருமே யாழ்ப்பாண நகரத்தைப் பாழாக்கியவர்கள் என்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

முற்றவெளிப் பகுதியில் பஸ் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று வரைவு செய்தவருக்கு அங்குள்ள பள்ளத்தை நிரப்ப வேண்டும் என்ற அறிவு இல்லாமல் போயிற்று. இப்படித்தான் எல்லாமே.

யாழ்ப்பாணத்து பொறியியல் துறைசார்ந்தவர்கள் அநேகர் கட்டிடம் மற்றும் வீதியமைக்கும் ஒப்பந்தகாரராக செயற்படுகின்றனர்.

இவர்களிடம் நகர அபிவிருத்தி என்ற சமூக சிந்தனை இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவர்களிடம் நகர அபிவிருத்தியை விட, அந்த அபிவிருத்திக்குள்ளால் தங்கள் அபிவிருத்தியை எப்படி ஏற்படுத்தலாம் என்பதே நினைப்பு.

இந்த நினைப்பில் எப்படி நகரம் விருத்தியடையும்? ஒருவரிச் சலாகையை மிச்சம் பிடிப்பதற்காக கூரை ஓடுகளின் தலைமயிரில் முடிச்சுப் போடும் எங்கள் மன நிலையில், நகர அபிவிருத்தி என்று நினைக்கவே சிரிப்புத்தான் வருகிறது.

தேவையாயின் கட்டிடப் படங்களுடன் நிரூபிக்கவும் முடியும்.

# இலங்கையைப் போன்றே வெளிநாட்டிலும் பல்வேறு கஷ்டநிலைகள் உள்ளன!

## பிரதி அமைச்சர் முரளிதரன் ஆலோசனை



(கொழும்பு)

வெளிநாடுகளுக்குப் போவது என்பது ஒரு வீண்வேலை. அவற்றை எல்லாம் விடுத்து நம் நாட்டில் நன்றாக சுயதொழில்களை மேற்கொள்ளலாம். நம்மவர்கள் எதிலும் கௌரவம் பார்ப்பவர்களாகத்தான் உள்ளார்கள்.

வெளிநாட்டுக்குப் போயும் இங்கு கஷ்டப்படுவது போல்தான் அங்கேயும் பல கஷ்டங்களைப்படுகின்றனர் என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் இலங்கைக்கான தேசிய சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக சைக்கிள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

30 வருட காலம் சண்டை பிடித்தோம். அதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. அதனால் அந்த யுத்தத்தினை நான்தான் நிறுத்தினேன். இல்லையேல் தற்போது பச்சை ரீசேர்ட் போட்டுள்ளவர்கள் இன்னமொரு பச்சை ரவுசரை போட்டுக்கொண்டு ஆளுக்கொரு துப்பாக்கியோடு நின்றிருப்போம்.

இது எல்லாவற்றையும் பார்த்துவிட்டு இந்த யுத்தம் வேண்டாம் என்று நானே கூறினேன்.

தற்போது இருக்கின்ற பாரிய பிரச்சினை என்னவென்றால் வேலை வாய்ப்பு பிரச்சினையாகும் வடகிழக்கில் 8 ஆயிரம் பட்டதாரிகள் உள்ளனர். இதனைவிட க.பொ.த. சாதாரண, உயர்தரம் படித்தவர் கள் அநேகம் பேர் வேலையில்லாமல் உள்ளனர்.

இவைகள் அனைத்தும் கடந்த 30 வருடகால யுத்தம் தந்த சுமையாகும். கடந்த யுத்தத்தில் பல பெறுமதியான உயிர் இழப்பு, சொத்திழப்பு, எத்தனையோ பிள்ளைகள் தந்தை தாய் இல்லாமல் தவிக்கின்றனர்.

இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்றெல்லாம் பாரிய பிரச்சினைகளையே எமது மக்கள் எதிர்நோக்குகின்றார்கள்.

நம்மவர்கள் எதிலும் கௌரவம் பார்ப்பவர்களாகத்தான் உள்ளார்கள். வெளிநாட்டுக்குப் போயும் இங்கு கஷ்டப்படுவதுபோல் தான் அங்கேயும் பல கஷ்டங்களை படுகின்றார்கள். வெளிநாடுகளுக்குப் போவது என்பது ஒரு வீண்வேலை இவற்றையெல்லாம் விடுத்து நம்நாட்டில் நன்றாக சுயதொழில்களை மேற்கொள்ளலாம்.

நமக்கு என்று ஓர் அரசியல் அதிகாரம் உள்ளது. அதற்காக காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் நமக்கு எதற்குத் தேவை. நம் மக்களுக்கு அபிவிருத்திதான்.

நீங்கள் யோசிப்பீர்கள் என்னடா அம்மான் காணி பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை என்று அறிக்கை விடுகிறார் என்று.

அது கிடைக்கப்போவதுமில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எல்லாம் தற்போது கத்துவார்கள். இதனால் எந்தவித பயனும் இல்லை.

காணி என்றால் அது உரிய பிரதேச செயலாளருக்குத்தான் சொந்தம். நமது தமிழ் பிரதேசத்தில் தமிழ் பிரதேச செயலாளர்கள் தான் உள்ளார்கள். அவரிடம் கூறினால் அவர் யாருக்கும் காணியை கொடுக்க மாட்டார் என்றார். (எ-11)

## விசேட அதிரடிப் படையினருக்கு நாடு தழுவிய இடமாற்றம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு நாடு தழுவிய ரீதியில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் உயரதிகாரிகளும் ஏனைய கடை உத்தியோகத்தர்களும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

எட்டு ஆண்டுகள் சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இந்த இடமாற்ற உத்தரவு அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரினால் கட்டுப்படுத்த முடியாத குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட அதிரடிப்படையினர் மாவட்ட ரீதியில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ-2)

## போதைப்பொருள் உட்கொண்ட நிலையில் சென்ற 35 பேர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் ஒயாமடுவையில் நடைபெறும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தினுள் போதைப்பொருள் உட்கொண்ட நிலையில் சென்ற 35 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று தெரிவித்தனர்.

கண்காட்சி கூட வளாகத்தினுள் போதையில் செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இவர்கள் 35 பேரும் மதுபானம் கஞ்சா அபின் உட்பட்ட போதைப் பொருட்களை உட்கொண்ட நிலையில் சென்ற போது கண்காட்சி வளாகத்தினுள் இயங்கி வரும் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகள் மூலம் கைது செய்யப்பட்டு ஒயாமடுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின் இவர்கள் 35 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக ஒயாமடுவ பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## சட்டவிரோத மின்பாவனை 7 பேர் நேற்று சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மின்சாரசபையினரின் அதிரடிச் சோதனையில்சட்டவிரோதமின்பாவனையாளர் 7 பேர் சிக்கினர். இச் சட்டவிரோத மின்பாவனையாளர் 7 பேரும் யாழ்நகரை அண்டியபகுதிகளிலேயேபிடிபட்டுள்ளார்.

இவர்கள் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ஏழு பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம்70 ஆயிரம் அபராதமும் மின்சார சபைக்கு நட்ட ஈடாக எழுவரும்78 ஆயிரத்து 322 ரூபாயையும் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (எ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கொடுப்பவனாக இருங்கள்



பக்தி, தியானம்,ஒழுக்கம் மூன்றாலும் ஒருவன் தெய்வீக ஞானத்தை அடைய முடியும்.வாய்மை என்னும் அடித்தளத்தின் மீது இப்பண்புகள் அமையும் போது கடவுளை ஒருவன் உறுதியாக அடைந்து விடுவான்.


உலக வாழ்வு நிரந்தரமானது என்னும் அறியாமை அகன்று விட்டால் பாவம் விலகிவிடும். பாவம் நீங்கினால் ஆசை,சுயநலம் மற்றும் அனைத்து துயரங்களும் நம்மை விட்டு காணாமல் போகும்.

எப்போதும் கொடுப்பவனாக இருக்கப் பழகுங்கள்.அன்பு,உதவி, நல்லெண்ணம், கருணை இவற்றைப் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள்.பதிலுக்கு பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராதீர்கள்.இறைவன் எப்படி வாரி வழங்குகிறானோ அதுபோல நீங்களும் கொடுத்து வாழுங்கள்.

மனித வாழ்வில் கடமைகள் துரத்துவதும்,வருத்துவதும் உண்மையே.வாழ்வில் சுகங்களும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை.ஏற்ற குறிக்கோளை மறக்காமல் இருளிலும் ஞான ஒளியை ஏந்திக் கொண்டு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் வந்தே தீரும்.

# எனது பிறந்த நாளின் போது ஏழைகளுக்கு உதவுங்கள்

## 'ஜெ' வேண்டுகோள்



எனது பிறந்தநாளின் போது ஆடம்பர நிகழ்ச்சிகளை நடத்த வேண்டாம் என்று அ.தி.மு.கவினருக்கு அக்கட்சியின் பொதுச் செயலரான முதல்வர் ஜெயலலிதா வேணடுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர்வெளியிட்ட அறிக்கையில்,

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தவரை அவர் தன்னுடைய பிறந்த நாளை ஒருபோதும் கொண்டாடியது கிடையாது. அன்றைய தினம் யாரையும் அவர் சந்திக்கவும் மாட்டார்.

அ.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளராக நான் நியமிக்கப்பட்ட பின்னர் தான் எம்.ஜி.ஆரிடம் அனுமதி பெற்று அவரது பிறந்த நாள் பொதுக்கூட்டங்களை நடத்தும் வழக்கத்தை முதன் முதலாகத் தொடங்கினேன். அப்போதும் கூட அந்த பிறந்த நாள் கொண்டாட்டங்களில் எம்.ஜி.ஆர். ஒரு பேர்தும் கலந்து கொண்டது கிடையாது. அதுபோலவே நானும் அவர் நடந்த பாதையில் அவரின் பாதச் சுவட்டில் பயணிப்பதிலேயே எல்லையில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். எனவே, என்னுடைய பிறந்த நாளன்று யாரும் என்னை சந்திக்க முயற்சி செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதேவேளையில் எனது பிறந்த நாளையொட்டி ஆடம்பர விழாக்களைத் தவிர்த்து அவரவர் சக்திக்கேற்ப ஏழை, எளிய மக்களுக்கு இயன்ற உதவிகளை செய்தால் அந்நிகழ்வுகள் பயன்பெறுவோரையும் மகிழ்விக்கும்.

இதற்கு மாறாக யாரேனும் பிரம்மாண்ட விழாக்களையோ அவசியமற்ற ஆடம்பரத்தையோ கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தினால் அது என்னை வருத்தப்படுத்துமே தவிர ஒருபோதும் திருப்திப்படுத்தாது என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மதுபானம் விற்பனை செய்த 17 இந்தியர்களுக்கு சிறை

(சென்னை)

சட்டத்திற்கு புறம்பாக மது விற்பனை செய்த குற்றத்திற்காக 17 இந்தியர்கள் டுபாயில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வாக்குவாதத்தில் பாகிஸ்தானியர் ஒருவரை கொன்றதாகவும் அவர்கள் மேல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதற்காக அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# தமிழனுக்கு தன்மதிப்பு தெரியவில்லை

## காங்கிரஸின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

(திருச்சி)

தன்மதிப்பு தெரியாமல் வாழ்கின்றான் தமிழன் என மாநில காங்கிரஸ் முன்னாள் தலைவர் குமரி அனந்தன் தெரிவித்துள்ளார். திருச்சி தேசியக் கல்லூரியில் முத்தமிழ் விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வினை தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியதாவது,

பிச்சைக்காரன் ஒருவன் இறந்துபோனான். அவன் நின்று கொண்டிருந்த இடத்தில் வைரப் புதையல் கிடைத்தது. அதுபோலத்தான் தமிழன் தன்னுடைய மதிப்பு என்ன என்று தெரியாமல் தன்னுடைய மொழியின் மதிப்பு தெரியாமல் இருந்து கொண்டிருக்கின்றான். வெளிநாட்டினர் யாரேனும் சொன்னால்தான் தெரிகிறது.

நாடு சுதந்திர சுவாசம் பெற வேண்டும் என்பதற்காக தங்களின் சுவாசத்தை தந்தவர்களை மறந்துவிட்டோம். வரலாற்றில் தியாகம் வீணாகக் கூடாது.

உயிர் எழுத்து, மெய் எழுத்து ஆகியவை உலகிலுள்ள 6050 மொழிகளில் தமிழைத் தவிர வேறெந்த மொழிகளிலும் இல்லை. உலகின் சிறந்த மொழிகளாகக் கருதப்படும் 17 மொழிகளில் தமிழும் ஒன்று.

தமிழுக்கு மட்டும்தான் 103 அடைமொழிகள் உள்ளன. இயல் தமிழ் இயல்பாக வரக் கூடியது. இசைத் தமிழில் தாலாட்டையே மறந்து விட்டோம். கடந்த 60 ஆண்டுகளாக திரைப்படம் தமிழகத்தைச் சூழ்ந்து இருக்கின்றது.

அம்மாவை மம்மி என்கிறோம். மம்மி என்றால் எகிப்தில் இறந்தவர்களை பாடம் செய்து வைத்திருக்கும் முறை. பெற்றவளை செத்தவளாக அழைத்து வருகின்றோம் என்றார். (அ-2)

# பேருந்து கவிழ்ந்து முப்பது பேர் காயம்



உத்தரப் பிரதேச மாநிலம் பலாந்த்ஷரில் உள்ள குலவாடி பகுதி அருகே திரு மணத்தில் கலந்து கொள்ள ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்து ஒன்று வந்து கொண்டிருந்தது. சாரதி மது குடித்துவிட்டு பேருந்தை ஓட்டியதால் பேருந்து தலை கீழாக கவிழ்ந்தது. இதில் 30 பேர் காயம டைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ-2)

# கூடங்குளம் அணு மின் நிலையத்தை திறக்கக் கோரி இரதயாத்திரை

(சென்னை)

கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் மாநாட்டுக்கு எதிராக சென்னையில் எதிர்வரும் 26 ஆம் திகதி தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஆதரவு மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது.


அனைத்திந்திய காங்கிரஸ் தொழிலாளர் முன்னணி கூடங்குளம் அணுமின் நிலைய ஆதரவு மக்கள் இயக்க தலைவர் டி.கே. சத்யசீலன் மற்றும் நிர்வாகிகள். கோட்டையின் தலைமை செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கியை நேற்று முன்தினம் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர்.

பின்னர் நிருபர்களுக்கு அவர் பேட்டியளிக்கையில்,

கூடங்குளம் அணு உலையை திறக்காமல் மத்திய மாநில அரசுகள் நாடகம் ஆடுவதை வன்மையாக கண்டிக்கின்றோம். உடனடியாக மத்திய மாநில அரசுகள் அணு உலையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அணு உலையை திறக்க வலியுறுத்தி இன்று சென்னையில் இருந்து 5 நாட்கள் ரதயாத்திரை மேற்கொள்ள உள்ளோம். இந்த ரத யாத்திரை 18 மாவட்டங்களை கடந்து நாகர்கோவிலில் நிறைவு பெறும்.

அணுஉலை எதிர்ப்பாளர்கள் நடத்தும் மாநாட்டுக்கு எதிராக சென்னையில் மெமோரியல் ஹோல் அருகில் எதிர்வரும் 26 ஆம் திகதி தீப்பந்தம் ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். கத்தோலிக்க பாதிரியார்கள் சிலர் திருப்பலியின் போது அணு உலைக்கு எதிராக் பிரசாரம் செய்கின்றனர். அணு உலை எதிர்ப்பாளர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய வேண்டும். தமிழக அரசு அமைக்கும் குழுவில் கூடங்குளம் ஆதரவு இயக்க பிரதி நிதிகளையும் சேர்க்க வேண்டும் என அவர் கூறினார். (அ-2)




புதுடில்லியில் நடைபெற்ற தாகூரைப் பற்றிய ரொமான்சிங் தாகூர் என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார் பிரதமர் மன்மோகன் சிங்.

# இடைமறித்து தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றி

(புவனேஸ்வரி)



எதிரி விமானங்களை வழியிலேயே இடைமறித்து தாக்கும் ஏவுகணை சோதனையை இந்தியா நேற்று வெற்றிகரமாக நடத்தியது. ஒடிசாவின் பாதுகாப்பு தளத்தில் இருந்து இந்த சோதனை நடத்தப்பட்டது.

ஒடிசாவின் வீலர் தீவில் இடைமறித்து தாக்கும் ஏவுகணை ஏவடி விண்ணில் செலுத்தப்பட்டது. அது பலாசூர் மாவட்டத்தில் சண்டிப்பூர் ஒருங்கிணைந்த சோதனை சரகத்தில் இருந்து ஏவப்பட்ட பிருத்வி ஏவுகணையை வழியிலே தாக்கி அழித்தது.

இடைமறித்து தாக்கும் ஏவுகணை தனது இலக்கை நேரடியாக தாக்கி அழித்ததாக ஒருங்கிணைந்த பரிசோதனை சரகத்தின் இயக்குநர் எஸ்.பி.தாஸ் தெரிவித்துள்ளார்.

முதலில் இலக்கு ஏவுகணையும், அடுத்த சில விநாடிகளில் தாக்கி அழிக்கும் ஏவுகணையும் விண்ணில் செலுத்தி பரிசோதிக்கப்பட்டன என்றார் அவர். (அ-2)

# போராடித் தோற்றது இலங்கை

கொமன் வெல்த் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் நேற்றைய மூன்றாவது போட்டியில் அவுஸ்ரேலியா அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 231 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை, அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் பங்குபற்றும் கொமன்வெல்த் முத்தரப்பு ஒருநாள் போட்டி அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

நேற்று இலங்கை-அவுஸ்ரேலியா அணிகள் மோதும் மூன்றாவது போட்டி பேர்த் நகரில் ஆரம் பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

ஏற்கெனவே இந்தியாவை வென்ற உற்சாகத்துடன் களமிறங்கிய அவுஸ்ரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அவுஸ்ரேலியாவின் அதிரடி ஆட்டக்காரர் டேவிட் வோர்னர் தனது அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார்.

ஆனால் மறுபுறம் அவுஸ்ரேலியாவின் விக்கெட்டுகள் விழத்தான் செய்தன. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மத்தியூ வைட் ஒரு ஓட்டத்துடன் குலசேகரவின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த அவுஸ்ரேலியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரர் ரிக்கி பொன்டிங், மலிங்காவின் பந்து வீச்சில் ஒரு ஓட்டத்துடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார்.



பின்னர் ஜோடி சேர்ந்த அவுஸ்ரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க்கும் டேவிட் வோர்னரும் அவுஸ்ரேலியாவின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்கள்.

அவர்களது இணைப்பாட்டத்தை மத்தியூஸ் பிரித்தார். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய டேவிட் வோர்னர் 34 ஓட்டங்களுடன் மத்தியூஸ் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

பின்னர் ஜோடி சேர்ந்த அனுபவ வீரர்களான மைக்கல் ஹசியும் அணித்தலைவர் கிளார்க்கும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்கள். கிளார்க் தனது 50ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

மறுபுறம் மைக்கல் ஹசி23 ஓட்டங்களுடன் குலசேகரவின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த டேவிட் ஹசியும் கிளார்க்கும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தாலும் அவுஸ்திரேலிய விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் வீழ்ந்த வண்ணமே இருந்தன.

அவுஸ்ரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 57 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 27 ஓட்டங்களையும் கிறிஸ்ரியன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் அவுஸ்ரேலியா அணி 49.1 ஓவர்கள் முடிவில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.




இலங்கை அணிசார்பாக மலிங்க, குலசேகர, மத்தியூஸ், பிரசாத், சேனநாயக்க தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள்.

232 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

தரங்க 5 ஓட்டங் ளுடன் ஸ்ரார்ஸ் பந்தில் கிளார்க்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின் ஜோடி சேர்ந்த உலகின் முதல் நிலை ஆட்டக்காரரான சங்கக்காரவும் இலங்கையின் முன்னாள் அணித்தலைவர் டில்சானும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். சங்ககரா 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பின் ஜோடி சேர்ந்த இளம் வீரர் சன்டி மலும், டில்சானும் சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை ரசிகர்களின் மத்தியில் நம்பிக்கையை அதிகரித்தனர்.



ஆனால் டில்சான் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் வந்த அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் 13 ஓட்டத்துடனும் சண்டிமல் 37 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இலங்கை அணியின் உப தலைவர் மத்தியூஸ் மட்டும் கடைசி வரை வெற்றிக்காக போராடி 64 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த வீரர்கள் சோபிக்காத நிலையில் இலங்கை அணி போராடி தோல்வியை தழுவியது.

அவுஸ்ரேலிய அணி சார்பாக ஸ்ரார்ஸ், கிறிஸ்ரியன், டோகட்டி தலா 2 விக்கெட்டுக்களையும் கீஸ், மக்காய், கிளார்க், தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்ரேலியா அணியின் வெற்றிக்கு வித்திட்ட அவுஸ்ரேலியா அணித்தலைவர் மைக்கல் கிளார்க் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

# புதிய தேர்தல் கோருகிறார் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி



மாலைதீவுகளில் அதிபர் பதவியில் இருந்துமொஹமட் நஷீத் விலகி 4 நாட்கள் ஆகியுள்ள நிலையில், அந்நாட்டில் புதிதாக அதிபர் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

நேற்று தொழுகைக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்களின் உற்சாக வரவேற்புக்கும் ஆரவாரத்திற்கும் இடையில் தோன்றிய முன்னாள் அதிபர் நஷீத், ஒரு இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் தான் பதவி அகற்றப்பட்டுவிட்டதாகவும் இந்த அரசாங்கத்துக்கு மீண்டும் தலைமையேற்பதை தான் இனி விரும்பவில்லை என்றும் கூறினார்.

தனக்கு பின்னர் அதிபர் பொறுப்பை ஏற்றுள்ள மொஹமட் வாஹித் ஹசன் புதிய தேர்தல்கள் நடத்தப்படும் வரை நிர்வாக அதிகாரத்தை நாடாளுமன்ற அவைத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் நஷீத் வலியுறுத்தியுள்ளார்.

மாலைதீவுகளில் எழுந்துள்ள அரசியல் சிக்கலை தீர்ப்பதற்காக ஐ.நா. சிறப்புத் தூதர் ஒருவர் அந்நாட்டுக்கு சென்றுள்ளார்.

இதனிடையே முன்னாள் அதிபர் நஷீத்தின் குற்றச்சாட்டை தற்போது அதிபர் பதவி ஏற்றுள்ள முன்னாள் துணை அதிபர் மொஹமட் வாஹித் ஹசன் நிராகரித்துள்ளார்.

இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் தான் பதவி நீக்கப்பட்டதாக நஷீத் கூறுவது அடிப்படையற்றது. தான் செய்யச் சொன்ன சட்ட விரோத காரியங்களை நாட்டின் இராணுவமும் பொலிஸும் செய்ய மறுத்ததை உணர்ந்து நஷீத் தானாகவேதான் பதவி விலகினார் என்றும் ஹசன் தெரிவித்துள்ளார்.

உடனடியாக அதிபர் தேர்தல் நடத்துவதற்குரிய சட்ட ஒழுங்கு சூழ்நிலை நாட்டில் இல்லை என்றும் அதனை நிலை நாட்டுவதே தனது முதல் கடமை என்றும் பிபிசிக்கு வழங்கிய செவ்வியில் அதிபர் ஹசன் கூறினார். (எ-11)

## அமெரிக்கா...

கைது செய்யப்படுவோர் அனைவரும் மெய்யான குற்றவாளிகள் கிடையாது என அரசாங்க உள்ளக தகவல்கள் குறிப்பிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்ட சிலர் கடத்தல் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதாக பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டார் என அந்தக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடத்தல் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படுவதாக சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் மிகுந்த கரிசனை கொண்டிருந்ததாக பிரசாத் சமரசிங்க தெரிவித்தார் என விக்கி லீக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# புலிச் சந்தேக நபர் ஒருவரை பயங்கரவாத தடைப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர் ஒருவரை பயங்கரவாதத் தடைப் பிரிவிற்கு மாற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கவேல் நிமலன் என்ற விடுதலைப் புலிச் சந்தேக நபரையே இவ்வாறு பயங்கரவாத தடைப் பிரிவிடம் ஒப்படைக்குமாறு நீதவான் அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடுமென்ற காரணத்தினால் இவ்வாறு பயங்கரவாத தடைப் பிரிவிற்கு மாற்றுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் சுனில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நீதவான் இந்த உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

சந்தேக நபரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (எ-11)

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிப் போராளிகளுக்கு எதிராக போரை முடிவுக்கு கொண்டு வர மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது இலங்கை இராணுவத்தினரால் இழைக்கப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக இலங்கையைக் கூற வைப்பதற்கு அனைத்துலக சமூகம் நடவடிக்கை எடுப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வருவதற்கு தீர்மானம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. இந்நிலையில் சிறுபான்மை தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு பாகிஸ்தான் குறுக்கே நிற்கக் கூடாது.

ஐ.நா. மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் ஐந்து மாதங்களில் மட்டும் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகமாக இருக்கக்கூடும் என்று பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று ஜனாதிபதி மகிந்த பாகிஸ்தானிற்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் உள்நாட்டு போரில் உயிர் பிழைத்தோர் இறப்புக்களை இன்னும் கணக்கெடுக்கிறார்கள் என்ற தலைப்பிலான நூல் ஒன்றை பிரான்சிஸ் ஹரிசன் இந்த கோடைகாலத்தில் லண்டனில் வெளியிடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அமெரிக்க பிர...

வாகனத்திலிருந்துசாரதியைவெளியே இழுத்து சந்தேக நபரான பஸ் சாரதி தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இம் மோதலை நிறுத்த முயன்ற அமெரிக்கப் பிரஜையையும் சந்தேக நபர் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ், பஸ் சாரதியை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அமெரிக்கப் பிரஜையிடமிருந்து அவர்கள் வாக்குமூலத்தையும் பெற்றுள்ளனர். (எ-11)

## வாடகைக்கு...

ஆலயத்திற்கு முன்னால் சென்றதும் மற்றொரு நபர் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கியுள்ளார்.

பின்னர் வேகமாகச் சேர்ந்து ஆட்டோ சாரதியை தாக்கியதோடு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி, 25 ஆயிரம் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி என்பவற்றை பறித்ததோடு ஆட்டோவினையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர், உடனடியாக மானிப்பாய்பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன் நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை நேற்று மாலை யாழ்.பெருமாள் கோவிலுக்கு அண்மையில் ஆட்டோ அநாதரவாக நின்ற நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)


## இன்னர் சிற்றி...

குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தனக்கு எதிராக தனிப்பட்ட முறையில் குற்றசாட்டுக்களும் சுமத்தப்படவில்லை எனவும் இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர் மத்யூ ரசல்லிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்ட அந்த படைப் பிரிவுக்கு தலைமை தாங்கியவர் என இன்னர் சிற்றி பிரஸ் சுட்டிக் காட்டியுள்ளது. (எ-11)

# மரண அறிவித்தல்

## குப்புசாமி ஞானசேகரம்



(ஓய்வுபெற்ற உதவிக் காணி ஆணையாளர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சந்திரவளவு துன்னாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குப்புசாமி ஞானசேகரம் நேற்று (2012.02.10) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குப்புசாமி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லை[illegible] மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமியின் பாசமிகு கணவரும் ஞானகி ( நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கிராம அபிவிருத்தித் திணைக்களம் பிரதேச செயலகம், தெல்லிப்பளை), ஞானரூபி (முன்னாள் எழுதுவினைஞர் பிரதேசசபை, கரவெட்டி), ஞானோதயன் (மக்கள் வங்கி முகாமையாளர், பளை), ஞானதயாளன் (ஆசிரியர், கிளி/ பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் I.சங்கர் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் கணக்காய்வுத் திணைக்களம், யாழ்ப்பாணம்) சிவசங்கர் (பொறியியலாளர், லண்டன்), துவாரகா, கவிதா (ஆசிரியை, யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் கபிஷன், லதுஷன், மோஷயன், கேஷயன், நக்ஷனா, நக்ஷயன் பவித்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2012.02.12 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூத[illegible]ல் நண்பகல் 12 மணியளவில் பிட்டிதூவு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரவளவு
துன்னாலை தெற்கு.
கரவெட்டி.

தகவல்: மனைவி
பிள்ளைகள்.
(ஞானோதயன்,ஞானதயாளன்)

(சி-5829)


அவுஸ்திரேலியா குடும்ப விசா
அரிய வாய்ப்பொன்று இன்னும் 15 தினங்களில் கைநழுவப் போகின்றது

இதுவரை....
- 89 குடும்பங்கள் விசா ஆலோசனை செயற்திட்டத்திற்காக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளன.
- 5 குடும்பங்கள் எமது ஆலோசனையின் பயனாக குடிபெயர்ந்துள்ளன.
- அவுஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனையின் இறுதி நாள் 25.02.2012

எல்லா விபரங்களையும் அலுவலக நேரங்களில் இலங்கையிலும், அவுஸ்திரேலியக் கிளைகளிலும் பார்வையிடலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிடெட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

www.thisaikaddi.lk
thisaikaddi@sltnet.lk

கிளைகள்
115 ஏ, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0214914527

மெல்போர்ண்
அவுஸ்திரேலியா 0061412479209
இலங்கை நேரப்படி காலை 6 மணி தொடக்கம் பிப 4 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

(7474)



உள்நாடு வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை விஸ்தரிக்கும் முகமாக DHL யாழ்.குடாநாட்டுகளில் நம்பமுடியாத கட்டணங்கள் இப்பொழுது வழங்கப்படுகின்றது...

உள்நாட்டுக்கான தபால்கள், பொதிகள் சேவையினை 24 மணிநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

DHL வடமாகாணத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்

5 கிலோவிற்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு
அதிரடி விசேட சலுகை...!
கனடா - 1 kg - 500/= சுவிஸ் - 1 kg - 400/=

திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05,திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 2 தொ.பே.:021 222 7835




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.